




# இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்

மதுரை / ராமநாதபுரம் பதிப்பு • வியாழன், செப்டம்பர் 2, 2021

R.Dis.No.521/18 Vol.4 No.244

https://www.hindutamil.in

• அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி •

• 10 பக்கங்கள் ₹ 7







## நாட்டில் கரோனா 3-வது அலை தொடக்கமா?

# ஒரேநாளில் 1.33 கோடி பேருக்கு தடுப்பூசி

● கேரளாவில் ஊரடங்கு அமல்படுத்த மத்திய சுகாதார அமைச்சகம் அறிவுரை



▲ மகாராஷ்டிர மாநிலம் மேற்கு மும்பை அந்தேரியில் உள்ள ஷஹாஜி ராஜே விளையாட்டு மைதானத்தில் கரோனா தடுப்பூசி முகாம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு பொதுமக்களுக்கு சுகாதாரத் துறை ஊழியர்கள் நேற்று கரோனா தடுப்பூசி போட்டனர். படம்: பிடிஐ

■ புதுடெல்லி

நாட்டில் ஒரேநாளில் 1.33 கோடி பேருக்கு தடுப்பூசி போட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் சில மாநிலங்களில் தொற்று அதிகரித்து வருவது 3-வது அலைக்கான அறிகுறியாக இருப்பதாக ஐசிஎம்ஆர் தெரிவித்துள்ளது.

கேரளாவில் அதிகரித்து வரும் தொற்றை கட்டுப்படுத்த ஊரடங்கு அமல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு அறிவுரை வழங்கி உள்ளது.

இதுகுறித்து மத்திய சுகாதார அமைச்சகம் நேற்று காலை வெளியிட்ட புள்ளிவிவரத்தில் கூறியிருப்பதாவது:

கரோனா தொற்றின் 2-வது அலை கடந்த மாத தொடக்கத்தில் குறைந்தது. தினசரி கரோனா தொற்று 25 ஆயிரத்துக்கு கீழ் இருந்தது. ஆனால், கடந்த 10 நாட்களாக தொற்று மீண்டும் அதிகரித்து வருகிறது. தினசரி தொற்றால் பாதிக்கப்படுபவர்களில் கேரளாவில் அதிகமாக உள்ளனர். இந்நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் நாடு முழுவதும் 41,965 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 கோடியே 28 லட்சத்து 10,845 ஆக உயர்ந்துள்ளது. மேலும், ஒரே நாளில் 460 பேர் உயிரிழந்துள்ளனர். நாடு முழுவதும் கரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 லட்சத்து 39,020 ஆக அதிகரித்துள்ளது.

தொற்று பரவலைத் தடுக்க கடந்த ஜனவரி 16-ம் தேதி முதல் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. தடுப்பூசி போடுவது தொடர்பான விழிப்புணர்வும் பரவலாக ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, ஏற்கெனவே ஒரே நாளில் ஒரு கோடி பேருக்கு தடுப்பூசி போட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை ஒரே நாளில் 1.33 கோடி பேருக்கு தடுப்பூசி போட்டு புதிய மைல் கல் எட்டப்பட்டுள்ளது. இதுவரை நாடு முழுவதும் 65.41 கோடி பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

நாட்டில் கரோனாவுக்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 3 லட்சத்து 78,181 ஆக உள்ளது. குணமடைவோரின் சதவீதம் 97.51 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 52 கோடியே 31 லட்சத்து 84,293 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

### கேரளாவுக்கு வேறு வழியில்லை

கேரளாவில் கடந்த கடந்த ஜூலை மாதம் தினசரி சராசரி தொற்று 13,500 ஆக இருந்தது. அது ஆகஸ்டில் 19,500 ஆக உயர்ந்தது. எனவே, கேரளாவில் ஊரடங்கு மற்றும் கட்டுப்பாடுகள் விதித்தால்தான், செப்டம்பர் 3-வது வாரத்துக்குள் தொற்று குறையும். இதைத் தவிர தொற்றை குறைப்பதற்கு வேறு வழியில்லை. விழாக் காலம் என்பதால் தற்போது கூட்டம் கூடுவதை தவிர்த்து, இரவு நேர ஊரடங்கையும் கேரள அரசு அமல்படுத்த வேண்டும்.

இவ்வாறு மத்திய சுகாதாரத் துறை வெளியிட்ட புள்ளிவிவரத்தில் கூறப்பட்டுள்ளது.

### 3-வது அலை தொடக்கம்?

இதனிடையே, நாட்டில் சில மாநிலங்களில் கரோனா மீண்டும் அதிகரித்து வருவது, 3-வது அலைக்கான தொடக்கமாக தெரிகிறது என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ஐசிஎம்ஆர்) தெரிவித்துள்ளது.

இதுபற்றி ஐசிஎம்ஆர் தொற்று நோய் பிரிவின் தலைவர் டாக்டர் சமீரன் பாண்டா வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கரோனா வைரஸ் 2-வது அலை பரவலின்போது, அதிகம் பாதிக்கப்படாத மாநிலங்களில் தற்போது வைரஸ் தொற்று அதிகரித்து வருகிறது. இது கரோனா 3-வது அலையின் தொடக்கத்துக்கான அறிகுறியாக இருக்கிறது. அதே நேரத்தில் இதை நாடு முழுவதுக்குமானதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில், எல்லா மாநிலங்களிலும் தொற்று ஒரே மாதிரியாக இல்லை. சில மாநிலங்களில் மட்டும் கரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வருகிறது.

டெல்லி, மகாராஷ்டிராவிடம் இருந்து பாடம் கற்றுக் கொண்டதால், பல மாநிலங்களில் மீண்டும் 'கோவிட்-19' கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதேநேரத்தில் தடுப்பூசிகளும் அதிக எண்ணிக்கையில் போடப்பட்டு வருகிறது. இதனால் கரோனா 2-வது அலை பல மாநிலங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

ஒவ்வொரு மாநிலமும் கரோனா வைரஸால் எத்தனை பேர் பாதிக்கப்படுகின்றனர் என்பதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். முதல் அலை மற்றும் 2-வது அலையின் தாக்கத்துக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பல மாநிலங்களில் பள்ளிகள் திறக்கப்பட்டதால் பீதியடையத் தேவையில்லை. பள்ளிகள் திறப்பது பாதுகாப்பானதா, இல்லையா என்று அதிர்ச்சி அடையாமல் ஆசிரியர்கள், பெற்றோர், ஊழியர்கள், வேன், பேருந்து ஓட்டுநர்கள், நடத்துநர்கள் என அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்.

'கோவிட்-19' தடுப்புக்கான நடத்தை விதிகளை கட்டாயமாக அமல்படுத்த வேண்டும். கரோனா 2-வது அலையால் அதிகம் பாதிக்கப்பட்ட மாநிலங்களில் பள்ளிகளை திறக்கலாம். அதே நேரத்தில் 2-வது அலையில் அதிகம் பாதிக்கப்படாத மாநிலங்களில் படிப்படியாகவும், மிகுந்த எச்சரிக்கையுடனும் பள்ளிகளை திறக்கலாம்.

இவ்வாறு டாக்டர் சமீரன் பாண்டா கூறியுள்ளார்.



## வீட்டு உபயோகத்துக்கான

# சமையல் எரிவாயு சிலிண்டர் விலை மீண்டும் ரூ.25 உயர்வு

● 10 மாதங்களில் ரூ.290 அதிகரிப்பு

■ சென்னை

வீட்டு உபயோகத்துக்கான சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ.25-ம், வர்த்தக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை ரூ.75-ம் உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 10 மாதங்களில் சமையல் சிலிண்டர் விலை ரூ.290 அதிகரித்துள்ளது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை, அமெரிக்க டாலருக்கு நிகராக இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றை கணக்கில்கொண்டு, எண்ணெய் நிறுவனங்கள் சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை மாதந்தோறும் மாற்றி அமைத்து வருகின்றன. கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்துக்கான வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.50 உயர்த்தப்பட்டு, ரூ.610-ல் இருந்து ரூ.660 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இந்த ஆண்டு பிப்ரவரியில் இருந்து எரிவாயு சிலிண்டர் விலை தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகிறது. பிப்ரவரியில் 3 முறை விலை உயர்த்தப்பட்டது. அந்த மாதம் 4-ம் தேதி ரூ.25, 15-ம் தேதி ரூ.50, 25-ம் தேதி மறுபடியும் ரூ.25 உயர்த்தப்பட்டது.

அடுத்து, மார்ச் 1-ம் தேதி ரூ.25 உயர்த்தப்பட்டது. இதன்படி, ஒரு மாதத்துக்குள் சிலிண்டர் விலை ரூ.125 அதிகரிக்கப்பட்டது. ஏப்ரல் 1-ம் தேதி சிலிண்டர் விலை ரூ.10 குறைக்கப்பட்டது. ஆனால், மீண்டும் கடந்த மாதம் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.25 உயர்த்தப்பட்டது.

இந்நிலையில், சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை எண்ணெய் நிறுவனங்கள் மீண்டும் உயர்த்தி உள்ளன இதன்படி, சென்னையில் கடந்த மாதம் ரூ.875.50-க்கு விற்கப்பட்ட வீட்டு உபயோகத்துக்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை, ரூ.25 அதிகரித்து, ரூ.900.50 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த 10 மாதங்களில் மட்டும் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.290 உயர்ந்துள்ளது.

இதேபோல், வணிகரீதியான எரிவாயு சிலிண்டரின் விலையும் ரூ.75 உயர்ந்து ரூ.1,831 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அதிகரித்து வரும் இந்த விலை உயர்வால், பொதுமக்கள் மிகுந்த கவலை அடைந்துள்ளனர்.

இதனிடையே பெட்ரோல், டீசல் விலையை எண்ணெய் நிறுவனங்கள் குறைத்துள்ளன. இதன்படி, சென்னையில் நேற்று பெட்ரோல் ஒரு லிட்டருக்கு 12 பைசா குறைந்து ரூ.99.08-க்கும், டீசல் லிட்டருக்கு 14 பைசா குறைந்து ரூ.93.38-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# பொறியியல் கலந்தாய்வு செப்.17-ல் தொடக்கம்

● அரசு பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு பிரிவில் சேர்க்கை

■ சென்னை

பொறியியல் படிப்பில் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு, செப்.17-ம் தேதி தொடங்குகிறது. அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சிறப்புப் பிரிவில் கலந்தாய்வு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் செயல்படும் பொறியியல் கல்லூரிகளில் இருக்கும் அரசு ஒதுக்கீட்டு இடங்கள் கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட்டு வருகிறது. கலந்தாய்வு ஆன்லைனில் நடத்தப்படுகிறது. நடப்பு கல்வியாண்டில் மாணவர் சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்ப பதிவு www.tneaonline.org என்ற இணையதளம் மூலம் கடந்த ஜூலை 26-ம் தேதி தொடங்கி ஆக.24-ம் தேதி நிறைவு பெற்றது. இதில், ஒரு லட்சத்துக்கு 74 ஆயிரத்து 930 மாணவர்கள் கலந்தாய்வுக்கு விண்ணப்பித்தனர். அரசுப் பள்ளி மாணவர்கள் 22,671 பேரும் விண்ணப்பித்திருந்தனர்.

இந்நிலையில், கலந்தாய்வுக்கான அட்டவணையை தொழில்நுட்ப கல்வி இயக்குநரகம் வெளியிட்டுள்ளது. அதில், கலந்தாய்வுக்கு தகுதிபெறும் மாணவர்களுக்கான தரவரிசைப் பட்டியல் செப்.14-ம் தேதி வெளியிடப்படும். பொறியியல் படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்காக வழங்கப்பட்டுள்ள 7.5 சதவீத ஒதுக்கீட்டின்படி, அவர்களுக்கு சிறப்புப் பிரிவில் கலந்தாய்வு நடத்தப்படும்.

அதன்படி, சிறப்புப் பிரிவுக்கான கலந்தாய்வு செப்.17 முதல் 24-ம் தேதி வரையும், பொதுப் பிரிவினருக்கான கலந்தாய்வு செப்.27 முதல் அக்.17-ம் தேதி வரையும் நடத்தப்படும். துணை கலந்தாய்வு அக்.19-ம் தேதியும், எஸ்சி, எஸ்டி பிரிவு கலந்தாய்வு அக்.24-ம் தேதியும் நடக்கும். அக்.25-ம் தேதியுடன் கலந்தாய்வு நிறைவு பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் 8 முதல் 10 சதவீதம் வரை அதிகரித்தது

# 24 சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வு அமல்

● லாரி உரிமையாளர்கள் உள்ளிட்ட வாகன ஓட்டிகள் கடும் அதிருப்தி



■ சென்னை

தமிழகத்தில் 24 சுங்கச்சாவடிகளில் 8 முதல் 10 சதவீதம் வரையிலான கட்டண உயர்வு நேற்று முதல் அமலானது. போதிய கட்டமைப்புகளை மேம்படுத்தாமல் ஆண்டுதோறும் கட்டணத்தை உயர்த்துவது வாகன ஓட்டிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் 6,606 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன. இவற்றில் 5,134 கி.மீ. சாலைகளை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நேரடியாக பராமரித்து வருகிறது. மொத்தம் 49 இடங்களில் சுங்கச்சாவடிகள் அமைத்து கட்டணம் வசூலிக்கப்படுகிறது. தேசிய நெடுஞ்சாலைகள் ஆணைய ஒப்பந்தப்படி, 1992-ம் ஆண்டு அமைக்கப்பட்ட நெடுஞ்சாலைகளுக்கு ஏப்ரல் மாதமும், 2008-ம் ஆண்டு அமைக்கப்பட்ட நெடுஞ்சாலைகளுக்கு செப்டம்பர் மாதமும் சுங்கக் கட்டணம் மாற்றியமைக்கப்படுகிறது. அதன்படி, 24 சுங்கச்சாவடிகளில் 8 முதல் 10 சதவீதம் வரையில் கட்டண உயர்வு நேற்று (செப்டம்பர் 1) முதல் அமலானது.

அதன்படி திருச்சி சமயபுரம் சுங்கச்சாவடி, திருப்பராய்த்துறை (திருச்சி-கரூர்), பொன்னம்பலப்பட்டி (திருச்சி), கரூர் மணவாசி, தஞ்சை வாழவந்தான் கோட்டை, விருதுநகர் புதூர்பாண்டியாபுரம், மதுரை எலியார்பத்தி, நாமக்கல் ராசம்பாளையம், சேலம் ஓமலூர், சேலம் மேட்டுபட்டி, திண்டுக்கல் கொடைரோடு, தர்மபுரி பாளையம், குமாரபாளையம் விஜய மங்கலம், உளுந்தூர்பேட்டை செங்குறிச்சி உள்ளிட்ட 24 சுங்க சாவடிகளில் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கு, வாகன ஓட்டிகளும், லாரி உரிமையாளர்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். சில இடங்களில் வாகன ஓட்டிகள், சுங்கச்சாவடி பணியாளர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக தமிழ்நாடு மாநில மணல் லாரி உரிமையாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.யுவராஜ் கூறியதாவது:

நெடுஞ்சாலைகளில் பராமரிப்பு மற்றும் தேவையான இடங்களில் விரிவாக்கம் செய்ய ஆண்டுதோறும் சுங்கக் கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்படுகிறது. ஆனால், சில இடங்களில் சாலை பராமரிப்பு மற்றும் விரிவாக்க பணிகள் மேற்கொள்வதில்லை. சாலைகள் மோசமான நிலையில் உள்ளன. இதனால், சில இடங்களில் விபத்துகள் ஏற்படுகின்றன. தமிழகத்தில் நீண்ட நாட்களாக இருக்கும் சுங்கச்சாவடிகளை அகற்றிட வேண்டும்.

தமிழக அரசு சுங்கச்சாவடிகளில் வசூலிக்கப்பட்ட தொகை, எந்த ஆண்டுகள் பயன்பாட்டில் இருக்கிறது என்பதை கண்டறிந்திட ஐஏஎஸ் அதிகாரி தலைமையில் குழு அமைக்க வேண்டும். குறிப்பாக, செங்குன்றம் - தடா, மதுரவாயல் - தாம்பரம், பரனூர், உளுந்தூர்பேட்டை, வானகரம் - வாலாஜா தேசிய நெடுஞ்சாலையில் இருக்கும் சுங்கச்சாவடிகளை அகற்றிட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## பெண்களின் முன்னேற்றத்தை ஊக்குவிக்க

# தமிழ்நாடு மாநில புதிய மகளிர் கொள்கை ஆதரவற்ற பெண்களுக்கு தனி நலவாரியம்

● சமூக நலத்துறை அமைச்சர் கீதா ஜீவன் அறிவிப்பு

■ சென்னை

தமிழகத்தில் பெண்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஊக்கப்படுத்தவும், கண்காணிக்கவும் 'தமிழ்நாடு மாநில புதிய மகளிர் கொள்கை' உருவாக்கப்படும் என்று சமூக நலன், மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் சமூக நலன், மகளிர் உரிமைத் துறை மீது உறுப்பினர்களின் விவாதங்களுக்கு பதில் அளித்து அமைச்சர் பி.கீதா ஜீவன் பேசியதாவது:

2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 75 லட்சம் முதியோர் உள்ளனர். 2017-18-ல் முதியோர் எண்ணிக்கை 11.2 சதவீதம் இருந்தது. 2030-ல் முதியோர் எண்ணிக்கை 1.5 கோடியாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு, முதியோரின் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்யும் வகையில் 'மாநில மூத்த குடிமக்கள் கொள்கை' உருவாக்கப்படும்.

அதேபோல, பெண்களுக்கான சம வாய்ப்பு, சம உரிமை, பொருளாதார மேம்பாடு, திறன் வளர்ப்பு, பாதுகாப்பான வாழ்வுரிமை, கண்ணியம் காத்தல் ஆகியவற்றை உறுதி செய்யவும் அரசியலில் வாய்ப்பு பெறவும் உரிமைகளை பெற்றுத் தரவும் அவர்களது ஒட்டுமொத்த வளர்ச்சியை ஊக்கப்படுத்தவும் கண்காணிக்கவும் 'தமிழ்நாடு மாநில புதிய மகளிர் கொள்கை' உருவாக்கப்படும்.

கைம்பெண்கள், கணவரால் கைவிடப்பட்டோர், நலிவுற்ற, ஆதரவற்ற பெண்கள், முதிர் கன்னிகள் உள்ளிட்டோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் களைந்து, அவர்களுக்கு கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு வழங்க சுய உதவிக் குழுக்கள் அமைப்பது, தொழிற்பயிற்சிகள் வழங்குவது போன்ற திட்டங்களை வகுத்து சிறப்பான வாழ்க்கைக்கு, 'கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரியம்' அமைக்கப்படும்.

தாம்பரத்தில் செயல்பட்டு வரும் சேவை இல்லத்தில் உள்ள கட்டிடங்களைப் புதுப்பிக்கவும் பயிற்சிக்கான தளவாடங்களை வாங்கவும் ரூ.1.18 கோடி ஒதுக்கப்படும். புதிதாக 6 மாவட்டங்களில் சமூகநல அலுவலகங்கள், குழந்தைகள் பாதுகாப்பு அலகு, இளைஞர் நீதிக் குழுமங்கள், குழந்தைகள் நலக் குழுக்கள் புதிதாக ஏற்படுத்தப்படும்.

முதல்வரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில், பெற்றோரில் ஒருவர் 35 வயதுக்குள் குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்திருக்க வேண்டும் என்ற வயது வரம்பு 40-ஆக உயர்த்தப்படும்.

ஆயிரம் சத்துணவு மையங்களில் ரூ.80 லட்சத்தில் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிறுவப்படும். அங்கன்வாடி மையங்களில் முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு 2 இணை வண்ண சீருடைகள் வழங்கும் திட்டமானது கோவை, கன்னியாகுமரி, கரூர், நீலகிரி, சிவகங்கை, தூத்துக்குடி, திருப்பூர் மாவட்டங்களுக்கு ரூ.4.38 கோடியில் விரிவுபடுத்தப்படும். 7,757 அங்கன்வாடி மையங்களுக்கு மின்வசதி ஏற்படுத்தப்படும்.

### போதை தடுப்பு மையங்கள்

போதைப் பழக்கத்தில் இருந்து சிறுவர்களை மீட்கும் வகையில் சென்னை, திருநெல்வேலியில் போதை தடுப்பு மையங்கள் ரூ.76 லட்சத்தில் அமைக்கப்படும். சமூகப் பாதுகாப்புத் துறை மண்டல அலுவலகம் மதுரையில் மீண்டும் அமைக்கப்படும். யுனிசெப்புடன் இணைந்து மாநில குழந்தைகள் பாதுகாப்பு பயிற்சி மையம் உருவாக்கப்படும். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

# சென்னை அண்ணா சாலையில் கருணாநிதி உருவச்சிலை

● சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி



■ சென்னை

சென்னை அண்ணா சாலையில் கருணாநிதி உருவச் சிலை நிறுவப்படும் என்று பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதிபட தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் வீட்டுவசதி உள்ளிட்ட மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது திமுக உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் பேசும்போது, சென்னை அண்ணா சாலையில் கருணாநிதி சிலை நிறுவ முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்த பதில் வருமாறு:

உறுப்பினர் நீலமேகம் பேசும்போது, பெரியார் எண்ணிய எண்ணத்தை நிறைவேற்றும் வகையில், திராவிடர் கழகம் சார்பில் சென்னை அண்ணாசாலையில் கருணாநிதி உருவச் சிலையை அமைப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அதற்காக முறையாக அனுமதியும் பெற்று, அந்தச் சிலை வைக்கப்பட்டது. ஆனால், அந்தச் சிலை ஏன் அங்கிருந்து அகற்றப்பட்டது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். நான் அந்த விஷயத்துக்குள்ளே சென்று நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி 3 நாட்களுக்கு முன்புகூட என்னைச் சந்தித்து அவரும் இக்கோரிக்கையை என்னிடம் எடுத்து வைத்தார். இது பெரியார் நினைத்தது. பெரியார் எங்களுக்கு கட்டளையிட்டு, நாங்கள் அதை வைத்தது. எனவே, மீண்டும் அந்த இடத்திலே கருணாநிதி சிலையை வைக்க வேண்டுமென்று அவரும் என்னிடத்தில் வற்புறுத்தினார்.

பொதுவான இடங்களிலே, போக்குவரத்துக்கு இடையூறாக இதுபோன்ற சிலைகள் வைக்கப்படக் கூடாது என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. எனவே, அந்த சட்டச் சிக்கல்களையெல்லாம் அவரிடம் எடுத்துச் சொன்னேன். அதற்கு அவர், 'நாங்கள் ஏற்கெனவே அனுமதி வாங்கியதுதான். எனவே, புதிதாக அனுமதி வாங்க வேண்டிய அவசியமில்லை' என்றார்.

மேலும், அண்ணா சாலையில் பெரியார், அண்ணா, எம்ஜிஆர் சிலைகள் இருக்கின்றன. ஏற்கெனவே கருணாநிதி சிலையும் இருந்தது. எனவே, அந்த இடத்திலேநீங்கள் அதை வைக்கவேண்டுமென்று வீரமணி வற்புறுத்தியிருக்கிறார். அண்ணா சாலையில் சிலை வைப்பது குறித்து நான் சட்ட வல்லுநர்களோடு ஆலோசனை செய்வது உகந்ததாக இருக்கும்.

நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கும் நாம் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். நிச்சயமாக கருணாநிதி சிலை அண்ணா சாலையிலேயே நிறுவப்படும்.

இவ்வாறு முதல்வர் உறுதிபட தெரிவித்தார்.







This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper1). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup

## பளிச் பத்து 64

தொகுப்பு: பி.எம்.சுதிர்




- பண்டைக்கால ரோமானிய காலண்டரில், 7-வது மாதமாக செப்டம்பர் இருந்தது.
- லத்தீன் மொழியில் 'செப்டம்' என்றால் 7 என்று அர்த்தம்.
- பண்டைய ரோமன் காலண்டரில், செப்டம்பர் மாதத்துக்கு 29 நாட்கள் மட்டுமே இருந்தன. பிற்காலத்தில் ஜூலியஸ் சீசர்தான் இம்மாதத்தில் ஒரு நாளைக் கூட்டினார்.
- நெருப்புக் கடவுளின் மாதமாக ரோமானியர்கள் இம்மாதத்தை கருதுகின்றனர்.
- 1939-ம் ஆண்டில் செப்டம்பர் 1-ம் தேதியன்று போலந்து நாட்டின் மீது ஹிட்லர் படையெடுத்தார்.
- உலகையே உலுக்கிய அமெரிக்க இரட்டை கோபுர தாக்குதலும் செப்டம்பர் மாதத்தில்தான் நடைபெற்றது.
- அமெரிக்காவில் மற்ற மாதங்களை விட, செப்டம்பரில்தான் அதிக குழந்தைகள் பிறப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- உலகில் பல நாடுகளில் செப்டம்பர் மாதத்தில்தான் கல்வியாண்டு தொடங்குகிறது.
- சிலி, உஸ்பெகிஸ்தான், கத்தார், பிரேசில், மெக்சிகோ உள்ளிட்ட பல நாடுகள் இந்த மாதத்தில்தான் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்றன.
- காயங்களுக்கு ஒட்டப்படும் பேண்ட்-எய்ட், 1920-ம் ஆண்டு செப்டம்பரில்தான் கண்டுபிடிக்கப்பட்டது.



## நல்லதே நடக்கும்

• ஜோதிஷபூஷண் வேங்கடசுப்பிரமணியன் •

**02-09-2021** பிலவ 17 ஆவணி

**வியாழக்கிழமை**

**திதி** : ஏகாதசி இன்று முழுவதும்.
**நட்சத்திரம்** : திருவாதிரை பிற்பகல் 2.51 மணி வரை. பிறகு புனர்பூசம்.
**நாமயோகம்** : சித்தி காலை 10.52 மணி வரை. அதன் பிறகு வ்யதீபாதம்.
**நாமகரணம்** : பவம் மாலை 6.06 மணி வரை. அதன் பிறகு பாலவம்.
**நல்ல நேரம்** : காலை 9.00-12.00, மாலை 4.00-7.00, இரவு 8.00-9.00 மணி வரை..
**யோகம்** : மந்தயோகம் பிற்பகல் 2.51 மணி வரை. பிறகு அமிர்தயோகம்.
**சூலம்** : தெற்கு, தென்கிழக்கு பிற்பகல் 2.00 மணி வரை.
**பரிகாரம்** : நல்லெண்ணெய்.
**சூரிய உதயம்**: சென்னையில் காலை 5.58. **அஸ்தமனம்** : மாலை 6.17.

| | | | |
|---|---|---|---|
| **ராகு காலம்** | மதியம் 1.30-3.00 | **நாள்** | தேய்பிறை |
| **எமகண்டம்** | காலை 6.00-7.30 | **அதிர்ஷ்ட எண்** | 2, 6, 7 |
| **குளிகை** | காலை 9.00-10.30 | **சந்திராஷ்டமம்** | கேட்டை, மூலம். |

நான்கு தலைமுறையாக பாரம்பரியமிக்க தங்க நகை நிறுவனம்
T.NAGAR LKS GOLD HOUSE (P) LTD SINCE 1925
T.NAGAR | ANNA NAGAR | TAMBARAM
"LKS - GOLD" IS CASH IN HAND

**மேஷம்:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். வீட்டை ரசனைக்கேற்ப மாற்றியமைப்பீர்கள். பங்கு வர்த்தகம் லாபம் தரும்.

**ரிஷபம்:** குடும்பத்தினருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். அரசு காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். திடீர் பயணம் ஏற்படும்.

**மிதுனம்:** உங்கள் குடும்பத்தினரை பற்றி வெளிநபர்களிடம் குறை கூறி பேச வேண்டாம். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்லக்கூடிய சில கருத்துகள் கூட சீரியசாக வாய்ப்பு உள்ளது.

**கடகம்:** விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகள் கோபப்படுவார்கள். திட்டமிடாத செலவுகளை போராடி சமாளிப்பீர்கள். யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**சிம்மம்:** முகமலர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீண்டநாள் ஆசைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் ஏற்படும். தந்தையின் உடல்நிலை சீராக இருக்கும்.

**கன்னி:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் யாவும் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படும். பங்கு வர்த்தகத்தில் லாபம் கிடைக்கும்.

**துலாம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் நிலவும். பிள்ளைகளை நல்வழிப்படுத்துவீர்கள். அவர்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும். சிலர் உங்கள் மனம் நோகும்படி பேசினாலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும்.

**தனுசு:** புது எண்ணங்கள் தோன்றும். பணவரவு திருப்தி தரும். கணவன் - மனைவிக்குள் நிலவிய கருத்துவேறுபாடுகள் நீங்கும். பால்ய நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மனநிறைவு கிட்டும்.

**மகரம்:** எதிர்பாராத செலவு வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சு திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் ஏற்படும்.

**கும்பம்:** பிள்ளைகளின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். அரசு காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். விருந்தினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.

**மீனம்:** சகோதரர் வகையில் நன்மை பிறக்கும். புதிய நண்பர்கள் அறிமுகமாவார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். குடும்பத்தில் உள்ள கூச்சல், குழப்பங்கள் யாவும் நீங்கும்.

உலக வங்கி உதவியுடன் 'ரைட்ஸ்' திட்டம் செயல்படுத்தப்படும்

# மாற்றுத் திறனாளிகள் நலனுக்கு ரூ.1,702 கோடியில் திட்டங்கள்

## ● சட்டப்பேரவையில் அமைச்சர் கீதா ஜீவன் அறிவிப்பு

■ சென்னை

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மாற்றுத் திறனாளிகள் அனைவரையும் சென்றடையும் வகையிலும், துறையின் நடவடிக்கைகளை வட்டார மற்றும் உள்ளூர் அளவில் விரிவுபடுத்தும் நோக்கிலும் உலகிலே முதன்முறையாக உலக வங்கி நிதியுதவியுடன் 'ரைட்ஸ்' (RIGHTS) திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். 6 ஆண்டுகளில் ரூ.1,702 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று சட்டப்பேரவையில் அமைச்சர் கீதா ஜீவன் அறிவித்தார்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரடியாக கவனித்து வருகிறார். இந்நிலையில் சட்டப்பேரவையில் வீட்டுவசதி, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட துறைகளின் மீதான உறுப்பினர்களின் விவாதத்துக்கு பதில் அளித்து, சமூகநலத் துறை அமைச்சர் கீதா ஜீவன் வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு:

மாற்றுத் திறனாளிகள் சுய விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கேற்றவாறு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட உதவி உபகரணங்களை பெற்றுக் கொள்ள நிலையான நிதியுதவியை அரசு வழங்கும். மாற்றுத் திறனாளி பராமரிப்பு உதவித் தொகை கோரி விண்ணப்பித்து காத்திருப்போர் பட்டியலிலுள்ள அனைவருக்கும் நடப்பாண்டு முதல் மாதாந்திர உதவித் தொகையை வழங்குவதற்கான நிதி ரூ.404 கோடியே 64 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

உதவி உபகரணங்கள் கோரி விண்ணப்பித்து காத்திருப்போர் பட்டியலில் உள்ள அனைவருக்கும் உதவி உபகரணங்கள் வழங்க 2021-22-ம் ஆண்டுக்கு ரூ.62 கோடியே 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### சம வாய்ப்புக் கொள்கை

அனைத்து அரசுத் துறைகள் மற்றும் 20 பேருக்கு மேல் பணியாற்றும் தனியார் நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகள் பணிபுரிய தகுதியான பணியிடங்களைக் கண்டறிதல் மற்றும் அனைத்து இடங்களிலும் தடையற்ற சூழலை உருவாக்க 'சம வாய்ப்புக் கொள்கை' உருவாக்கப்படும்.

மத்திய அரசின் 'சங்கல்ப்' திட்டத்தில் பெறப்பட்ட நிதியுதவி மூலம் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரம் மையம் உருவாக்கப்பட்டு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் வழியாக வேலைவாய்ப்பு நாடும் மாற்றுத் திறனாளிகளுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களுக்கான வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும்.

மாற்றுத் திறனாளிகளுக்காக பிரத்யேக தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டதுடன், அவர்களது இருப்பிடங்களுக்கே சென்று தடுப்பூசி செலுத்தப்பட்டது. இது வரை 1,74,369 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் மாற்றுத் திறனாளிகள் அனைவரையும் சென்றடையும் வகையில் துறையின் நடவடிக்கைகளை வட்டார மற்றும் உள்ளூர் அளவில் விரிவுபடுத்தும் நோக்கில் உலகிலேயே முதன்முறையாக உலக வங்கி நிதியுதவியுடன் 'ரைட்ஸ்' (RIGHTS) திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் 6 ஆண்டுகளில் ரூ.1,702 கோடியில் செயல்படுத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் கீதா ஜீவன் அறிவித்தார்.

## தமிழகத்தில் புதிதாக 1,509 பேருக்கு கரோனா தொற்று

■ சென்னை

தமிழகத்தில் புதிதாக 1,509 பேருக்கு கரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் நேற்று ஆண்கள் 858, பெண்கள் 651 என மொத்தம்1,509 பேர் கரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர். அதிகபட்சமாக கோவையில் 186, சென்னையில் 177, ஈரோட்டில் 137 பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### 20 பேர் உயிரிழப்பு

தமிழகம் முழுவதும் 16,620 பேர் சிகிச்சையில் உள்ளனர். அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நேற்று 20 பேர் உயிரிழந்தனர். இதன்மூலம் தமிழகத்தில் கரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 34,941 ஆக உயர்ந்துள்ளது. சென்னையில் மட்டும் 8,402 பேர் இறந்துள்ளனர்.

இவ்வாறு தமிழக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

மாநிலங்களவை உறுப்பினராக

# திமுக வேட்பாளர் எம்.எம்.அப்துல்லா போட்டியின்றி தேர்வாகிறார்

## ● திமுகவின் பலம் 8 ஆக உயர்கிறது

■ சென்னை

சுயேச்சை வேட்பாளர்கள் 3 பேரின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதால் மாநிலங்களவை உறுப்பினராக திமுக வேட்பாளர் எம்.எம்.அப்துல்லா போட்டியின்றி தேர்வு செய்யப்படுவது உறுதியாகியுள்ளது. இதனால் மாநிலங்களவையில் திமுகவின் பலம் 8 ஆக உயர்கிறது.

கடந்த 2019 ஜூலையில் அதிமுக சார்பில் மாநிலங்களவை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட அ.முகமது ஜான், உடல்நலக் குறைவு காரணமாக கடந்த மார்ச் 23-ம் தேதி காலமானார். இதனால் அவர் வகித்த மாநிலங்களவை உறுப்பினர் பதவி காலியானது.

### மொத்தம் 4 பேர் மனுதாக்கல்

இந்த ஓரிடத்தை நிரப்புவதற்காக வரும் செப்.13-ம் தேதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த ஆகஸ்ட் 24 தொடங்கி 31-ம் தேதி வரை நடைபெற்றது. திமுக சார்பில் எம்.எம்.அப்துல்லா, சுயேச்சையாக கே.பத்மராஜன், அக்னி ஸ்ரீராமச்சந்திரன், கோ.மதிவாணன் என்று மொத்தம் 4 பேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர்.

வேட்புமனுக்கள் நேற்று காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆய்வுக்குப் பிறகு திமுக வேட்பாளர் எம்.எம்.அப்துல்லாவின் வேட்புமனு மட்டுமே செல்லத்தக்கது என்று அறிவிக்கப்பட்டது. மற்ற மூவரின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதாக தேர்தல் நடத்தும் அதிகாரியும், தமிழக சட்டப்பேரவைச் செயலாளருமான கி.சீனிவாசன் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

### நாளை அறிவிப்பு

வேட்புமனுக்களை திரும்பப் பெற நாளை (செப்.3) கடைசி நாளாகும். அன்றைய தினம் திமுக வேட்பாளர் எம்.எம்.அப்துல்லா போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுவார். 2025 ஜூலை 24-ம் தேதி வரை அப்துல்லா மாநிலங்களவை உறுப்பினராக பதவி வகிக்க முடியும்.

46 வயதான எம்.எம்.அப்துல்லா, திமுக வெளிநாடுவாழ் இந்தியர் நல அணியின் இணைச் செயலாளராக இருக்கிறார். புதுக்கோட்டையைச் சேர்ந்தவர். மனைவி ஜன்னத். இரு மகள்கள் உள்ளனர். 1993-ல் புதுக்கோட்டை நகர திமுக மாணவரணி துணை அமைப்பாளரான அவர், நகர அமைப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், சிறுபான்மையினர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் என்று திமுகவில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் திமுகவுக்கு தற்போது ஆர்.எஸ்.பாரதி, என்.ஆர்.இளங்கோ, டி.கே.எஸ்.இளங்கோவன், அந்தியூர் செல்வராஜ், எம்.சண்முகம், திருச்சி சிவா, பி.வில்சன் ஆகிய 7 எம்பி.க்கள் உள்ளனர். அப்துல்லா போட்டியின்றி தேர்வு செய்யப்படுவது உறுதியாகியுள்ளதால் மாநிலங்களவையில் திமுகவின் பலம் 8 ஆக உயர்கிறது.



▲ ரயில் டிக்கெட் முன்பதிவில் பயணிகளுக்கு ஏற்படும் சிரமத்தை தவிர்க்கும் வகையில் சென்னை சென்ட்ரல் வளாகத்தில் புதிய தகவல் தொகுப்பு மையத்தை தெற்கு ரயில்வே பொதுமேலாளர் ஜான் தாமஸ் நேற்று தொடங்கி வைத்தார். உடன் கூடுதல் பொதுமேலாளர் பி.ஜி.மால்யா, ரயில்வேயின் கிரிஸ் நிறுவனத்தின் மண்டல பொதுமேலாளர் பிரதாப் சிங் உள்ளிட்டோர்.

கோயில் அர்ச்சகர்கள் நியமனம் தொடர்பான

# அறநிலையத் துறையின் புது விதியை எதிர்த்து வழக்கு

## ● தமிழக அரசு பதில் அளிக்க நீதிமன்றம் உத்தரவு

■ சென்னை

கோயில் அர்ச்சகர்கள் நியமனம் தொடர்பான இந்து சமய அறநிலையத் துறையின் புதிய விதிகளை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், இதுதொடர்பாக தமிழக அரசு 4 வாரங்களில் பதில் அளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோயில்களில் அர்ச்சகர்கள், ஓதுவார்கள், பூசாரிகள், பரம்பரை அறங்காவலர்கள் நியமனம் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக இந்து சமய அறநிலைய துறையில் புதிய விதிகள் கடந்தாண்டு கொண்டு வரப்பட்டது. அதில், 18 வயது முதல் 35 வயதுக்குட்பட்டவர்களை மட்டுமே புதிதாக அர்ச்சகராக நியமிக்க வேண்டும் என்றும், ஓராண்டு சான்றிதழ் பயிற்சி முடித்தவர்களையும் இப்பணிகளுக்கு நியமிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ஆகம விதிகளுக்கு எதிராக உள்ளதாகக் கூறி, அறநிலையத் துறையின் இந்த பணி நியமன விதிகளை எதிர்த்து, அகில இந்திய ஆதிசைவ சிவாச்சாரியார்கள் சேவா சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ்.ஆர்.முத்துக்குமார் மற்றும் சென்னை சிஐடி நகரைச் சேர்ந்த எஸ்.ஸ்ரீதரன் ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். இந்த வழக்குகள் நிலுவையில் உள்ளன.

### 8 பூசாரிகள் வழக்கு

இந்நிலையில் பெரம்பலூர் மாவட்டம் சிறுவாச்சூர் மதுரகாளியம்மன் கோயில் பரம்பரை பூசாரிகள் 8 பேர், அறநிலையத் துறையின் விதிகளை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

அதில், "8 குடும்பங்களிலும் மூத்தவர்கள் இறந்தால் அந்த குடும்பத்தைச் சேர்ந்த ஆண் அடுத்த பூசாரியாக மரபுவழியாக நியமிக்கப்படுவது பல ஆண்டுகால நடைமுறையாகப் பின்பற்றப்படுகிறது. ஆனால் தற்போது பூசாரிகளுக்கு வயது வரம்பு நிர்ணயிப்பது சட்ட விரோதமானது. அறநிலையத் துறை சட்டப்படி பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள மரபுகளின் படி நியமனம் நடைபெற வேண்டும் என்பதால் இந்த புதிய விதிகளை செல்லாது என அறிவிக்க வேண்டும்" என கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை நேற்று விசாரித்த தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி மற்றும் நீதிபதி பி.டி.ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வு, இதுதொடர்பாக தமிழக அரசு 4 வாரங்களில் பதில் அளிக்க உத்தரவிட்டு, இதுதொடர்பாக ஏற்கெனவே தொடரப்பட்ட வழக்குகளையும் இந்த வழக்கோடு சேர்த்து பட்டியலிட உத்தரவிட்டு விசாரணையை 5 வாரங்களுக்கு தள்ளிவைத்துள்ளனர்.

'இந்து தமிழ் திசை' நாளிதழ், ஏபிஜே அகாடமி நடத்தும்


# மாணவர்களுக்கான 'கையெழுத்து பயிற்சி'

## ● செப்.6 முதல் 14 வரை ஆன்லைனில் நடைபெறுகிறது

■ சென்னை

பள்ளி மாணவ - மாணவிகள் ஆன்லைனில் பங்கேற்று பயன்பெறும் வகையில், 'இந்து தமிழ் திசை' நாளிதழ், ஏபிஜே அகாடமி உடன் இணைந்து நடத்தும் 'கையெழுத்து பயிற்சி' ஆன்லைன் நிகழ்ச்சி செப்.6 முதல் 8 நாட்கள் நடைபெற உள்ளது.

கரோனா பரவல் காரணமாக அனைத்து மாணவர்களுக்கும் பள்ளிகள் இன்னும் திறக்கப்படாத நிலையில், மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில், 'இந்து தமிழ் திசை' நாளிதழ் பல்வேறு செயல்பாடுகளை ஆன்லைனில் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, 'கையெழுத்து பயிற்சி' எனும் ஆன்லைன் நிகழ்ச்சியை 8 நாட்கள் நடத்துகிறது. செப்.6-ம் தேதி தொடங்கி, 14-ம் தேதி வரை (ஞாயிறு தவிர) தினமும் மாலை 6.30 முதல் 7.30 மணி வரை நடைபெறவுள்ளது.



▲ தேவகி பாலாஜி

இந்த கையெழுத்து பயிற்சியை கடந்த 7 ஆண்டுகளாக மாணவர்களின் திறன் மேம்பாட்டுக்காக பல பயிற்சிகளை வழங்கிவரும் ஏபிஜே அகாடமியின் நிறுவனரும், புகழ்பெற்ற கையெழுத்து பயிற்சியாளருமான தேவகி பாலாஜி வழங்க உள்ளார். இந்தப் பயிற்சியில் 7 வயது குழந்தைகள் முதல் அனைவரும் பங்கேற்கலாம்.

இதில் சேர்த்தெழுதுதல், கையெழுத்தில் நேர்த்தியும் தெளிவும், எழுத்துக்களை எழுதும் முறை ஆகியவை குறித்து பயிற்சியளிக்கப்படும். இந்தப் பயிற்சிக்கான உள்ளடக்கம் தொடர்பானவை அனைவருக்கும் வழங்கப்படும். பெற்றோர் பிரின்ட் அவுட் எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் பங்கேற்கும் அனைவருக்கும் பயிற்சியின் முடிவில் அழகான கையெழுத்து அமையும்.

இந்நிகழ்வில் பங்கேற்க விரும்புபவர்கள் https://connect.hindutamil.in/event/116-handwriting-course.html என்ற இணையதளத்தில் ரூ.750 பதிவுக் கட்டணம் செலுத்தி, பதிவு செய்ய வேண்டும்.

இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு 9003966866 என்ற செல்பேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

# அநியாயத்தை தடுக்க எப்போதும் தயங்காதீர்கள்

## ● காவல் உதவி ஆய்வாளர்களுக்கான பயிற்சி தொடக்க விழாவில் முதல்வர் ஸ்டாலின் அறிவுரை

■ சென்னை

அநியாயத்தை தடுக்க எப்போதும் தயங்காதீர்கள் என்று காவல் உதவி ஆய்வாளர்களுக்கான ஓராண்டு பயிற்சி தொடக்க விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

வண்டலூர் ஊனமாஞ்சேரியில் அமைந்துள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில், உதவி ஆய்வாளர்களுக்கான ஓராண்டு பயிற்சியை காணொலி வாயிலாக முதல்வர் ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் காவல் உதவி ஆய்வாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் கடந்த ஜூலை 26-ம் தேதி பணி நியமன ஆணைகளை வழங்கினார். பணி நியமனம் பெற்ற 941 பேரில், தாலுகா காவல் நிலையங்களுக்கு 645 பேரும், ஆயுதப்படைக்கு 265 பேரும், தமிழ்நாடு சிறப்பு காவல் படைக்கு 31 பேரும் ஆணைகளை பெற்றுள்ளனர். இவர்களில் 280 பெண் காவல் ஆய்வாளர்களும் உள்ளனர். இவர்களுக்கு, தமிழ்நாடு உயர் பயிற்சியகத்தில் ஓராண்டு அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சி வரும் 2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நிறைவு பெறும்.

இப்பயிற்சியை தொடங்கி வைத்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

அரசின் ஒரு கை நிர்வாகம் என்றால் மற்றொரு கை காவல் துறை. இரண்டும் முறையாக, சரியாகச் செயல்பட்டால் அந்த அரசாங்கம் தலைசிறந்த அரசாங்கமாக போற்றப்படும். அந்தவகையில் காவல்துறையின் செயல்பாடு மிகவும் முக்கியமானது. இத்துறையில் எத்தனையோ உயர் பதவிகள் இருந்தாலும், மக்களோடு நேரடியாக தொடர்பு கொள்ளக் கூடியவர்களாக உதவி ஆய்வாளர்களாகிய நீங்கள்தான் இருக்கப் போகிறீர்கள். அந்தவகையில் முக்கியமான கடமையும் பொறுப்பும் உங்களுக்கு உள்ளது. ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின் துறைவாரியாக உயர் அதிகாரிகளுடன் தனித்தனியாக கலந்துரையாடினேன்.

அப்போது உயர் காவல்துறை அதிகாரிகளைச் சந்தித்து, ஓர் கருத்தை வலியுறுத்திச் சொன்னேன். "காவல்துறை என்றாலே குற்றங்களைத் தடுக்கும் துறையாக, தண்டனை வாங்கித் தரும் துறையாக மட்டுமே அனைவரும் நினைக்கின்றனர். காவல்துறை என்பது குற்றங்கள் நடக்காத வகையில் சூழலை உருவாக்கித் தரும் துறையாக மாற வேண்டும் என்பது என்னுடைய ஆசை. குற்றங்கள் குறைய வேண்டும் என்பதை விட, குற்றமே நடைபெறாத சூழலை உருவாக்கும் துறையாக மாற வேண்டும்" என்று குறிப்பிட்டேன். என்னுடைய இந்த ஆசை உங்கள் ஆசையாகவும் மாற வேண்டும். அரசிடம், மக்கள் எதிர்பார்ப்பது அமைதிதான். அந்த அமைதியை உருவாக்கித் தரும் கடமை காவல் துறைக்கு இருக்கிறது. உடல்வளம், மனத்திறம், அறிவு வளம் மூன்றும் உள்ளவர்களாக நீங்கள் மாற வேண்டும். தொழில்நுட்ப அறிவு காவல்துறையினருக்கு அவசியம் வேண்டும். பயிற்சி பெற்று காவல் துறையில் நீங்கள் செயல்பட தொடங்கும்போது அமைதியான தமிழகத்தை உருவாக்க சூளுரைக்க வேண்டும்.

அநியாயத்தை தடுக்க எப்போதும் தயங்காதீர்கள். நியாயத்துக்காக எப்போதும் நில்லுங்கள். உங்கள் எல்லைக்கு உட்பட்ட பகுதியை குற்றம் நடக்காத பகுதியாக மாற்றுங்கள். உண்மைக் குற்றவாளிகளை சட்டத்தின் முன்நிறுத்துங்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிவு காட்டுங்கள். இவற்றை சட்டப்பூர்வமாக செய்யுங்கள்.

இவ்வாறு முதல்வர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் டிஜிபி செ.சைலேந்திரபாபு, காவல் உயர் பயிற்சியகத்தின் இயக்குநர் அ.அமல்ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper1). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup




▲ திண்டுக்கல் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்கு பூ கொடுத்து வரவேற்ற ஆசிரியை. (வலது) மதுரை ஈவெரா மேல்நிலைப்பள்ளியில் மாணவிகளுக்கு உடல் வெப்பநிலை பரிசோதனை செய்யப்பட்டது.



▲ முகக்கவசம் அணிந்து வகுப்பறையில் அமர்ந்திருந்த ராமநாதபுரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள். படம்: எல்.பாலசந்தர்

# பல மாதங்களுக்கு பிறகு மீண்டும் பள்ளிகள் திறப்பு

## ● உற்சாகத்துடன் பள்ளிக்கு வந்த மாணவர்களுக்கு வரவேற்பு

சுப.ஜனநாயக செல்வம்

■ மதுரை

பல மாதங்களுக்குப் பிறகு நேற்று பள்ளிகள் திறக்கப்பட்டதால் மாணவர்கள் உற்சாகத்துடன் பள்ளிக்கு வந்தனர்.

கரோனா முதல் அலையால் 2020-ம் ஆண்டு மார்ச்சில் இருந்து பள்ளிகள், கல்லூரிகள் மூடப்பட்டன. அதனைத் தொடர்ந்து அரசு பொதுத்தேர்வு எழுதும் 10, பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளுக்கு மட்டும் பள்ளிகள் நடந்தன.

அதன்பின்னர் அனைவரும் தேர்ச்சி பெற்றதாக அரசு அறிவித்தது. பிறகு 2021-ல் கரோனா 2-வது அலையால் பள்ளிகள் மீண்டும் மூடப்பட்டன. ஆன்லைனில் பாடங்கள் நடத்தப்பட்டாலும், மாணவர்களின் கல்வி பாதித்தது. மேலும் மாணவர்கள் இடைநிற்கும் அபாயம் உருவானது. தற்போது கரோனா கட்டுக்குள் வந்ததையடுத்து செப்.1 முதல் 9,10, பிளஸ் 2 வகுப்புகளை திறக்க அரசு உத்தரவிட்டது.

மேலும் முகக் கவசம், சமூக இடைவெளி உள்ளிட்ட கரோனா தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதன்படி நேற்று தமிழகம் முழுவதும் பள்ளிகள் திறக்கப்பட்டன. இருந்தாலும் மாணவர்கள் பள்ளிக்கு வருவது கட்டாயமில்லை எனவும் அரசு அறிவித்துள்ளது.

பல மாதங்களுக்குப் பிறகு பள்ளிகள் திறக்கப்பட்டதால் மாணவர்கள் உற்சாகத்துடன் பள்ளிக்கு வந்தனர். அவர்களை ஆசிரியர்கள் இன்முகத்துடன் வரவேற்றனர்.

இதுவரை வீடுகளிலேயே முடங்கிக் கிடந்ததால் உளவியல் ரீதியாக சோர்வடைந்து இருந்த மாணவர்கள், சக நண்பர்களை சந்தித்த மகிழ்ச்சியில் திளைத்தனர்.

மதுரை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ரா.சுவாமிநாதன் கூறியதாவது: மாவட்டத்தில் நேற்று மொத்தம் 534 பள்ளிகள் உள்ளன. இதில் 9, 10, பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளைச் சேர்ந்த 1,65,684 மாணவர்கள் உள்ளனர்.

மாணவர்கள் அனைவரும் முகக்கவசம் அணிந்து வந்தனர். 90 சதவீத மாணவர்கள் வந்துள்ள நிலையில் சில நாட்களில் 100 சதவீதத்தை எட்டி விடும் என்றார்.

### திண்டுக்கல்

திண்டுக்கல் நகரின் மத்தியில் அமைந்துள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு வந்த மாணவிகளுக்கு ஆசிரியைகள் பூக்களை கொடுத்து வரவேற்றனர். மொத்தம் 60 சதவீத மாணவர்கள் வருகை தந்திருந்ததாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

அனைத்து பள்ளிகளிலும் மாணவ, மாணவிகளின் உடல் வெப்ப நிலை பரிசோதிக்கப்பட்டது. பள்ளி வளாகங்களில் கரோனா பரவல் தடுப்பு குறித்த வாசகங்கள் அடங்கிய பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன.

ஒரு வகுப்புக்கு இருபது பேர் மட்டுமே அமர வைக்கப்பட்டனர். நீண்ட இடைவெளிக்கு பின் பள்ளிகள் திறக்கப்பட்டதால் முன்னதாக பள்ளி வகுப்பறைகளில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு, பள்ளி வளாகத்தை தூய்மைப்படுத்தும் பணி கடந்த இரண்டு தினங்களாக நடந்தது

காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி கேட்டு மனு

# பெண் காவல் ஆய்வாளரை இன்று ஆஜர்படுத்த உத்தரவு

■ மதுரை

டெய்லரிடம் ரூ.10 லட்சம் பறித்த வழக்கில் போலீஸ் காவல் மனு விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசந்தியை இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம், இளையான்குடியைச் சேர்ந்த டெய்லர் அர்ஷத். இவரிடம் கடந்த ஜூலை 5-ல் ரூ.10 லட்சம் வழிப்பறி செய்ததாக நாகமலை புதுக்கோட்டை காவல் ஆய்வாளர் வசந்தியை மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்தனர். இந்த வழக்கு மதுரை முதலாவது நீதித்துறை நடுவர் மன்றத்தில் நீதிபதி ராஜலிங்கம் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

(C) KSL Media Ltd.

அப்போது வசந்தியை காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி கோரி குற்றப்பிரிவு டிஎஸ்பி ராதாகிருஷ்ணன் மனு தாக்கல் செய்தார். அதில், வசந்தி வழிப்பறி செய்த பணத்தை யாரிடம் கொடுத்து வைத்துள்ளார் என விசாரிக்க வேண்டியுள்ளது. பணத்தை பறிமுதல் செய்ய வேண்டியுள்ளது.

எனவே, அவரை 4 நாள் போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி வழங்க வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. இதையடுத்து காவல் ஆய்வாளர் வசந்தியை இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நீதிபதி உத்தரவிட்டார்.



▲ வசந்தி

### ஜாமீன் மனு

வசந்தி தனக்கு ஜாமீன் கேட்டு ஏற்கெனவே தாக்கல் செய்திருந்த மனு விசாரணைக்கு வந்தது.

அப்போது வழக்கறிஞர் முத்துக்குமார் சார்பில் வசந்திக்கு ஜாமீன் வழங்க ஆட்சேபம் தெரிவித்து மனு தாக்கல் செய்யப்பட்டது.

அவரது வழக்கறிஞர் ஏ.கண்ணன் வாதிடுகையில், வசந்தி மீது பல வழக்குகள் உள்ளன. அவருக்கு ஜாமீன் வழங்கக்கூடாது என்றார். பின்னர் ஜாமீன் மனு விசாரணை செப். 6-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

மதுரை புத்தகத் திருவிழா நடைபெறாததால்

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸில் புத்தகக் காட்சி

## ● நாளை முதல் செப்.15-ம் தேதி வரை நடைபெறும்

■ மதுரை

மதுரை புத்தகத் திருவிழா நடைபெறாத நிலையில், அதற்கு பதிலாக நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சார்பில் புத்தகக் காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மதுரையில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் இறுதியில் தொடங்கி செப்.10 வரை புத்தகத் திருவிழா நடைபெறும். தென்னிந்திய புத்தகப் பதிப்பாளர் மற்றும் விற்பனையாளர் சங்கம் (பபாசி), மதுரை மாவட்ட நிர்வாகம் இணைந்து நடத்தும் இந்தப் புத்தகக் காட்சி, கரோனா காரணமாக கடந்த ஆண்டு நடைபெறவில்லை. இந்த ஆண்டும் நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அதற்கு பதிலாக வாசகர்கள் நலனை கருத்தில் கொண்டு இந்த ஆண்டு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் சார்பில், சிறப்பு புத்தகக் காட்சி நடைபெறும் என்று அந்நிறுவன மண்டல மேலாளர் கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

புத்தகத் திருவிழா நடைபெறாத நிலையில், மதுரை மேலக்கோபுரத் தெருவில் உள்ள எங்களது புத்தக விற்பனை நிலையத்தில் சிறப்பு புத்தகக் காட்சியை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். நாளை முதல் செப்.15-ம் தேதி வரை தினமும் காலை 9.30 முதல் இரவு 8.30 மணிவரை புத்தகக் காட்சி நடைபெறும். 10 முதல் 20 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்படும். குழந்தைகளுக்காக ரூ.10, ரூ.15, ரூ.20 என்ற குறைந்த விலைகளில் சிறுநூல் வரிசைகள் விற்பனைக்கு உள்ளன. மேலும், சிறுவர்களுக்கான அறிவியல், பொதுஅறிவு, விஞ்ஞானக் கதைப் புத்தகங்களுக்கு 20 சதவீத சிறப்புத் தள்ளுபடி உண்டு.

ரூ.5,000 மதிப்பு 15 புத்தகங்களைக் கொண்ட மார்க்சிய செவ்வியல் நூல்கள் தொகுப்பு ரூ.3,500-க்கும், ரூ.6,500 விலை கொண்ட கம்பராமாயண 8 நூல்கள் ரூ.4,500-க்கும் விற்கப்படும். இறையன்பு ஐ.ஏ.எஸ். எழுதிய நூல்களுக்கு 20 சதவீத தள்ளுபடியும், கலாம் பற்றிய நூல்களுக்கு 25 சதவீத தள்ளுபடியும் வழங்கப்படும்.

மொத்தமாக 5,000 ரூபாய்க்கு புத்தகங்கள் வாங்கினால், புத்தகங்களைப் பற்றிய ‘உங்கள் நூலகம்’ மாத இதழ் ஓராண்டு இலவசமாக வழங்கப்படும்.

சமூக இடைவெளி, முகக்கவசம் அணிந்து வாசகர்கள் புத்தகக் காட்சியில் பங்கேற்கலாம்.

# இன்று சிறப்பு தடுப்பூசி முகாம்

■ மதுரை

மதுரை ஆட்சியர் எஸ்.அனீஷ் சேகர் அறிவிப்பு: மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு தடுப்பூசி சிறப்பு முகாம் இன்று (செப்.2) நடைபெறுகிறது.

மதுரை வடக்கு, கிழக்கு, திருப்பரங்குன்றம், மேலூர், கொட்டாம்பட்டி, டி.கல்லுப்பட்டி, சேடப்பட்டி, திருமங்கலம், கள்ளிக்குடி, செல்லம்பட்டி, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, அலங்காநல்லூர் ஆகிய 13 ஊராட்சி ஒன்றியங்களில் இம்முகாம் நடைபெறுகிறது. இதுவரை கரோனா தடுப்பூசி செலுத்தாத மாற்றுத்திறனாளிகள் முதல் மற்றும் இரண்டாம் தவணை என எந்தத் தடுப்பூசியானாலும் செலுத்திக்கொள்ளலாம். காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் முகாமில் பங்கேற்று பயன் அடையலாம்.

அரசு கல்லூரியாக மாறிய உறுப்புக்கல்லூரிகளில்

# கிராமப்புற மாணவர்கள் சேர தயக்கம் ஏன்?

என்.சன்னாசி

■ மதுரை

அரசு கல்லூரியாக மாற்றப்பட்ட சில உறுப்புக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை குறைவாக உள்ளதாகப் புகார் எழுந்துள்ளது.

மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரக நிர்வாகத்தில் மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் 26 அரசு கலை அறிவியல் கல்லூரிகள் உள்ளன.

ஏற்கெனவே மதுரை காமராசர் பல்கலைக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கிய அருப்புக்கோட்டை, திருமங்கலம், சாத்தூர், தேனி கோட்டூர் ஆகிய உறுப்புக் கல்லூரிகளும், தற்போது அரசு கல்லூரிகளாக மாற்றப்பட்டுள்ளன.

இக்கல்லூரிகளில் கடந்த வாரம் மாணவர் சேர்க்கை தொடங்கியது. இக்கல்லூரிகளில் இளநிலை தமிழ், ஆங்கிலம், கணிதம், பி.காம் உள்ளிட்ட பாடப் பிரிவுகளே உள்ளன.

இந்த ஆண்டு ‘ஆல் பாஸ்’ திட்டத்தால் மாணவர் சேர்க்கை அதிகரிக்கும் என கல்லூரி முதல்வர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், அருப்புக்கோட்டையை ஒட்டிய அரசு கல்லூரியில் பி.காம் தவிர பிற பாடப்பிரிவுகளில் 20 சதவீதத்துக்கும் குறைவான மாணவர்களே சேர்ந்துள்ளனர்.

போதிய கட்டமைப்பு வசதியின்மை, கல்லூரி நிர்வாகத்துக்கு எதிராக சில கருத்துகளை முன்னாள் மாணவர்கள் பரப்பியதால் மாணவர் சேர்க்கை குறைந்திருக்குமோ என ஆசிரியர்கள் சந்தேகம் எழுப்புகின்றனர்.

இதுகுறித்து அக்கல்லூரி ஆசிரியர்கள் சிலர் கூறியதாவது:

கடந்த ஆண்டை விட கல்விக் கட்டணம் கூடுதல் என்றாலும், அத்தொகையைக் கூட செலுத்த முடியாத சூழலில் மாணவர்கள் உள்ளதாகத் தெரிகிறது. கட்டணம் செலுத்த கூடுதல் அவகாசம், கல்லூரி கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகளை கல்லூரிக் கல்வி இயக்குநரகம் மேற்கொண்டால் மாணவர் சேர்க்கை அதிகரிக்கும் என்றனர்.

இதுகுறித்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முத்துராமலிங்கம் கூறியதாவது:

மதுரை மண்டலத்தில் புதிதாக இணைந்த 4 கல்லூரிகளிலும் அரசு விதிமுறை படி மாணவர் சேர்க்கை நடக்கிறது. திருமங்கலம் போன்ற நகரையொட்டிய கல்லூரிகளில் முதல் பட்டியலிலேயே பெரும்பாலும் சேர்ந்துள்ளனர்.

எந்தக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை குறைவாக இருந்தாலும் ஆய்வு செய்து சேர்க்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# சின்னச் சின்னதாய்...

## மதுரை மாவட்டத்தில் தடுப்பூசி செலுத்த ஆர்வம் காட்டிய கல்லூரி மாணவர்கள்


**மதுரை:** மதுரை மாவட்ட கல்லூரிகளில் அமைக்கப்பட்டுள்ள கரோனா சிறப்பு தடுப்பூசி முகாம்களில் மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்று தடுப்பூசி செலுத்திக் கொண்டனர்.

மதுரை மாவட்டத்தில் 3 அரசு கல்லூரிகள், 21 அரசு உதவிபெறும் கல்லூரிகள், 48 தனியார் கல்லூரிகள் என மொத்தம் 72 கல்லூரிகள் உள்ளன. 33,959 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். 3,754 பேராசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

கரோனா ஊரடங்கில் தளர்வு அறிவிக்கப்பட்டதை அடுத்து அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மாணவ, மாணவிகள் கல்லூரிக்குள் நேற்று அனுமதிக்கப்பட்டனர். இளங்கலை மாணவர்களுக்கு சுழற்சி முறையில் வகுப்புகள் நடைபெறுகின்றன. முதுகலை மாணவர்களுக்கு மட்டும் தினந்தோறும் வகுப்புகள் நடை பெறுகின்றன.

மதுரை மாவட்டத்தில் தடுப்பூசி செலுத்தாத மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்திக் கொள்ள அந்தந்த கல்லூரி வளாகங்களில் சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இம்முகாமில் பங்கேற்ற மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் தடுப்பூசி செலுத்திக் கொண்டனர்.

## சத்திரப்பட்டி அருகே கார் மீது ஸ்கூட்டர் மோதி பள்ளி ஆசிரியை உயிரிழப்பு



▲ ஆர்த்தி

**மதுரை:** அலங்காநல்லூர் ஆதனூரைச் சேர்ந்தவர் ஆர்த்தி (22). தனியார் பள்ளி ஆசிரியை. இவரது தோழி வெள்ளியம்பட்டி குரல்மணி (21). இவர்கள் ஒரே ஸ்கூட்டரில் நேற்று மாலை மதுரையில் நத்தம் சாலை வழியாக ஊருக்கு சென்றனர். சத்திரப்பட்டி அருகே சீகுபட்டி சந்திப்பு எதிரே, இரு கார்கள் மோதி விபத்து ஏற்பட்டது. கார்களில் பயணித்த 6 பேர் காயமடைந்தனர். இதனிடையே, மதுரையில் இருந்து சென்ற ஆர்த்தியின் ஸ்கூட்டர் எதிர்பாராதவிதமாக விபத்துக்குள்ளான கார் மீது மோதியது. ஆர்த்தி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது தோழி குரல்மணி காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## திரைப்பட இயக்குநர் பா.ரஞ்சித் வழக்கு இறுதி விசாரணை ஒத்தி வைப்பு

**மதுரை:** திரைப்பட இயக்குநர் பா.ரஞ்சித், உயர் நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த மனு: நீலப்புலிகள் அமைப்பினர் 2019-ல் நடத்திய கூட்டம் ஒன்றில் பேசும்போது, பேரரசர் ராஜராஜசோழன் வரலாறு தொடர்பாக சில கருத்துகளை தெரிவித்தேன். டெல்டா மாவட்டங்களில் நிலமற்றவர்கள் நடத்தப்பட்ட விதம் குறித்து உமர்பரூக் எழுதிய செந்தமிழ் நாட்டு சேரிகள் என்ற புத்தகத்தில் இடம் பெற்றிருந்ததை பேசினேன்.

இந்த கருத்துகளை உள்நோக்கத்துடன் பேசவில்லை. எனது கருத்து எந்த சமூகத்துக்கும் எதிராக அமையவில்லை. இருப்பினும், என் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இந்த வழக்கை ரத்து செய்து உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது, ரஞ்சித் மீதான வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய தடை விதிக்கப்பட்டது. இந்த மனு நீதிபதி இளங்கோவன் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. பின்னர் வழக்கின் இறுதி விசாரணையை செப்.28-க்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

# கடல் அட்டைகளை கடத்தியவருக்கு ஜாமீன் மறுப்பு

■ மதுரை

கடல் அட்டை கடத்தல் வழக்கில் கைதானவரின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராமேசுவரத்தைச் சேர்ந்தவர் வில்லாயுதம். இவரை கடல் அட்டை கடத்திய வழக்கில் போலீஸார் கைது செய்தனர். இவ்வழக்கில் ஜாமீன் கேட்டு வில்லாயுதம் உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்து நீதிபதி பி.புகழேந்தி பிறப்பித்த உத்தரவு:

கடல் அட்டை கடத்தல் தொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்திருந்தாலும், வனத் துறையினர் தான் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாததால் சம்பந்தப்பட்டவர்கள் தப்பிச் செல்லும் நிலை உள்ளது.

கடல் வளத்தை கடல் அட்டைகள் பாதுகாக்கின்றன. எனவே, கடல் அட்டைகளை பாதுகாக்க வேண்டியது அவசியம். ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. இவ்வாறு நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.




▲ தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம் ஊராட்சிகளின் தலைவர்கள் பிடிஓவிடம் வேலை உறுதியளிப்பு பணிகள் சம்பந்தப்பட்ட வேலை அட்டை வழங்கும் பதிவேடு உள்ளிட்ட 9 பதிவேடுகளை ஒப்படைத்தனர்.

தே.கல்லுப்பட்டி ஒன்றியத்தில் 3 நாட்களில்

# ஊராட்சி தலைவர்களின் பிரச்சினைக்கு தீர்வு

## ● வட்டார வளர்ச்சி அலுவலர் ஆசிக் உறுதி

■ மதுரை

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம் புளியம்பட்டி ஊராட்சித் தலைவர் டி.மணிகண்டன் மற்றும் கல்லுப்பட்டி ஒன்றியத்துக்குட்பட ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்பினர், வட்டார வளர்ச்சி அலுவலரிடம் மனு அளித்து, திட்டப்பணிகள் குறித்த பதிவேடுகளை ஒப்படைத்தனர்.

மனுவில் அவர்கள் கூறியதாவது: எங்களது ஊராட்சிக்கு தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் சில பணிகளுக்கு நிர்வாக அனுமதி கிடைத்துள்ளது. ஆனால், இப்பணிகளைத் தொடங்க விடாமல் வேலை உறுதியளிப்பு திட்டப் பணிகளில் தலையிட்டு ஒன்றியக்குழு தலைவரின் கணவர் மற்றும் முன்னாள் அரசு வழக்கறிஞர் ஒருவர் அதிகாரம் செலுத்தி வருகின்றனர்.

இவர்களுக்கு ஆதரவாகச் செயல்படும் ஊராட்சி ஒன்றிய அலுவலக நிர்வாகத்தின் போக்கால், ஊராட்சிகளைச் சரிவர நிர்வாகம் செய்ய முடியவில்லை.

இதன் காரணத்தால், வேலை உறுதியளிப்பு பணிகள் சம்பந்தப்பட்ட வேலை அட்டை வழங்கும் பதிவேடு உள்ளிட்ட 9 பதிவேடுகளை தங்களிடம் ஒப்படைக்கிறோம். இப்பதிவேடுகளை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கிடையே, ஊராட்சித் தலைவர்களின் புகார் மனுவைப் பெற்றுக்கொண்ட வட்டார வளர்ச்சி அலுவலர் ஆசிக், இப்பிரச்சினைகள் தொடர்பாக 3 நாட்களில் பேசித் தீர்க்கப்படும் என்றும், அதுவரை போராட்டம் எதுவும் நடத்த வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டதாக ஊராட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

# கமுதியில் நிலமோசடி செய்த 2 பேர் மீது வழக்கு

■ ராமநாதபுரம்

ஆள்மாறாட்டம் செய்து பத்திரப்பதிவு மேற்கொண்டு நில மோசடி செய்த 2 பேர் மீது ராமநாதபுரம் மாவட்ட நில மோசடி தடுப்புப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

கமுதி காளியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் கே.செல்லையா (63). இவரது தாத்தா கருப்பனுக்கு 5 மகன்களும், ஒரு மகளும் இருந்தனர். கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு கருப்பன் இறந்துவிட்டார். அவருக்குச் சொந்தமாக அப்பகுதியில் உள்ள 1.51 ஏக்கர் நிலத்தில் அவரது வாரிசுகள் தற்போது விவசாயம் செய்து வருகின்றனர். இந்நிலத்துக்கு பட்டா மட்டுமே உள்ளது. பத்திரம் இல்லை.

இதனைப் பயன்படுத்திக் கொண்ட கமுதி வெள்ளையாபுரத்தைச் சேர்ந்த ராஜேந்திரன், விருது நகர் பகுதியைச் சேர்ந்த கருப் பன் என்பவரது பெயரில் ஆள் மாறாட்டம் செய்து கடந்த ஜூனில் கமுதி சார்பதிவாளர் அலுவலகத்தில் மோசடியாக பத்திரப்பதிவு செய்துள்ளார். பின்னர் பட்டாவிலும் மாற்றம் செய்துள்ளார்.

இதுகுறித்து அறிந்த செல்லையா அளித்த புகாரின் பேரில் ராஜேந்திரன், கருப்பன் ஆகியோர் மீது ராமநாதபுரம் மாவட்ட நில மோசடி தடுப்புப் பிரிவு போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பூட்டிய வீடுகளில் பகலில் கைவரிசை காட்டிய 3 பேர் கைது

## ● ரூ.1.10 லட்சம், 27 கிராம் நகை, மொபைல்போன், டிவிக்கள் பறிமுதல்

■ மதுரை

மதுரை மாவட்டம், திருமங்கலம், உசிலம்பட்டி, சமயநல்லூர் பகுதியில் பகல் நேரங்களில் பூட்டிய வீடுகளில் நடந்த திருட்டுச் சம்பவங்கள் குறித்து விசாரிக்க டிஎஸ்பி வினோதினி தலைமையில் தனிப்படை அமைத்து எஸ்பி வீ.பாஸ்கரன் உத்தரவிட்டார்.

தனிப்படையினர் விசாரணையில், பகல் வேளைகளில் மேற்கண்ட திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டது பேரையூர் எஸ். பாறைபட்டி ராஜாக்கனி (29), சுந்தரம் (32), சொக்கலிங்கபுரம் தங்கப்பாண்டி(31) ஆகியோர் எனத் தெரிய வந்தது. அவர்களை கைது செய்த போலீஸார், அவர்களிடம் இருந்து ரூ.1.10 லட்சம் ரொக்கம், 27.600 கிராம் நகைகள், 4 எல்இடி டிவிக்கள், 3 மொபைல் போன்கள், மடிக்கணினி மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை பறிமுதல் செய்தனர். இவற்றின் மதிப்பு ரூ.6.80 லட்சம். தனிப்படையினரை காவல் கண்காணிப்பாளர் பாஸ்கரன் பாராட்டினார்.



▲ மதுரையில் பூட்டிய வீடுகளில் கைவரிசை காட்டிய திருடர்களிடம் இருந்து கைப்பற்றப் பட்ட பொருட்கள்.

மதுரை மாவட்ட பிராய்லர் கறிக்கோழி மொத்த வியாபாரிகள் சங்கம்
இன்றைய (02.09.2021) விலை
₹ 127
முகக்கவசம் அணிவீர்
சமூக இடைவெளி பின்பற்றுவீர்

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper1). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup

TAMILTH ALL 1 TNadu_01 A.M.PRABHAKARAN 21_31_12



பொன்மொழி: பேராசையை விலக்குங்கள். உங்கள் சொத்து செழிப்படையும். - பிளேட்டோ

இணையம்: பெங்களூரு நேச்சுரோ நிறுவனம் பழச்சாறின் சத்து, நிறம், சுவை மாறாமல், அதை பல்வேறு இனிப்புகளாக தயாரித்து வருகிறது. இதன் https://naturo.in/ இணையதளத்தில் தயாரிப்புகள் குறித்து அறிவதுடன், ஆன்லைன் மூலம் ஆர்டர் செய்யலாம்.

பொதுஅறிவு: விண்வெளியில் புவியீர்ப்பு விசை இல்லாததால் வீரர்கள் மிதந்துகொண்டே இருப்பார்கள். இதனால் உடல் மிகவும் சிரமப்படும். குமட்டல் ஏற்படும். கண்களும், செவிகளும் முரண்பட்ட தகவல்களைத் தருவதால், மூளை சிறிதுநேரம் தடுமாறும்.

# தவணை முறையில் வீடுகள் விற்கும் திட்டம் அறிமுகம்

**● பேரவையில் வீட்டுவசதித் துறை அமைச்சர் முத்துசாமி தகவல்**

■ சென்னை

தமிழக சட்டப்பேரவையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீது, உறுப்பினர்களின் விவாதங்களுக்கு பதில் அளித்து அமைச்சர் சு.முத்துசாமி பேசியதாவது:

சுயநிதி திட்டத்தின் கீழ் சென்னை பாடிக்குப்பத்தில் ரூ.62.77 கோடியில் 155 அடுக்குமாடி குடியிருப்புகள், அயனாவரத்தில் ரூ.86.31 கோடியில் 216 குடியிருப்புகள், ஈரோடு பெரியார் நகர், சம்பத் நகரில் ரூ.40.60 கோடியில் 108 குடியிருப்புகள் கட்டப்படும்.

அம்பத்தூரில் ரூ.8.87 கோடியில் 151 மனைகள், சோழிங்கநல்லூரில் ரூ.4.75 கோடியில் 117 மனைகள், ஆவடியில் ரூ.1.74 கோடியில் 45 மனைகள், வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் ரூ.8.50 கோடியில் 306 மனைகள், சேலம் மாவட்டம் ஆத்தூரில் ரூ.4 கோடியில் 82 மனைகள், ஓசூரில் ரூ.4 கோடியில் 54 மனைகள், மதுரை மாவட்டம் தத்தநேரியில் ரூ.2.40 கோடியில் 119 மனைகள் மேம்படுத்தப்படும்.

ஓசூரில் ரூ.25 கோடியிலும், மதுரை மாவட்டம் தோப்பூரில் ரூ.23.20 கோடியிலும் வணிக வளாகம் கட்டப்படும். சென்னை லாயிட்ஸ் காலனியில் குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் ரூ.451 கோடியில் மறுமேம்பாடு செய்யப்படும்.

வீட்டு வசதி வாரியத் திட்டங்களில் இருந்து உருவாகும் குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு தொழில்நுட்ப உதவி மற்றும் நிதியுதவி வழங்குவதற்காக ‘மூலதன நிதி’ உருவாக்கப்படும்.

பொதுமக்கள் தொடர்புடைய வாரிய ஒதுக்கீட்டு ஆணை, குத்தகை ஒப்பந்தம் மற்றும் விற்பனைப் பத்திரம் ஆகியவை தமிழில் வழங்கப்படும். தகுதிவாய்ந்த 3-ம் தரப்பு கண்காணிப்புக் குழு மூலம் வீட்டு வசதி வாரியக் கட்டிடங்களின் உறுதித்தன்மையும், தொழில்நுட்பமும் உறுதிப்படுத்தப்படும்.

பொருளாதாரத்தில் நலிவுற்ற மற்றும் குறைந்த வருவாய், மத்திய வருவாய் பிரிவுகளில் வீடு வாங்குபவர்களின் பொருளாதார அழுத்தத்தை குறைக்கும் வகையில், தவணை முறை திட்டம் மீண்டும் அறிமுகப்படுத்தும்.

**விற்பனையாகாத வீடுகள்**

தேவையில்லாத இடத்தில், தரமற்ற வீடுகளாக கட்டியதால் 6,900 வீடுகள் விற்காமல் உள்ளன. எனவே, வீடுகள் இனி தரமானதாகக் கட்டப்படும். ஏற்கெனவே தவணை முறையில் வீடுகள் விற்றபோதும், இன்னமும் 1,078 வீடுகள் விற்காமல் உள்ளன.

சோளிங்கர், வடலூர், திருக்கோவிலூர் மற்றும் நீலகிரி மாவட்டம் கூடலூர் ஆகிய நகரங்களுக்கு முழுமைத் திட்டங்கள் (Master Plans) தயாரிக்கப்படும். மயிலாடுதுறையில் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அமைக்கப்படும். 18 மாவட்டங்களில் வீட்டு வசதி வாரியத்துக்கு ரூ.60 கோடியில் அலுவலகங்கள் கட்டப்படும்.

பொதுமக்களின் கருத்துகளைப் பெற்று, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களின் சில பகுதிகள், அரக்கோணத்தை உள்ளடக்கி சென்னை பெருநகரப் பகுதி விரிவாக்கப்படும்.

மீஞ்சூர் முதல் வண்டலூர் வரையிலான வெளிவட்டச் சாலை அமைந்துள்ள நிலத்தில், ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்படும். கோயம்பேடு மொத்த விற்பனை வளாகம் ரூ.20 கோடியில் மேம்படுத்தப்படும். அங்கு உணவகம் மற்றும் இரவு தங்கும் விடுதி ஆகியவை ரூ.2 கோடி மதிப்பில் அக்டோபருக்குள் கட்டி முடிக்கப்படும்.

பழைய மகாபலிபுரம் சாலையையும், கிழக்கு கடற்கரைச் சாலையையும் இணைக்கும் வகையில், ஒக்கியம் துறைப்பாக்கம் கண்ணகி நகருக்கும், ஈஞ்சம்பாக்கத்துக்கும் இடையே ஏற்கனவே உள்ள சாலைகளை அகலப்படுத்தி, பக்கிங்காம் கால்வாய் மீது ரூ.180 கோடியில் உயர்மட்ட சுழற்சாலை மேம்பாலம் கட்டப்படும்.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் (சிஎம்டிஏ) தகவல் தொழில்நுட்ப சேவைகள் ரூ.4 கோடியில் செயல்படுத்தப்படும்.

பட்டினப்பாக்கத்தில் 25.16 ஏக்கரில் பெரிய வணிக வளாகம் கட்ட ஆய்வு மேற்கொள்ளப்படும். எல்ஐசி போன்று சென்னையின் அடையாளமாக அது உருவாக்கப்படும்.

வீட்டு வசதி வாரியத்தால் 30 ஆண்டுகளுக்கு முன் கட்டி ஒப்படைக்கப்பட்ட குடியிருப்புகளில், ஆயிரக்கணக்கான வீடுகள் எப்போது இடிந்துவிழுமோ என்ற நிலையில் இருக்கின்றன. குறிப்பாக, கோவை சிங்காநல்லூரில் 15 ஏக்கரில் 960 வீடுகள் கொண்ட வளாகம் இடியும் நிலையில் இருக்கிறது.

இதேபோல, பெசன்ட் நகர், அண்ணா நகர் மேற்கு போன்ற பகுதிகளில் 100-க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் இடியும் நிலையில் உள்ளன. இந்த வீடுகளை இடித்துவிட்டு, புதிய குடியிருப்புகளை கட்ட வீட்டு வசதி சங்கத்தினருடன் சேர்ந்து முயற்சிக்குமாறு முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

குடிசை மாற்று வாரியத்தின் பெயர்

# ‘தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்’ என மாற்றம்

**● முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு**

■ சென்னை

சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்ட அறிவிப்பு:

இன்று நடந்து கொண்டிருக்கும் மானிய கோரிக்கையில் (வீட்டு வசதி) குடிசை மாற்று வாரியமும் இணைந்துள்ள காரணத்தால், அது சம்பந்தமான அறிவிப்பை வெளியிடுகிறேன். கோட்டையில் இருந்தாலும் குடிசைவாழ் மக்களின் வாழ்க்கைக்காக, அவர்களின் முன்னேற்றத்துக்காக சிந்தித்தவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி. முதல்முறையாக ஆட்சிக்கு வந்தபோது, அந்த மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக குடிசை மாற்று வாரியம் என்ற ஒரு திட்டத்தை தொடங்கினார். அதன்மூலம் பல்லாயிரக் கணக்கான அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டிக் கொடுத்தார்.

அன்று மத்திய அமைச்சராக இருந்த பாபு ஜெகஜீவன் ராம், இந்த திட்டத்தை பாராட்டி, புகழ்ந்து பேசியுள்ளார். இது தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களிலும் கொண்டுவரப்பட வேண்டும் என்ற அவரது எண்ணத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். அந்த அளவுக்கு இந்த குடிசை மாற்று வாரியம் மிகச் சிறப்பாக தன் கடமையைச் செய்துள்ளது, செய்து கொண்டிருக்கிறது.

ஏழை, எளிய மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த வாரியம், இனிமேல், ‘தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்’ என்ற பெயரில் அழைக்கப்படும். குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல; குடிசையில் வாழும் மக்கள் வாழ்வாதாரத்தையும் அவர்கள் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தப் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.

இவ்வாறு முதல்வர் அறிவித்தார்.

(C) KSL Media Ltd.

புளியந்தோப்பு குடிசை மாற்று வாரிய

# கட்டிட ஆய்வறிக்கை வந்த பின் அடுத்தகட்ட நடவடிக்கை

**● ஊரகத் தொழில் துறை அமைச்சர் உறுதி**

■ சென்னை

சட்டப்பேரவையில் வீட்டுவசதி, சமூக நலத்துறை மானிய கோரிக்கைகள் மீது வந்தவாசி தொகுதி திமுக உறுப்பினர் அம்பேத்குமார் பேசியதாவது:

சென்னை புளியந்தோப்பு குடிசை மாற்று வாரிய கட்டிடத்தின் உறுதித்தன்மையை ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழுவில் இருப்பவர்கள், குழுவின் அறிக்கை எப்போது கிடைக்கும் என்பது உள்ளிட்ட விவரங்களை வெளியிட வேண்டும்.

அதேபோல, மவுலிவாக்கம் சம்பவத்தில் அப்போதிருந்த அமைச்சர், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் மற்றும் வடிவமைப்பு அனுமதி அதிகாரிகள் உள்ளிட்ட அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது தமிழகத்தில் கட்டிட தளப்பரப்பு குறியீடு அனுமதி 2 மடங்காக உள்ளது. இதை உயர்த்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அப்போது பேசிய ஊரகத் தொழில் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், “புளியந்தோப்பு குடிசை மாற்று வாரிய கட்டிடத்தை ஆய்வு செய்யும் பணியில், சென்னை ஐஐடியின் சார்பு அமைப்பான கியூப் நிறுவனத்தின் பேராசிரியர் பத்மநாபன் தலைமையில் 11 பேர் கொண்ட குழு ஈடுபட்டுள்ளது. இந்த குழுவானது 2 வாரத்தில் தனது அறிக்கையை அளிப்பதாகக் கூறியுள்ளது. அந்த அறிக்கை வந்ததும் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

7,500 குடிசைமாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகள்

# ரூ.1,200 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைப்பு

**● அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு**

■ சென்னை

தமிழக சட்டப்பேரவையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்கு பிறகு ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வெளியிட்ட அறிவிப்புகள்:

சென்னை மற்றும் இதர நகரங்களில் பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு சிதிலமடைந்த நிலையில் உள்ள 7,500 குடிசைமாற்று வாரிய குடியிருப்புகள் ரூ.1,200 கோடி செலவில் மறுசீரமைக்கப்படும். மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கான முழுத்தொகை செலுத்திய 10 ஆயிரம் குடும்பங்களுக்கு நீண்ட காலமாக வழங்கப்படாமல் உள்ள விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படும். மறுவிற்பனை மூலம் தற்போது வசித்து வரும் குடியிருப்புவாசிகளுக்கு விற்பனை பத்திரம் வழங்க புதிய சமரச திட்டம் உருவாக்கப்படும்.

குடிசைமாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு முழுத் தொகை செலுத்திய 15 ஆயிரம் பயனாளிகளுக்கு நடப்பு நிதியாண்டில் விற்பனை பத்திரங்கள் படிப்படியாக வழங்கப்படும். குடிசை மாற்றுவாரிய கட்டுமான பணிகளின் தரத்தை ஆய்வுசெய்ய ஐஐடி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட 3-வது தரப்பு தரக்கட்டுப்பாட்டு வல்லுநர்கள் குழுக்கள் அமைக்கப்படும். வாரியத்தின் குடியிருப்புகளை மறுசீரமைப்பு செய்யும் காலத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை ரூ.8 ஆயிரத்தில் இருந்து ரூ.24 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

பராமரிப்பின்றி பழுதடைந்த அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.70 கோடி செலவில் புதுப்பொலிவுடன் புனரமைக்கப்படும். குடியிருப்போர் நலச்சங்கங்களின் பங்களிப்புடன், ‘நம் குடியிருப்பு - நம் பொறுப்பு’ என்ற திட்டத்தின் மூலம் பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும். புதிதாக கட்டப்படும் குடிசைமாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளில் மாற்றுத் திறனாளிகளின் தேவைக்கேற்ப வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் குடிசைப்பகுதி வாழ் இளைஞர்களுக்கு முழுநிதியுதவி வழங்கி விளையாட்டுத்திறன் மேம்படுத்தப்படும். வாரிய திட்டப் பகுதிகள் மற்றும் குடிசைப் பகுதிகளில் வாழும் 10 ஆயிரம் இளைஞர்களுக்கு திறன்மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்து வேலை வாய்ப்பு பெற ஊக்குவிக்கப்படும்.

# தமிழகத்தில் வழக்கிழந்த 89 சட்டங்களை நீக்க மசோதா

**● பேரவையில் அமைச்சர் ரகுபதி தாக்கல்**

■ சென்னை

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரம் முடிந்த நிலையில், சட்ட முன்வடிவை சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி தாக்கல் செய்தார். சட்ட முன்வடிவுக்கான நோக்க காரண உரையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு மாநில சட்ட ஆணையமானது, பல்வேறு இயற்றுச் சட்டங்கள் மிகவும் பழமையானதாக மற்றும் வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கும் சட்டங்களை நீக்குவதற்கு பரிந்துரைத்துள்ளது. மேலும், மத்திய அரசின் சட்டமியற்றும் துறை, சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சகம் ஆகியவை 1858-ம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய தொழிலாளர் சட்டத்தை நீக்கம் செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கும்படி தெரிவித்துள்ளது. மாநில சட்ட ஆணையம் மற்றும் மத்திய அரசின் வேண்டுகோளைக் கருத்தில் கொண்டு மிகவும் பழமையான மற்றும் வழக்கத்தில் இல்லாமல் போயுள்ள சட்டங்களை நீக்க அரசு முடிவெடுத்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அந்த வகையில், கடந்த 1858 - தமிழ்நாடு கட்டாய தொழிலாளர் சட்டம், 1866 - தமிழ்நாடு கால்நடை நோய் சட்டம், 1976 - தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி சட்டம் மற்றும் வேளாண் விளைபொருள் சந்தை திருத்த சட்டம், பந்தைய வரி, மாநகர காவல், பொது விற்பனை வரி உள்ளிட்ட 89 சட்டம் மற்றும் திருத்தச் சட்டங்களை நீக்குவதற்கான சட்ட முன்வடிவு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த சட்ட முன்வடிவு, பேரவைக் கூட்டத்தின் இறுதி நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட உள்ளது.



▲ இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் 65-வது காப்பீட்டு வார விழாவை சென்னையில் நேற்று குத்துவிளக்கேற்றித் தொடங்கிவைத்தார் எல்ஐசி தென்மண்டல மேலாளர் கதிரேசன்.

# 2020-21-ல் 24.54 லட்சம் பாலிசிகள் மூலம் ரூ.15,812 கோடி முதிர்வு உரிமம்

**● எல்ஜசி தென்மண்டலம் முதலிடம்: மேலாளர் கதிரேசன் தகவல்**

■ சென்னை

2020-21 வணிக ஆண்டில் 24.54 லட்சம் பாலிசிகள் மூலம் ரூ.15,812 கோடி முதிர்வு உரிமங்கள் வழங்கி, தென்மண்டலம் முதலிடம் பிடித்துள்ளதாக இந்திய ஆயுள் காப்பீட்டு (எல்ஐசி) நிறுவன தென் மண்டல மேலாளர் கதிரேசன் தெரிவித்தார்.

எல்ஐசி நிறுவன தென்மண்டலத்தின் 65-வது காப்பீட்டு வார விழா நேற்று தொடங்கியது. வரும் 7-ம் தேதி வரை நடைபெறும் இவ்விழாவை, தென் மண்டல மேலாளர் கதிரேசன் தொடங்கிவைத்தார். பின்னர் அவர் பேசியதாவது:

எல்ஐசி தென்மண்டலம் கடந்த மார்ச் 31-ம் தேதி வரை ஒற்றைப் பிரீமிய இலக்கை அடைந்ததன் மூலம், மண்டலங்களுக்கிடையே முதலிடத்தில் உள்ளது. அதேபோல, பிரீமிய வருமான இலக்கை அடைந்ததன் அடிப்படையில் 2-ம் இடத்தில் உள்ளது. தென்மண்டலம் 17.11 லட்சம் பாலிசிகள் மற்றும் முதல் பிரீமிய வருமானமாக ரூ.6,357 கோடிகளைப் பெற்றுள்ளது. வணிக ஆண்டு 2020-21-ல் உரிமங்களை அளித்ததில் தென்மண்டலம் முன்னோடியாகத் திகழ்கிறது. 24.54 லட்சம் பாலிசிகள் மூலம் ரூ.15,812 கோடி முதிர்வு உரிமங்கள் அளித்து, அனைத்து மண்டலங்களிலும் தென்மண்டலம் முதலிடத்தில் உள்ளது.

**தொடர்பு விரிவாக்கத் திட்டம்**

எல்ஐசி நிறுவனம் தனது வாடிக்கையாளர்கள் மட்டுமின்றி, அவர்களின் அடுத்த தலைமுறையுடனும் தொடர்பை ஏற்படுத்துவதற்காக ‘தொடர்பு விரிவாக்கத் திட்டம்’ என்ற புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம், வணிக ஆண்டு 2020-21-ல் 53,954 பாலிசிதாரர்களைத் தொடர்பு கொண்டு, ரூ.308.57 கோடி பிரீமியம் ஈட்டியுள்ளது.

பாலிசிதாரர்களும், அவர்களுடைய குடும்பங்களும் பொருளாதாரப் பாதுகாப்புடன் இருக்க ‘சி2சி’ என்ற முயற்சியின் மூலம் 53 லட்சம் வாடிக்கையாளர்களை தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு, பாலிசிகளை புதுப்பிக்க உதவியது. அதன் மூலமாக, அடுத்தடுத்த மாதங்களில் பிரீமிய வருமானம் உயர்ந்தது. இவ்வாறு கதிரேசன் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில், எல்ஐசி நிறுவன அதிகாரிகள், ஊழியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# இஸ்கான் நிறுவனர் ஸ்ரீலபிரபுபாதாவின் 125-வது பிறந்த நாள் விழா

**● ரூ.125 சிறப்பு நாணயம் வெளியிட்டார் பிரதமர் நரேந்திர மோடி**

■ சென்னை

இஸ்கான் எனப்படும் ஹரே கிருஷ்ணா இயக்கத்தை தோற்றுவித்த ஆச்சார்யர் ஏ.சி.பக்தி வேதாந்தா சுவாமி பிரபுபாதாவின் 125-ம் ஆண்டு பிறந்த தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

ஸ்ரீலபிரபுபாதா, நவீனகால இந்திய ஆன்மிக கலாச்சாரம், தத்துவம் மற்றும் பாரம்பரியத்துக்கான சிறந்த தூதர் ஆவார். இவர் இந்தியாவின் அமைதி மற்றும் நல்லெண்ண செய்தியை மேற்கத்திய நாடுகளில் அறிமுகம் செய்வதற்காக தனது 69-வது வயதில் கொல்கத்தாவில் இருந்து நியூயார்க் நகருக்கு சென்றார்.

அங்கு 12 ஆண்டுகள் இருந்த ஸ்ரீலபிரபுபாதா கிருஷ்ணர் கோயில்கள், பதிப்பகம், கல்வி நிறுவனங்களின் சர்வதேச கூட்டமைப்பை நிறுவினார். அந்த காலகட்டத்தில் அவர் உலகம் முழுவதும் 14 முறை பயணம் செய்து ‘வசுதெய்வ குடும்பகம்’ பற்றியும், மனித சமுதாயத்தின் ஒற்றுமையையும் போதித்தார்.

மேலும் பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம், சைதன்ய சரிதாம்ருதம் ஆகியவற்றின் அடிப்படையிலான 70-க்கும் மேற்பட்ட பக்தி இலக்கியங்களை எழுதினார். இதனால் அவர் தலைசிறந்த தத்துவ அறிஞர், ஆன்மிகத் தலைவர், துறவி, சீர்திருத்தவாதி எனப் போற்றப்படுகிறார்.

அவர் வயது, நாடு, மதம், பாலினம், சாதி, வர்க்க பேதம் பார்க்காமல் அனைவரையும் மேம்படுத்தும் பணியில் ஓய்வின்றி ஈடுபட்டார். இவரது போதனைகளால் லட்சக் கணக்காண மக்கள் ஈர்க்கப்பட்டனர்.

ஸ்ரீலபிரபுபாதாவின் போதனைகளை அனைத்து தரப்பு மக்களையும் அறியச் செய்வது அவசியமாகும். சமகால சமுதாய மக்கள் அவரது போதனைகளால் வழிநடத்தப்பட வேண்டும் என விரும்புகிறோம். அவருக்கு நெருக்கமாக மக்களைக் கொண்டுவருவது, அவரது புனித நினைவுக்கான எங்களது பணிவான அஞ்சலியாக இருக்கும். இவ்வாறு இஸ்கான் அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பிரதமர் புகழாரம்**

இஸ்கான் நிறுவனர் ஸ்ரீலபிரபுபாதாவின் 125-வது பிறந்த நாள் விழாவை இணையவழியில் நேற்று தொடங்கிவைத்த பிரதமர் நரேந்திர மோடி, அவரது உருவம்



பொறித்த 125 ரூபாய் சிறப்பு நாணயத்தை வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில், மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் கிஷன் ரெட்டி மற்றும் இஸ்கான் அமைப்பு துறவிகள், நிர்வாகிகள் பங்கேற்றனர். இதில் பிரதமர் மோடி பேசியதாவது:

கிருஷ்ண பக்தியை உலகெங்கும் பரப்பிய ஸ்ரீலபிரபுபாதா, கிருஷ்ணர் பிறந்த நாளிலேயே பிறந்திருப்பது ஆச்சரியமான நிகழ்வு.

கிருஷ்ண பக்தியின் மூலம் உலகெங்கும் கோடிக்கணக்கான பக்தர்களை மனநிறைவு கொள்ளச் செய்தவர் ஸ்ரீலபிரபுபாதா. கிருஷ்ணர் மீது மட்டுமல்ல, பாரத நாட்டின் மீதும் பக்தி கொண்டவர் பிரபுபாதா. சுதந்திரப் போராட்டத்திலும் பங்கேற்றுள்ளார். ஒத்துழையாமை இயக்கத்துக்கு ஆதரவாக, ஆங்கில அரசு நடத்திய கல்லூரியில் சேர மறுத்துள்ளார்.

அந்நியர்கள் ஆண்டபோது பக்திதான் இந்தியாவின் ஆன்மாவை உயிர்ப்புடன் வைத்திருந்தது. ஸ்ரீலபிரபுபாதா போன்ற மகான்கள், பக்தி உணர்வுடன் சமுதாயத்தை இணைத்து மக்களுக்கு நம்பிக்கை அளித்தனர்.

சுவாமி விவேகானந்தர் வேதத்தின் கருத்துகளை மேற்கு நாடுகளுக்கு கொண்டுசென்றார். அதேபோல, ஸ்ரீலபிரபுபாதா பக்தி, யோகாவை உலகம் முழுவதும் எடுத்துச் சென்றார். பல்வேறு நாடுகளில் உள்ள நூற்றுக்கணக்கான இஸ்கான் கோயில்கள், இந்திய கலாச்சாரத்தை உயிர்ப்புடன் வைத்துள்ளன.

மனிதநேயத்தைப் பரப்பி வரும் இஸ்கான் அமைப்பு, பேரிடர் உள்ளிட்ட நெருக்கடியான காலகட்டத்தில், மக்களுக்கு சேவையாற்றி வருகிறது. தொற்று நோய் பரவலைத் தடுப்பதிலும் இஸ்கான் பெரும் பங்காற்றி வருகிறது. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

உயிரிழந்த தொழிலாளி குடும்பத்துக்கு ரூ.5 லட்சம் நிவாரணம்

# மதுரை பால விபத்தில் நிபுணர் குழு அறிக்கை பெற்று நடவடிக்கை

**● பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு**

■ சென்னை

மதுரை நாராயணபுரத்தில் நடைபெற்ற பால விபத்து தொடர்பான சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தை சட்டப்பேரவையில் மதிமுக உறுப்பினர் பூமிநாதன், காங்கிரஸ் சட்டப்பேரவை கட்சித்தலைவர் கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் அரசின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதற்கு பதிலளித்து பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது: இந்த விபத்துக்கு ஒப்பந்ததாரர்களின் கவனக்குறைவே காரணம் என்று தெரிய வருகிறது.

விபத்தில் உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த ஆகாஷ் சிங் உயிரிழந்தார். பிஹாரைச் சேர்ந்த சுரேஷ்குமார் சிறு காயத்துடன் தப்பினார். விபத்து நடந்ததும் மதுரை மாவட்ட ஆட்சியர் மற்றும் நிதியமைச்சர் அங்கு ஆய்வு நடத்தினர். பத்திரப் பதிவு அமைச்சர், எம்எல்ஏக்கள் தளபதி, பூமிநாதன், எம்பி சு.வெங்கடேசன் ஆகியோரும் பார்வையிட்டனர். பின்னர் நானும் நிதியமைச்சரும் அங்கு ஆய்வு செய்தோம்.

ஹைட்ராலிக் ஜாக் இயந்திரத்தில் ஆயில் வெளியேறியதால், விபத்து ஏற்பட்டுள்ளது. சாதாரண கூலிப்பணியாளர்கள் தான் இப்பணியை மேற்கொண்டிருந்தனர். பொதுவாக இதுபோன்ற பணியில் ஈடுபடும் போது ஜெய்ப்பூர் நிறுவனம் அங்கு கண்காணித்திருக்க வேண்டும். பொறியாளர்கள் யாரும் அங்கு இல்லை.

விபத்து நடைபெற்றது குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க திருச்சி என்ஐடி பேராசிரியர் பாஸ்கரன் தலைமையில் 4 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு ஆய்வு நடந்து வருகிறது. கட்டுமான நிறுவனத்தின் மீது தல்லாகுளம் காவல்நிலையத்தில் வழக்கு பதியப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் இயக்குநரிடம் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு அறிவுறுத்தியுள்ளது.

விபத்தில் உயிரிழந்த ஆகாஷ் சிங் குடும்பத்துக்கு கட்டுமான தொழிலாளர் நலவாரிய நிதியில் இருந்து ரூ.5 லட்சம் வழங்க உத்தரவிட்டுள்ளார். அந்த குடும்பத்துக்கு நிதி வழங்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper1). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup

4 மாதங்களுக்கு பிறகு சுற்றுலா தலங்கள் திறப்பு

# கொடைக்கானலில் தூண் பாறையை தழுவிய மேகங்கள்

● சுற்றுலா பயணிகள் செல்ஃபி எடுத்து மகிழ்ச்சி

**கொடைக்கானல்**

கொடைக்கானலில் தூண்பாறை, மோயர் பாயிண்ட் பள்ளத்தாக்கில் தழுவிச் சென்ற மேகக் கூட்டங்களை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர்.

கரோனா பரவல் 2-வது அலையால் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு சுற்றுலா தலங்களுக்கு செல்ல பொதுமக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. தற்போது கரோனா பரவல் கட்டுக்குள் வந்துள்ளது. இந்நிலையில், நேற்று முதல் வனத்துறை சுற்றுலாத் தலங்களான மோயர் பாய்ண்ட், பைன் பாரஸ்ட், குணா குகை, தூண்பாறை, பசுமைப் பள்ளத்தாக்கு ஆகிய பகுதிகளுக்குச் செல்ல சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. தூண் பாறை, மோயர் பாய்ண்ட் பள்ளத்தாக்கில் தழுவிச் சென்ற மேகக் கூட்டங்களை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர். 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை அழைத்து வருவதை தவிர்க்கும்படி வனத் துறையினர் தெரிவித்துள்ளனர்.



▲ கொடைக்கானலில் தூண் பாறையை தழுவிச்சென்ற மேகக் கூட்டங்கள் முன் செல்ஃபி எடுத்துக் கொண்ட சுற்றுலாப் பயணிகள்.

# இடிந்து விழும் நிலையில் தனுஷ்கோடி அரசு நடுநிலை பள்ளி

● ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் சீரமைக்குமா?

எஸ். முஹம்மது ராஃபி

**ராமேசுவரம்**

தனுஷ்கோடியில் இடிந்து விழும் நிலையில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1964-ம் ஆண்டு தனுஷ்கோடி புயலில் சேதமடைந்தது. அதன்பின் 40 ஆண்டுகளுக்கு பின்பு 2004-ம் ஆண்டில் அங்கு பள்ளியை மாவட்ட நிர்வாகம் சீரமைத்தது.

தற்போது 8-ம் வகுப்பு வரை உள்ள இப்பள்ளியில் (2021-22) 65 மாணவர்கள் படிக்கிறார்கள். 4 ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். கரோனா பரவலால் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக இப்பள்ளி மூடப்பட்டிருந்தது. இப்பள்ளிக் கட்டிடம் பைபர் பொருட்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. தனுஷ்கோடியில் வீசும் கடல் காற்றுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் கூரை சேதமடைந்துவிட்டது. பள்ளியில் மின்சார வசதியில்லை.

ராமநாதபுரம் முன்னாள் எம்எல்ஏ ஜவாஹிருல்லா மற்றும் தனியார் அமைப்பு ஒன்று வழங்கிய சோலார் பேனல்களும் சேதமடைந்துள்ளன. குடிநீர் கிணறு தூர்வாராமல் மாசு அடைந்தும், கழிவறைகள் பயன்படுத்த முடியாமல் மணல் மூடியும் காணப்படுகிறது.

இது குறித்து பெற்றோர் கூறியதாவது:

அதிகாரிகளிடம் பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை இல்லை. இடிந்து விழும் நிலையில் உள்ள பள்ளிக் கட்டிடத்தை அகற்றிவிட்டு புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப மாட்டோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.





▲ தனுஷ்கோடி அரசு பள்ளியின் முகப்பு (வலது) மேற்கூரை சேதமடைந்துள்ள தனுஷ்கோடி பள்ளி வகுப்பறை.

(C) KSL Media Ltd.

## சின்னச் சின்னதாய்...

### ஆன்லைன் மூலம் ரூ.15 ஆயிரம் பறிப்பு ராணுவ வீரர் பெயரில் ஏமாற்றியவர் மீது வழக்கு

**மதுரை:** மதுரை உசிலம்பட்டி அருகிலுள்ள தாதம்பட்டியைச் சேர்ந்தவர் ராஜபாண்டியன்(31). இவர் அதே பகுதியில் ஸ்டுடியோ மற்றும் உள்ளூர் கேபிள் டிவி நடத்துகிறார். இவர் டிவி ஒன்றை வாங்க ஓஎல்எக்ஸ் ஆப் மூலம் கடந்த மாதம் 8-ம் தேதி விண்ணப்பித்தார். இதை பார்த்துவிட்டு ராணுவ வீரர் எனக் கூறிக் கொண்டு அமித்குமார் என்பவர் ராஜபாண்டியனிடம் பேசினார்.

மேலும், அவரது ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமத்தை அனுப்பி நம்ப வைத்தார். இதைத்தொடர்ந்து ரூ.15 ஆயிரத்தை ஆன்லைன் மூலம் ராஜபாண்டி அனுப்பினார். இருப்பினும், டிவியை டெலிவரி செய்ய மேலும் ரூ.11.550 அனுப்பும்படி கூறினார். இதனால் சந்தேகம் அடைந்த ராஜபாண்டி, இது தொடர்பாக மதுரை மாவட்ட சைபர் கிரைம் போலீஸில் புகார் அளித்தார். அதன்பேரில், காவல் ஆய்வாளர் சுதந்திராதேவி, அமித்குமார் மீது வழக்குப் பதிவு செய்து விசாரிக்கிறார்.



▲ அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓபிஎஸ் மனைவி விஜயலட்சுமி மறைவுக்கு ராமேசுவரத்தில் அஞ்சலி செலுத்திய மாவட்ட செயலாளர் முனியசாமி, முன்னாள் எம்.பி. அன்வர் ராஜா உள்ளிட்ட அதிமுகவினர்.

### திருத்தங்கல்லில் 2 டன் ரேஷன் அரிசி பறிமுதல்: 2 பேர் கைது

**சிவகாசி:** சிவகாசி அருகே திருத்தங்கல் சரஸ்வதி நகரில் பானுமதி என்பவருக்குச் சொந்தமான இடத்தை அதே பகுதியைச் சேர்ந்த ராமர், குருசாமி ஆகியோர், பட்டாசு உற்பத்திக்குத் தேவையான குழாய் தயாரிப்பு நிறுவனத்தை நடத்த வாடகைக்கு எடுத்திருந்தனர். இங்கு ரேஷன் அரிசியை கடத்தி வந்து பதுக்கி வைத்திருப்பதாக சிவகாசி டிஎஸ்பி பாபு பிரசாத்துக்கு தகவல் கிடைத்தது. அவரது தலைமையில் உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு எஸ்.ஐ காளிதாஸ் மற்றும் போலீஸார், பறக்கும்படை தனி வட்டாட்சியர் சங்கரபாண்டியன், ஆர்.ஐ விக்னேஷ்வரன் ஆகியோர் குடோனில் ஆய்வு செய்தனர். அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 2 டன் ரேஷன் அரிசியை போலீஸார் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக ராமர், குருசாமி ஆகியோரை திருத்தங்கல் போலீஸார் கைது செய்தனர்.

### சாத்தூர் அருகே தீப்பெட்டி ஆலை தீ விபத்தில் இரண்டு பெண்கள் படுகாயம்

**சாத்தூர்:** விருதுநகர் மாவட்டம் சாத்தூர் பகுதியை சேர்ந்த பெருமாள்சாமி (65) என்பவருக்கு சொந்தமான தீப்பெட்டி தொழிற்சாலை ஓ.மேட்டுப்பட்டி கிராமத்தில் உள்ளது.

இங்கு தீப்பெட்டிக்கு தேவையான தீக்குச்சிகளை உலரவைத்து, அதை இயந்திரம் மூலம் சலித்து மூட்டைகளில் எடுத்து வைக்கும் பணி நேற்று நடந்தது. அப்போது உராய்வு காரணமாக தீ விபத்து ஏற்பட்டது. சாத்தூர் தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீயணைக்கும் பணியில் ஈடுபட்டனர். லேசான காயமடைந்த சத்திரப்பட்டியை சேர்ந்த மாரியம்மாள் (54) சாத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். படுகாயமடைந்த ஓ.மேட்டுப்பட்டியைச் சேர்ந்த முருகேஸ்வரி (55) சாத்தூர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ரூ.2 லட்சம் மதிப்பிலான தீக்குச்சிகள், இயந்திரங்கள் தீயில் எரிந்து சேதமடைந்தன. இவ்விபத்து குறித்து சாத்தூர் தாலுகா போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

# பிள்ளையார்பட்டியில் சதுர்த்தி விழா தொடக்கம்

● இணையம் மூலம் நேரடி ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு

**திருப்பத்தூர்**

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயிலில் கொடியேற்றத்துடன் சதுர்த்தி விழா தொடங்கியது.

கரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையாக பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயிலில் 10 நாட்கள் நடைபெறும் சதுர்த்தி விழாவை பக்தர்கள் பங்கேற்பின்றி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று காலை 9 மணிக்கு கொடி மரம் அருகே உற்சவர் மூஷிக வாகனத்திலும், சண்டிகேசுவரர் வெள்ளி ரிஷப வாகனத்திலும் எழுந்தருளினர். பின்னர் சிறப்பு அபிஷேகம் நடந்தது. பகல் 11.15 மணிக்கு பிச்சை குருக்கள் தலைமையில் கொடியேற்றப்பட்டது. விழாக் காலங்களில் பக்தர்கள்வர தடைவிதிக்கப்பட்டுள்ளதால், அனைத்து நிகழ்ச்சிகளும் இணைய வாயிலாக நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட உள்ளது. விழா ஏற்பாட்டை பரம்பரை அறங்காவலர்கள் காரைக்குடி அ.ராமசாமி, வலையபட்டி மு.நாகப்பன் ஆகியோர் செய்து வருகின்றனர்.



▲ பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயிலில் சதுர்த்தி விழாவையொட்டி நடந்த கொடியேற்றம்.

# திண்டுக்கல் மாநகராட்சியில் 1 லட்சம் பேருக்கு தடுப்பூசி

● சுகாதார அலுவலர் தகவல்

**திண்டுக்கல்**

திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் நேற்றுடன் ஒரு லட்சம் பேர் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளனர் என்று மாநகராட்சி சுகாதார அலுவலர் பி.இந்திரா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் உள்ள முகாம்களில் போதிய அளவு தடுப்பூசி இருப்பு உள்ளது. மாநகராட்சியில் உள்ள மொத்த மக்கள்தொகையில் ஒரு லட்சத்து 69 ஆயிரம் பேர் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆவர். இவர்களில் நேற்று வரை ஒரு லட்சம் பேருக்கு மேல் தடுப்பூசி செலுத்தப்பட்டுவிட்டது. இது 60 சதவீதமாகும்.

தற்போது கரோனா பரவல் குறைந்துள்ளதால் மக்களிடையே தடுப்பூசி செலுத்திக்கொள்ளும் ஆர்வம் குறைந்துள்ளது. மக்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்த ஆட்சியர் ச.விசாகன், மாநகராட்சி ஆணையர் சிவசுப்பிரமணியன் ஆகியோர் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர். இது தொடர்பாக மக்களிடம் தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம்.

விரைவில் 100 சதவீதம் பேருக்கு தடுப்பூசி செலுத்தும் இலக்கை எட்டுவோம் என்று கூறினார்.

# இளைஞரிடம் பணம் பறித்த பெண் உட்பட 2 பேர் கைது

**மானாமதுரை**

மேலூர் அருகே கருங்காலக்குடியைச் சேர்ந்தவர் ராமச்சந்திரன் (33). சிங்கப்பூரில் வேலை பார்த்து வந்தார். ஊருக்கு திரும்பிய அவர், நண்பர்களை பார்ப்பதற்காக ஆக.31-ம் தேதி மானாமதுரை புதிய பேருந்து நிலையம் அருகே தனியார் விடுதியில் தங்கியிருந்தார்.

அப்போது விடுதி அறை கதவை மானாமதுரையைச் சேர்ந்த பாலசுப்ரமணியன், சுதா ஆகியோர் தட்டினர். கதவை திறந்த ராமச்சந்திரனை பாலசுப்ரமணியன் கத்தியால் குத்தினார். ரூ.13 ஆயிரம் ரொக்கம், மொபைல் போன், பாஸ்போர்ட் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு இருவரும் தப்பினர். இதுகுறித்து ராமச்சந்திரன் புகாரின் பேரில் மானாமதுரை போலீஸார் வழக்குப் பதிந்து பாலசுப்ரமணியன், சுதா ஆகியோரை கைது செய்தனர்.



▲ சுதா



▲ பாலசுப்ரமணியன்

பள்ளி மாணவர்களுக்கு

# தமிழ் இலக்கணம் நடத்திய சிவகங்கை ஆட்சியர்

**சிவகங்கை**

சிவகங்கை மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நேற்று மாவட்ட ஆட்சியர் பி.மதுசூதன்ரெட்டி ஆய்வு செய்தார். அப்போது 10-ம் வகுப்பு மாணவர்களுக்கு ஆசிரியர் தமிழ் இலக்கணம் நடத்திக் கொண்டிருந்தார்.

இதைப் பார்த்ததும் ஆட்சியர் மாணவர்களுக்கு சிறிது நேரம் தமிழ் இலக்கணம் நடத்தினார். பிறகு கேள்விகளுக்குப் பதிலளித்த மாணவர்களை ஆட்சியர் பாராட்டினார்.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவரான ஆட்சியர் தமிழ் இலக்கணம் நடத்தியது அதிகாரிகள், ஆசிரியர்களை ஆச்சரியப்பட வைத்தது. தொடர்ந்து ஆட்சியர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: சிவகங்கை மாவட்டத்தில் 415 பள்ளிகள் திறக்கப்பட்டு, 5,443 ஆசிரியர்கள் பணிக்கு வந்துள்ளனர். அரசுப் பள்ளிகளில் 26 ஆயிரம் மாணவர்கள், தனியார் பள்ளிகளில் 14 ஆயிரம் மாணவர்கள் வருகை புரிந்துள்ளனர்.

மாவட்டத்தில் 82 மாணவர் விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன. அங்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர், என்றார்.



▲ சிவகங்கை மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு தமிழ் இலக்கணம் நடத்திய ஆட்சியர் பி.மதுசூதன்ரெட்டி.

ஜெயலலிதா பல்கலை. இணைப்பை கண்டித்து

# பழநி, கோபால்பட்டியில் அதிமுகவினர் ஆர்ப்பாட்டம்

**பழநி**

அதிமுக ஆட்சியில் விழுப்புரத்தில் அமைக்கப்பட்ட ஜெயலலிதா பல்கலை.யை அண்ணாமலை பல்கலை.யோடு இணைப்பதற்கு கொண்டு வரப்பட்ட சட்ட மசோதாவை கண்டித்து பழநி, கோபால்பட்டியில் அதிமுகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பழநி பேருந்து நிலையம் அருகே நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு, அதிமுக நகர் செயலாளர் முருகானந்தம் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் வேணுகோபால், குப்புசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பழநி ஒன்றிய அதிமுக சார்பில் ஆயக்குடியில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு வழக்கறிஞர் சசிகுமார் தலைமை வகித்தார். நத்தம் அருகே கோபால்பட்டியில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு, நத்தம் ஒன்றியக் குழு தலைவர் கண்ணன் தலைமை வகித்தார். ஒன்றியச் செயலாளர்கள் ராமராஜ், ஜெயசீலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வத்தலகுண்டு காளியம்மன் கோயில் அருகே நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு அதிமுக கிழக்கு ஒன்றியச் செயலாளர் மோகன் தலைமை வகித்தார்.

**பரமக்குடி**

ராமநாதபுரம் மாவட்ட அதிமுக சார்பில் பரமக்குடி காந்தி சிலை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் முத்தையா தலைமை வகித்தார். மாவட்ட துணைச் செயலாளர் பாதுஷா, தலைமைக் கழகப் பேச்சாளர் ஜமால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### கெட்டுப்போன மீன்கள் விற்றவருக்கு அபராதம்

**ஆண்டிபட்டி**

தேனி மாவட்டம், ஆண்டிபட்டியில் உள்ள 30-க்கும் மேற்பட்ட மீன் விற்பனை கடைகளில் அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

இதில் குளிர்சாதன பெட்டிகளில் பல நாட்கள் வைத்திருந்து கெட்டுப்போன மீன்கள் விற்கப்படுவது தெரிந்தது. 75 கிலோ மீன்களை அழித்தனர். சம்பந்தப்பட்ட வியாபாரிக்கு ரூ.5000 அபராதம் விதித்தனர்.

இந்து தமிழ் திசை

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.



▲ தடுப்பூசி போட்டுக்கொண்டவருக்கு மரக்கன்று வழங்கிய எஸ்எஸ். காலனி உதவி ஆய்வாளர் ரத்னவேலு.

# இலவச தடுப்பூசி முகாம்

**மதுரை**

ரெட் டாக்ஸி மற்றும் மதுரை மாநகராட்சி இணைந்து நடத்தும் இலவச தடுப்பூசி முகாம் மதுரை எல்லீஸ் நகரில் உள்ள தனியார் மருத்துவமனையில் நடந்தது.

கல்வி நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ள நிலையில், பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஆர்வமுடன் வந்து தடுப்பூசி போட்டுக் கொண்டனர்.

எஸ்.எஸ்.காலனி உதவி ஆய்வாளர் ரத்னவேலு தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கு மரக் கன்றுகளை வழங்கினார். ரெட் டாக்ஸி சார்பாக மேலாளர்கள் பிரசன்னா ஹமீது, சரவணன் மற்றும் லைஃப் கேர் மருத்துவமனையின் மேலாண்மை இயக்குநர் பிரபு ஆகியோர் உடனிருந்தனர்.

Canara Bank

கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை, செயின்ட் மேரிஸ் வளாகம், வட்ட அலுவலகம், முதல் தளம், கீழ வெளி வீதி, மதுரை–625001.

**விற்பனை அறிவிப்பு (அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு)**

**பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு, பிணைச் சொத்து பாதுகாப்பு அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக் காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002–இன் விதி 8(6)–இன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.**

இதன் மூலம் பொது மக்கள் மற்றும் குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகிய அனைவருக்கும் அறிவிப்பது யாதெனில், எங்கள் வங்கியின் கடன்தாரரான **M/s. ராயல் சூப்பர் மார்க்கெட்,** உரிமையாளர் : **திரு.S.தாவூது சிக்கந்தர்** செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை **ரூ. 1,26,10,434.53 (ரூபாய் ஒரு கோடியே இருபத்தாறு இலட்சத்து பத்தாயிரத்து நாநூற்று முப்பத்து நான்கு மற்றும் பைசா ஐம்பத்து மூன்று மட்டும்)** + 01.07.2021 முதல் வட்டி & பிற செலவினங்களுடன் சேர்த்து வங்கி வசூலிக்கும் பொருட்டு, **மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளையின்** அங்கீகாரம் பெற்ற அதிகாரியால் கையகப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் அடமான அசையா சொத்துக்களை, **"எங்கு உள்ளதோ", "எப்படி உள்ளதோ", "எந்நிலையில் உள்ளதோ அப்படியே"** என்ற அடிப்படையில் வருகின்ற **18.09.2021** அன்று நடைபெறவிருக்கும் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

**அசையாச் சொத்துக்களின் விவரம் :–** தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், போடிநாயக்கனூர் சார் பதிவு மாவட்டம், போடிநாயக்கனூர் முனிசிபல் டவுன், பழைய வார்டு எண்.02, புதிய வார்டு எண்.03, வடக்கு ரத வீதி, சர்வே வார்டு எண்.2, டி.எஸ்.எண்.429/2 & 430–இல் 1874 சதுரடி கொண்ட வீட்டு மனையுடன் கூடிய கட்டிடத்தின் கதவு எண்.12A, பள்ளிவாசல் தெரு மற்றும் கதவு எண்.39/1 & 39/2, வடக்கு ரத வீதியில் அமைந்துள்ளது. **நான்கு மால் :** கிழக்கே–டி.எஸ்.எண்.431–இல் உள்ள திரு.பக்கிரி நல்லுமுயன் சாயுபு வீடு, சர்வே எண்.432–இல் உள்ள திரு.பக்கிரி ரஹ்மான் சாயுபு வீடு & சர்வே எண்கள்.433 & 434–இல் உள்ள திரு.சிலார் சாயுபு வீடு, மேற்கே–திரு.N.P.K.சாகுல் ஹமீது வீடு, வடக்கே–சர்வே எண்.419–இல் உள்ள ரோடு, தெற்கே–கிழமேல் தெரு.

**நிர்ணய விலை : ரூ.44,37,000/– (ரூபாய் நாற்பத்து நான்கு இலட்சத்து முப்பத்தேழாயிரம் மட்டும்)**
**முன் வைப்புத்தொகை : ரூ.4,43,700/– (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து எழுநூறு மட்டும்)**

**ஏல விற்பனை தேதி : 18.09.2021**
**முன் வைப்புத் தொகை செலுத்துவதற்கு**
**கடைசி நாள் 17.09.2021 மாலை 4.00 மணி வரை**

விரிவான விற்பனை விதிகள் & நிபந்தனைகளுக்கு வங்கியின் இணைய முகவரியான **www.canarabank.com "E- Auction"** என்ற லிங்கில் சென்று பார்க்கவும் அல்லது **கனரா வங்கி, மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளை, முதன்மை மேலாளரை** (தொலைபேசி எண் : **0452-2335348,** அலைபேசி எண் : **94890 46509**) அனைத்து வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் அணுகித் தெரிந்து கொள்ளலாம்.

**நாள் : 01.09.2021**
**இடம் : மதுரை**

**அங்கீகாரம் பெற்ற அதிகாரி**
**கனரா வங்கி**

**ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்**
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

**தலைமை அலுவலகம்:** தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.

**தங்க ஆபரணங்கள் ஏலத்திற்கான பொது அறிவிப்பு**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் வாங்கியவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தி, தங்க ஆபரணங்களை மீட்க பலமுறை நினைவுப்படுத்தியும் குறித்த நேரத்திற்குள் மீட்பதற்கு தவறிவிட்டனர். கீழே பட்டியலிடப்பட்ட கடன் வாங்கியவர்களால் இந்த கடன் கணக்குகளின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள்/ஆபரணங்கள், எங்கள் கிளை வளாகத்தில் பொது/ஆன்லைன்/தனியார் ஏலத்தின் மூலம் **10.09.2021 காலை 10.30 மணிக்கு** விற்கப்படும். பங்கேற்க விரும்புவோர் எங்கள் கிளையை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு நிபந்தனையையும் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்கும் உரிமை வங்கிக்கு உள்ளது. ஒரே நாளில் ஏலம் முடிக்கப்படாவிட்டால், அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் அடுத்தடுத்த நாட்களில் நடைபெறும். வாடிக்கையாளர் இறந்துவிட்டால், ஏலம் தொடர்பான அனைத்து நிபந்தனைகளும் பரிந்துரைக்கப்பட்ட / சட்ட வாரிசுக்கு பொருந்தும். கடன்தாரர் ஏல தேதிக்கு முன்பே வட்டி மற்றும் மற்ற செலவுகளை செலுத்துமாறு அறிவிக்கப்படுகிறது, தவறினால் அடகு வைக்கப்பட்ட தங்க ஆபரணங்கள் விற்கப்படும் மற்றும் நிலுவை தொகை ஏதாவது இருப்பின் அவை வட்டி மற்றும் கட்டணங்களுடன் மீட்கப்படும். மேலும் எந்த விபரங்களுக்கும் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் கிளையை தொடர்பு கொள்ளவும். கிளை முகவரி விபரங்களுக்கு **www.janabank.com** பார்வையிடவும்.

| வ. எண். | கடன் கணக்கு எண். | கடன்தாரர்/இணை-கடன்தாரர் பெயர் | தங்க ஆபரணங்கள் மொத்த எடை |
|---|---|---|---|
| 1 | 30628730012735 | R S பாரதிராஜா | 7.88 |
| 2 | 30628730012824 | முருகன் S | 4.2 |
| 3 | 30628730013267 | பார்வதி அழகர்சாமி | 11.79 |
| 4 | 30628730013330 | பஞ்சவர்ணம் ராமகிருஷ்ணன் | 14.74 |
| 5 | 30628730016151 | தேவி பாண்டிமுருகன் | 10.8 |
| 6 | 30628730016326 | பாண்டிசெல்வி S | 16.04 |
| 7 | 30628730016595 | மணிகண்டன் பட்டுதுரை | 13 |
| 8 | 30628730014296 | G திவ்யா சேகர் | 4 |
| 9 | 30628730014310 | லல்லி ரவி | 55.4 |
| 10 | 30628730014715 | விஸ்வநாதன் ராஜு | 16.08 |
| 11 | 30628730014882 | அருண்குமார் V M | 3.9 |
| 12 | 30628730014906 | கண்மணி சுந்தரம் | 17 |
| ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், 2வது & 3வது தளம், PTR டவர், எண். 61/1A, பொன்மேனி கிராமம், பைபாஸ் சாலை, மதுரை-625010, இந்தியா. | | | |
| 13 | 32878730016592 | முத்து முனியாண்டி | 9.55 |
| 14 | 32878730016678 | P செந்தில்முருகன் | 5.95 |
| 15 | 32878730016830 | முகம்மது அசாருதீன் | 15.8 |
| 16 | 32878730018721 | பிரியங்கா காந்தி | 12.2 |
| 17 | 32878730018980 | பிரபாகரன் கன்னடியன் | 8.1 |
| 18 | 32878730019049 | சிவபெருமாள் சின்னப்பா | 8.15 |
| 19 | 32878740000316 | பாண்டிசெல்வி P | 14.3 |
| 20 | 32878730018891 | மல்லிகா இளங்கோ | 16.75 |
| 21 | 32878730017310 | கலா பிதானான் | 8 |
| 22 | 32878730017391 | பாக்கியம் | 8.35 |
| 23 | 32878730017527 | செல்வம் S | 16.45 |
| 24 | 32878730017655 | ஜெயந்தி | 16.25 |
| 25 | 32878730017705 | ஜெயசித்ரா துரைபாண்டி | 25 |
| 26 | 32878730019266 | சூர்யபிரபாகர் விஜயன் | 12.25 |
| 27 | 32878730019598 | ரெங்கநாயகி நாகராஜன் | 8.05 |
| 28 | 32878730019612 | வைஜெயந்தி M | 31.9 |

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், 1வது தளம், சர்வே எண்.103/1 & 103/2, யாசின் டவர், 120 அடி சாலை, விவேகானந்தா நகர், சாம்பகுளம், K.புதூர், மதுரை - 625007, இந்தியா.

இடம் : மதுரை
நாள் : 01.09.2021

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

**எமது பதிப்புகள்:** சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, திருப்பூர், சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by T. Murali at Survey No. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper1). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup

TAMILTH ALL 1 Edit_01 S SHUNMUGAM 20_15_58



இந்து தமிழ் திசை
உண்மை நின்றிட வேண்டும்
வியாழன், செப்டம்பர் 2, 2021

# மாதம் ஒரு நாள் கிராமங்களை நோக்கி: ஏன் முக்கியமானதாகிறது?

விவசாயிகளின் பிரச்சினைகளை நேரிலேயே சென்று கண்டறியவும், தீர்வுகள் காணவும் தமிழ்நாட்டு அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் ஒவ்வொரு கிராமமாகச் செல்லும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வகுத்திருப்பது காலத்தின் தேவை கருதிய முக்கியமான திட்டம். ஆனால், இந்தத் திட்டம் வெறும் சடங்காக அமைந்துவிடாமல் சட்டமன்ற உறுப்பினர்களின் முழுநாள் ஆய்வுப் பயணமாக அமைய வேண்டியது அவசியம். கட்சி வேறுபாடுகளைத் தவிர்த்து, எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இத்திட்டம் வெற்றிபெறத் துணைநிற்க வேண்டும். அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தத் திட்டத்தை அலுவல்நிமித்தமாக மேற்கொள்ளும்போது, அதே நாளில், அதே பகுதிகளில் கட்சி தொடர்பான நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதையும் தனிப்பட்ட நிகழ்ச்சிகளையும் தவிர்க்க வேண்டியதும் முக்கியம்.

அமைச்சரோ சட்டமன்ற உறுப்பினரோ ஒவ்வொரு கிராமத்துக்கும் நேரடியாகச் செல்லும்போது, விவசாயிகளுடனான சந்திப்பாக மட்டும் தங்களது நிகழ்ச்சிகளை முடித்துக்கொள்ளாமல், அங்கு நடந்துவரும் அனைத்து அரசாங்கத் திட்டங்களையும் மேற்பார்வையிட வேண்டும். தொடக்கப்பள்ளி, அங்கன்வாடி, ஆரம்ப சுகாதார நிலையங்கள் என அடிப்படைக் கட்டமைப்புகளின் செயல்பாட்டையும் உறுதிசெய்ய வேண்டும். சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் ஆகிய அத்தியாவசிய வசதிகள் மக்களுக்கு முழுமையாகக் கிடைக்கின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டும். நீர்நிலைகள் பாதுகாப்புக்கு முக்கிய கவனம் அளிக்கப்பட வேண்டும். நகர்ப்புறங்கள், தொழிற்சாலைகளை ஒட்டியுள்ள கிராமங்களில் சுற்றுச்சூழல் பாதிப்புகள் உண்டா என்பதையும் பார்த்தும் கேட்டும் அறிய வேண்டும். கிராமங்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவதில் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மாவட்ட நிர்வாகத்துக்கும் பெரும் பங்கு இருக்கிறது என்றாலும் அவற்றிலுள்ள இடைவெளிகளை இத்தகைய ஆய்வுப் பயணங்களால் உடனுக்குடன் சரிசெய்ய முடியும்.

கிராமப்புற ஆய்வுப் பயணங்களின்போது, 'தூய்மை இந்தியா' திட்டம் முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டியதும்கூட முக்கியம். சென்னைக்கு மிக அருகிலுள்ள கும்மிடிப்பூண்டியில், பேருந்து நிலையத்திலிருந்து அரை கிமீ தொலைவிலுள்ள நரிக்குறவர் குடியிருப்பில் கழிப்பறை வசதிகள் இல்லாததன் காரணமாகப் பெண்களும் குழந்தைகளும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகும் நிலை குறித்து வெளிவந்திருக்கும் செய்திகள் வேதனையானவை. நகர்ப்புறங்களையொட்டிய பகுதிகளிலேயே இதுதான் நிலை. கிராமப்புறங்களிலும் ஏறக்குறைய இதுதான் நிலை. அனைத்து கிராமங்களிலும் 'தூய்மை இந்தியா' திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்துவதுதான் பெண்கள் அனுபவிக்கும் இத்தகைய வெளியில் சொல்ல முடியாத துயரங்களுக்குத் தீர்வாக இருக்க முடியும்.

கிராமங்களை நோக்கிய ஒரு நாள் பயணம் என்ற திட்டம் குறிப்பிட்ட சில துறைகளுக்கானதாக மட்டுமின்றி, அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக அமைந்திட வேண்டும். வேளாண்மையை லாபகரமாக மாற்றுவது நீண்ட கால இலக்காகவே இருக்க முடியும் என்ற நிலையில், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள கிராமப்புற மக்களுக்குக் கண்ணியமான வாழ்க்கைச் சூழலையாவது முதலில் அளித்தாக வேண்டும். அதற்கு இத்தகைய பயணங்கள் நிச்சயம் பயன்படும்.

# கருணாநிதியின் அரசாணையை நிறைவேற்றுவாரா ஸ்டாலின்?

**எஸ்.பெருமாள் பிள்ளை**




கரோனா முதல் அலையின்போது தமிழ்நாட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு மருத்துவர்கள் தொற்றால் பாதிக்கப்பட்டனர். இரண்டாவது அலையில் இதுவரை தொற்றுக்கு ஆளான மருத்துவர்களின் எண்ணிக்கை 2,000–ஐத் தாண்டிவிட்டது. மதுராந்தகம் சுகுமார், தூத்துக்குடி கல்யாணராமன், பள்ளிப்பட்டு விவேகானந்தன், மதுரை அனுப்பானடி சண்முகப்ரியா, திருச்சி மணிமாறன், வேலூர் மகிமைநாதன், சைதாப்பேட்டை ஹேமலதா என்று ஏழு அரசு மருத்துவர்கள் கரோனாவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். இதுவரை சுகுமார், கல்யாணராமன் என்ற இரண்டு மருத்துவர்களின் குடும்பத்தினருக்கு மட்டுமே ரூ.25 லட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. சண்முகப்பிரியாவுக்கு துணிச்சலுக்கான கல்பனா சாவ்லா விருதை வழங்கி முதல்வர் கௌரவித்துள்ளார்.

கரோனா தொற்று முதல் அலையின்போது, தொற்று உச்சத்தில் இருந்த சமயத்தில், தமிழகத்தில் பெரும்பாலான தனியார் மருத்துவமனைகள் மூடப்பட்டன. அப்போது கரோனா நோயாளிகளுக்கு மட்டுமின்றி, கரோனா அல்லாத நோயாளிகளுக்கும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டது. அரசு மருத்துவமனைகளில்தான் பிரசவங்கள் அதிகமாக நடைபெற்றன. தமிழகம் முழுவதும் அவசர சிகிச்சைகள், அறுவைச் சிகிச்சைகள், அவசர அறுவைச் சிகிச்சைகள் உள்பட அனைத்தும் அரசு மருத்துவமனைகளில்தான் நடந்தன. இருப்பினும் உயிரைப் பணயம் வைத்துப் பணியாற்றும் அரசு மருத்துவர்களுக்கு மற்ற மாநிலங்களில் பணியாற்றும் அரசு மருத்துவர்களுக்கு இணையான ஊதிய உயர்வு மறுக்கப்படுவது வருத்தமளிக்கிறது.

முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட அரசாணை 354 என்பது, கிராமப்புறங்களில் பணிபுரியும் இளைய மருத்துவர்கள் உட்பட அனைவருக்காகவும் கொண்டுவரப்பட்டது. கிராமப்புற சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு உதவும் அரசாணை அது. இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற தமிழக அரசுக்கு ஆண்டுக்கு ரூ.300 கோடி ரூபாய் மட்டுமே கூடுதலாகத் தேவைப்படும். அதிலும் பெரும் பகுதியை முதல்வர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாகவே மருத்துவர்கள் அரசுக்குச் சம்பாதித்துத் தருவோம் என்பதையும் அரசிடம் பலமுறை தெரிவித்துள்ளார்கள்.

கடந்த ஜூலை 1 மருத்துவர்கள் தினத்தன்று, அதுவும் கரோனா காலத்தில் மருத்துவர்களின் நீண்ட கால ஊதிய நிர்ணயக் கோரிக்கையை நிறைவேற்றுவார்கள் என எதிர்பார்த்தோம். நடக்கவில்லை என்பது வருத்தமாகவே உள்ளது. இது மக்களின் அரசு மட்டுமின்றி மக்களின் உயிர்காக்கும் மருத்துவர்களின் அரசாகவும் இருக்கும் என அன்றைய தினம் முதல்வர் சூளுரைத்தார். பெருந்தொற்றுக் காலத்தில் ஒவ்வொரு உயிரையும் காப்பாற்றப் போராடிவரும் அரசு மருத்துவர்கள் மனநிறைவுடன் பணிசெய்ய அரசு உறுதுணையாக இருப்பதுதானே நியாயம்.

கரோனா மூன்றாவது அலையை எதிர்கொள்ள அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துவரும் அரசு, களத்தில் நின்று மக்களைக் காப்பாற்றும் அரசு மருத்துவர்களுக்கு உரிய ஊதியத்தைத் தர மறுப்பது வருத்தமளிக்கிறது. அரசாணை 354–க்கு உயிர்கொடுங்கள், 12 ஆண்டுகளில் ஊதியப்பட்டை நான்கை நிறைவேற்றித் தருவதற்கு முதல்வர் உதவ வேண்டும். மேலும், அரசு மருத்துவர்களுக்கான 'கார்ப்பஸ் ஃபண்ட்' கோரிக்கையையும் நிறைவேற்றித் தர வேண்டும்.

அரசு மருத்துவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டபோது, அன்றைய எதிர்க்கட்சித் தலைவரும் இன்றைய முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேரடியாக வந்து ஆதரவு தெரிவித்தார். அப்போது, அடுத்து அமையும் திமுக ஆட்சியில் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்தார்கள். இருப்பினும் இதுவரை கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்ற வருத்தம் ஒவ்வொரு மருத்துவரிடமும் இருக்கிறது. முந்தைய ஆட்சியில் ஊதியக் கோரிக்கைக்காகப் போராடிய மருத்துவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டபோதும், மருத்துவர் லட்சுமி நரசிம்மன் தன் உயிரையே தியாகம் செய்தபோதும், மு.க.ஸ்டாலின் முந்தைய அரசைக் கண்டித்ததோடு, வருத்தத்தைப் பதிவுசெய்தார்.

நாட்டிலேயே தமிழகத்தில்தான் மருத்துவர்கள் ஊதியக் கோரிக்கைக்காக இவ்வளவு பெரிய விலை கொடுத்த பிறகும் கோரிக்கை நிறைவேறவில்லை. கடந்த ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, அரசு மருத்துவர்களின் தன்னலமற்ற பணிகளை நினைவில் கொண்டு, கோரிக்கைகளை அரசு உடனே நிறைவேற்ற வேண்டும் என மு.க.ஸ்டாலின் அப்போதைய அதிமுக அரசை வலியுறுத்தினார்.

கருணாநிதி ஆட்சியில் போடப்பட்ட அரசாணையை நிறைவேற்றத்தான் இப்போதும் அரசு மருத்துவர்கள் வேண்டுகிறார்கள். தங்களது கோரிக்கை நிறைவேறும்பட்சத்தில், கரோனா மூன்றாவது அலையை எதிர்கொள்ளவிருக்கும் இந்த நேரத்தில், மருத்துவர்கள் மேலும் உற்சாகமாகப் பணிசெய்வார்கள்.

- எஸ்.பெருமாள் பிள்ளை, தலைவர், அரசு மருத்துவர்களுக்கான சட்டப் போராட்டக் குழு.

(C) KSL Media Ltd

**இப்படிக்கு இவர்கள்**

## மாற்றுக் கொள்கைகள் உண்டு

ஆகஸ்ட் 31 தலையங்கம் வாசித்து அதிர்ச்சியடைந்தேன். தீங்கு என்று சரியாக அடையாளப்படுத்திவிட்டு, தவிர்க்க முடியாத என்ற அடைமொழி எதற்கு? இன்றைய ஆட்சியாளர்கள் கொள்கை குறித்த விமர்சனமற்று, எதிர்ப்புக் குரல்களில் காங்கிரஸ் தரப்பை மட்டும் தொட்டுக்காட்டி, மாற்றுக் கொள்கைகள் ஏதும் இல்லை என்பதுபோல் கொண்டுபோய், ஆகவே, யாரும் தவறு கண்டுபிடிக்கக் கூடாது என முடிப்பது என்ன நியாயம்? கரோனா கொடுந்தொற்று தொடங்கும் முன்பே மிக மோசமான கொள்கைகளை நடைமுறைப்படுத்திய ஒன்றிய ஆட்சியாளர்கள், தங்கள் தவறுகளை ஒப்புக்கொள்வதும் இல்லை, பாதிப்பு அடைந்துவரும் பல கோடி அப்பாவி மக்களின் வாழ்வாதாரம் பற்றிப் பேசுவதும் இல்லை. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மட்டற்ற சலுகைகளும், வங்கிக்கடன் திரும்பச் செலுத்த மறுக்கும் பெருந்தொழில் அதிபர்கள் மீது கருணை பொழிவதை நிறுத்தி, கொள்ளை லாபம் அடிப்போருக்கு உச்சபட்ச வரி விதிக்க வேண்டும். வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுப் பொருளாதாரச் சுழற்சி உறுதிசெய்யப்பட வேண்டும். இடதுசாரிக் கட்சிகள் தெளிவான மாற்றுக் கொள்கைகளை வலியுறுத்திவருகின்றனர். 30 கோடி பல்துறைத் தொழிலாளர்கள், ஊழியர்கள் கடந்த ஆண்டு நவம்பர் 26 அன்று வலுவான வேலை நிறுத்தம் செய்து, தங்களது எதிர்ப்புக் குரலைப் பதிவுசெய்தனர். எட்டு மாதங்களாக வேளாண் பெருங்குடி மக்கள் தலைநகரில் கடுமையான போராட்டத்தில் உள்ளனர். தேசத்தின் சொத்து விற்பனையை உடனே தடுத்து நிறுத்தாவிட்டால், பெருந்தீங்கு விளையும். மறு காலனியாதிக்கத்துக்கு அடிகோலும்.

**- எஸ்.வி.வேணுகோபாலன், சென்னை.**

# மேகேதாட்டு: வழக்கு அல்ல... வாழ்க்கை!


**வெ.ஜீவகுமார்**

காவிரியின் குறுக்கே மேகேதாட்டு அணையை கர்நாடகம் கட்ட எத்தனிப்பதை தமிழ்நாடு சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் ஏகோபித்து எதிர்த்துள்ளன. உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மேலும் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளது. அதே நேரத்தில், ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் நிலையைப் பார்த்தால், அச்சம்தான் மேலிடுகிறது.

மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சக இசைவு பெறாமல் வனப் பாதுகாப்புச் சட்டம், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிப்பின்படி எந்த அனுமதியும் பெறாத நிலையில், மேகேதாட்டுப் பகுதியில் கட்டுமானப் பொருட்களை கர்நாடக அரசு குவித்துள்ளதாகக் கடந்த ஏப்ரலில் வெளிவந்த செய்திகள் கூறின. இதன் அடிப்படையில், தென்மண்டலப் பசுமைத் தீர்ப்பாயம் சென்னை அமர்வு தாமாக இவ்விவகாரத்தை 26.05.2021–ல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. மேகேதாட்டுப் பகுதியை ஆய்வுசெய்ய சுற்றுச்சூழல், வனத் துறை, காவிரி மேலாண்மை ஆணைய மூத்த அதிகாரிகள் அடங்கிய ஒரு ஆய்வுக் குழுவை அமைத்தது. அந்த ஆய்வுக் குழு 05.07.2021–க்குள் தம் அறிக்கையைத் தாக்கல்செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

### எதற்காகப் பேச்சுவார்த்தை?

கர்நாடக அரசு சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்க முனைந்தது. அப்போதைய கர்நாடக முதல்வர் எடியூரப்பா உயர் அதிகாரிகள், சட்ட வல்லுநர்கள் அடங்கிய கூட்டத்தைக் கூட்டினார். தென்மண்டலப் பசுமைத் தீர்ப்பாயம் தம் உத்தரவைத் திரும்பப் பெற வேண்டும் என்று முறையீடு செய்வதாக கர்நாடக அரசு அறிவித்தது. தமிழ்நாடு அரசும் தென்மண்டலப் பசுமைத் தீர்ப்பாய உத்தரவு குறித்து மேல் நடவடிக்கை எடுக்க சட்ட வல்லுநர்களை ஆலோசிக்கப் போவதாகக் கூறியது. இந்நிலையில், தமிழ்நாடு அரசிடம் ஒரு குழப்பம் வெளிப்பட்டது. மேகேதாட்டு அணை தொடர்பான வழக்கு தென்மண்டல பசுமைத் தீர்ப்பாயத்தில் விசாரணைக்கு வரவிருந்த நிலையில், கர்நாடகத்திடம் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்தது ஏன்? பேச்சுவார்த்தை என்ற சொற்பிரயோகம் வியப்புக்குரியது. 1968 முதல் 1990 வரை இரு மாநில அரசுகளும் சுமார் 26 முறை பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளன. முடிவு சுபமாக இல்லை.




1992–ல் இரு மாநில விவசாயப் பிரதிநிதிகளின் கூட்டத்தை உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி வி.ஆர்.கிருஷ்ணய்யர் நடத்தினார். அதுவும் தோல்வியுற்றது. பேச்சுவார்த்தையின் பெயரால் காலம் விரயமானதுதான் காவிரி வரலாறு.

### கர்நாடகத்தின் வியூகம்

இதுபோன்ற தருணங்களுக்காகத்தான் காத்திருப்பதுபோல் கர்நாடகம் நடந்துகொண்டது. தென்மண்டலப் பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவின் மீது டெல்லியில் உள்ள பசுமைத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வில் கர்நாடகம் மேல்முறையீடு செய்தது. 17.06.2021–ல் காணொலி மூலம் விசாரணை நடந்தது. டெல்லி அமர்வு, கர்நாடக அரசு முன்வைத்த வாதங்களை ஏற்பதாகவும் தென்மண்டலப் பசுமைத் தீர்ப்பாயம் தாமாக முன்வந்து பதிவுசெய்த வழக்கு விசாரணையைத் தொடர வேண்டிய அவசியம் இல்லை என்றும் தீர்ப்புக் கூறியது. மேலும், தமிழ்நாடு அரசு மேகேதாட்டு குறித்து மத்திய ஜல்சக்தி துறையிடம் முறையிட்டுள்ளதாகவும் இது குறித்த வழக்கு உச்ச நீதிமன்ற நிலுவையில் உள்ளதாகவும் கூறி, தென்மண்டலப் பசுமைத் தீர்ப்பாயத்தில் நடந்துவரும் வழக்கு விசாரணையை முடித்துவைத்தது. இந்தத் தீர்ப்பினால் தென்மண்டலப் பசுமைத் தீர்ப்பாயம் அமைத்த குழு உடனடியாகக் கலைக்கப்பட்டது.

தேசிய பசுமைத் தீர்ப்பாயங்கள் இந்தியாவில் 5 உள்ளன. அனைத்தும் சம அதிகாரம் பெற்றவை. ஒவ்வொன்றுக்கும் அதிகார வரம்புக்குட்பட்ட மாநிலங்கள் எவை என குறிப்பிடப்பட்டு சட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிலையில், மத்திய அரசின் அறிவிப்பு ஆணை எதுவும் இல்லாமல், பிற மண்டலங்களில் உள்ள பசுமைத் தீர்ப்பாயங்களில் உள்ள வழக்குகளை டெல்லி பசுமைத் தீர்ப்பாயத்துக்கு மாற்ற முடியாது. அவ்வாறு மாற்றுவதற்கு பசுமைத் தீர்ப்பாயத்தின் டெல்லி பிரிவு 12.06.2021–ல் பிறப்பித்த உத்தரவு தவறானது, இதனை ரத்துசெய்ய வேண்டும் என்ற பொதுநல வழக்கை சென்னை உயர் நீதிமன்றத்தில் மீனவர் நலச் சங்கத்தின் சார்பில் செல்வராஜ்குமார் தாக்கல்செய்தார். தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் அலுவல்ரீதியான டெல்லி உத்தரவு சட்டத்துக்குப் புறம்பானது என்பது அவர் வழக்கு.

இந்த வழக்கில், சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி, நீதிபதி பி.டி.ஆதிகேசவலு அடங்கிய அமர்வு, டெல்லி பசுமைத் தீர்ப்பாயத்தின் மேற்கூறிய உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்தது. நாடு முழுவதும் பொருந்தக்கூடிய அல்லது இரு மாநிலங்களுக்கு இடையிலான சுற்றுச்சூழல் தொடர்பான, தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுக்கப்படும் வழக்குகள் அனைத்தையும் டெல்லியில் உள்ள தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வுக்கு அனுப்ப வகைசெய்யும் உத்தரவு தடைசெய்யப்பட்டது. 4 வாரங்களுக்குள் மத்திய அரசும், டெல்லி பசுமைத் தீர்ப்பாயமும் இவ்வழக்கில் தங்கள் பதிலைத் தர வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேகேதாட்டு விஷயத்தில் இம்முறையீட்டை சென்னை உயர் நீதிமன்றத்திலேயே அதே தலைமை நீதிபதி அமர்விலேயே அதே காரணங்களுக்காக எழுப்ப வாய்ப்பு இருந்தது. எனினும், தமிழ்நாடு அரசு நேரடியாகவே உச்ச நீதிமன்றத்துக்குச் சென்றுவிட்டது. டெல்லி பசுமைத் தீர்ப்பாய அமர்விலேயே கர்நாடக அரசுபோல தமிழ்நாடு அரசும் அட்வகேட் ஜெனரலையோ கூடுதல் சட்ட வல்லுநர்களையோ பயன்படுத்தியிருக்கலாம்.

### நிலுவையில் இருக்கும் வழக்குகள்

காவிரி குறித்த வழக்குகளில் தமிழ்நாடு முன்பே பல முறை ஏமாந்துள்ளது. உச்ச நீதிமன்றத்தில் ஓ.எஸ். 1/1971 என்ற வழக்கை காவிரிப் பிரச்சினைக்காகத் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்தது. அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியின் வாக்குறுதியை நம்பி 28.08.1972–ல் தமிழ்நாடு அரசு இந்த வழக்கைத் திரும்பப் பெற்றது. இதேபோல் காவிரிப் பிரச்சினையில் 1924–ல் செய்யப்பட்ட 50 ஆண்டுகளுக்கான ஒப்பந்தத்தை 1974–ல் புதுப்பிக்கத் தமிழ்நாடு போதுமான முயற்சிகளைச் செய்யவில்லை. இந்த இடைக்காலத்தில் பாசனப் பரப்பை கர்நாடகம் விரிவாக்கிவிட்டது.

காவிரிப் பிரச்சினையில் தமிழ்நாடு அரசு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டிய சில அம்சங்களைத் தமிழ்நாட்டு விவசாயிகள் தொடர்ந்து சுட்டிக்காட்டுகிறார்கள். அவற்றில் முக்கியமானது, காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு நிரந்தரத் தலைவரை நியமிக்கக் கோரி தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தை அணுக வேண்டும் என்பது. மேகேதாட்டு அணை கட்டுவதை எதிர்த்துத் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் 16.02.2018–ல் ஒரு வழக்கையும், மேலும் திட்ட மதிப்பீட்டு இயக்குநரக இயக்குநர், மத்திய நீர்வளக் குழுமம், கர்நாடக நீர்வளச் செயலாளர் ஆகியோர் மீது 05.12.2018–ல் உச்ச நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும் தொடர்ந்துள்ளது. அந்த வழக்கு விசாரணையையும் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய தண்ணீரைத் தராததால் ஏற்பட்ட சாகுபடி இழப்புக்கு ரூ.1,045 கோடியும் மற்ற பாதிப்புகளுக்கு ரூ.1,434 கோடியும் இழப்பீடு கேட்டு தமிழ்நாடு தொடர்ந்த வழக்கும் ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கின் விசாரணையைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். காவிரியில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க கர்நாடக அரசுக்கு பெங்களூரு உயர் நீதிமன்றமே உத்தரவிட்டுள்ளது. இது குறித்த வழக்குகளின் விசாரணையையும் துரிதப்படுத்த வேண்டும்.

கர்நாடகம், பெங்களூரு குடிநீர்த் தேவையை மட்டுமே பூதாகரப்படுத்தும்போது, தமிழ்நாட்டில் சுமார் 20 மாவட்டங்கள் 1.5 கோடி மக்களின் குடிநீர்த் தேவையையும் முன்வைத்துத் தமிழ்நாடு அரசு சட்டரீதியாகவும் போராட முடியும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை காவிரி தொடர்பான வழக்குகள் யாவும் சட்டரீதியான சிக்கல்கள் மட்டுமில்லை, வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தீர்மானிப்பவையும்கூட.

- வெ.ஜீவகுமார், வழக்கறிஞர், விவசாயிகள் உரிமைச் செயற்பாட்டாளர், தொடர்புக்கு: vjeeva63@gmail.com

இணையத்திலும் இந்து தமிழுடன் இணைந்திருக்க...
www.hindutamil.in
சமூக வலைதளங்களில் எங்களைத் தொடர...
facebook.com/TamilTheHindu/
twitter.com/tamilthehindu
Youtube.com/tamilthehindu

கட்டுரைகளை editpage@hindutamil.co.in; வாசகர்கள் விமர்சனங்களை feedback@hindutamil.co.in ஆகிய மின்னஞ்சல்களுக்கு அனுப்பிடுங்கள். பத்திரிகையில் வெளியாகும் கட்டுரையாளர்கள் / பேட்டியாளர்களின் கருத்துகள் அவர்களுடைய சொந்தக் கருத்துகளே. அவை எந்த வகையிலும் இப்பத்திரிகையின் கருத்துகள் ஆகா. அஞ்சல் முகவரி:
ஆசிரியர் இலாகா, இந்து தமிழ், கஸ்தூரி மையம், 124, வாலாஜா சாலை, சென்னை - 2.

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper1). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup
CH-CH_M

## மீட்டர் பேசுது

| | | | | |
|---|---|---|---|---|
| 34.9°C | 34.7°C | 35.8°C | 36.3°C | 32.4°C |
| சென்னை | வேலூர் | திருச்சி | மதுரை | கோவை |
| 33.6°C | 35.7°C | 18.3°C | 18.7°C | |
| சேலம் | நெல்லை | உதகை | கொடைக்கானல் | |

தமிழ்நாடு, புதுச்சேரியின் ஓரிரு இடங்களில் மழை பெய்யும். சென்னையில் மேகமூட்டம் காணப்படும். ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யும். வெப்பநிலை 26 முதல் 34 டிகிரி செல்சியஸ் வரை இருக்கக்கூடும்.

அதிமுக ஒருங்கிணைப்பாளர்

# ஓபிஎஸ் மனைவி விஜயலட்சுமி காலமானார்

● முதல்வர் ஸ்டாலின், பழனிசாமி, சசிகலா உள்ளிட்டோர் நேரில் ஆறுதல்



▲ அதிமுக ஒருங்கிணைப்பாளரும், எதிர்க்கட்சி துணைத் தலைவருமான ஓ.பன்னீர்செல்வத்தின் துணைவியார் விஜயலட்சுமி உடல்நலக் குறைவால் காலமானார். இச்செய்தி அறிந்து மருத்துவமனைக்கு நேரில் சென்று ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் கூறினார். அமைச்சர்கள் துரைமுருகன், தங்கம் தென்னரசு, பி.கே.சேகர்பாபு, உதயநிதி ஸ்டாலின் எம்எல்ஏ ஆகியோர் உடனிருந்தனர். (அடுத்த படம்) ஓ.பன்னீர்செல்வத்துக்கு அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி ஆறுதல் கூறினார். (கடைசி படம்) மருத்துவமனைக்கு நேரில் வந்த சசிகலா ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆறுதல் கூறினார் படங்கள்: பு.க.பிரவீன்

■ சென்னை

அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வத்தின் மனைவி விஜயலட்சுமி(66) மாரடைப்பு காரணமாக சென்னையில் நேற்று காலமானார். முதல்வர் மு.க. ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, சசிகலா உள்ளிட்டோர் ஓபிஎஸ்-ஐ சந்தித்து ஆறுதல் கூறினர்.

அதிமுக ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் முதல்வருமான ஓ.பன்னீர்செல்வத்தின் மனைவி விஜயலட்சுமி, உடல்நலக் குறைவு காரணமாக கடந்த 10 நாட்களாக சென்னை பெருங்குடியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். அவர் குணமடைந்து வருவதாக கூறப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை 5 மணியளவில் திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. உடனடியாக இதயநோய் நிபுணர்கள் அவசர சிகிச்சை அளித்தனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி காலை 6.45 மணிக்கு விஜயலட்சுமி உயிரிழந்தார்.

தேனி மாவட்டம், உத்தமபாளையத்தில் பிறந்த விஜயலட்சுமி, ஓ.பன்னீர்செல்வத்தை திருமணம் செய்த பிறகு பெரியகுளத்தில் குடும்பத்துடன் வசித்து வந்தார். ஓபிஎஸ் - விஜயலட்சுமி தம்பதியினருக்கு கவிதாபானு என்ற மகளும், ஜெயபிரதீப், ரவீந்திரநாத் ஆகிய 2 மகன்களும் உள்ளனர்.

விஜயலட்சுமி இறந்த தகவல் அறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், தங்கம் தென்னரசு, சேகர்பாபு திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் மருத்துவமனைக்கு சென்று ஓபிஎஸ்ஸுக்கு ஆறுதல் தெரிவித்தனர். அப்போது, கதறி அழுத ஓபிஎஸ் கைகளை முதல்வர் ஸ்டாலின் பற்றிக் கொண்டு ஆறுதல் கூறினார்.

அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி, துணை ஒருங்கிணைப்பாளர்கள் கே.பி.முனுசாமி, ஆர்.வைத்திலிங்கம், முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், எஸ்.பி.வேலுமணி, ஜெயக்குமார், ஆர்.பி.உதயகுமார், கே.ஏ.செங்கோட்டையன், திண்டுக்கல் சீனிவாசன், ஆர்.காமராஜ், சி.வி.சண்முகம், செல்லூர் கே.ராஜு, பா.வளர்மதி, கோகுல இந்திரா, முன்னாள் சபாநாயகர் தனபால், பி.எச்.மனோஜ் பாண்டியன் உள்ளிட்ட அதிமுக எம்எல்ஏக்கள், மூத்த நிர்வாகிகளும் ஓபிஎஸ்-க்கு நேரில் ஆறுதல் தெரிவித்தனர்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், பாமக தலைவர் ஜி.கே. மணி, தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி, மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விடுதலைச் சிறுத்தை கட்சித் தலைவர் திருமாவளவன், பாஜக மகளிரணி தேசியத் தலைவர் வானதி சீனிவாசன், பாஜக எம்எல்ஏ எம்.ஆர். காந்தி, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், புதிய நீதிக் கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் விக்கிரமராஜா, நடிகர் பிரபு உள்ளிட்டோர் நேரில் ஓபிஎஸ்-க்கு ஆறுதல் கூறினர்.

பின்னர் மருத்துவமனையில் இருந்து விஜயலட்சுமியின் உடல் முற்பகல் 11.25 மணிக்கு ஆம்புலன்ஸ் மூலம் அவரது சொந்த ஊரான பெரியகுளத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதையடுத்து, ஓபிஎஸ்-ஐ சந்தித்து ஆறுதல் தெரிவிப்பதற்காக சசிகலா, ஜெயா டிவியின் நிர்வாக இயக்குநர் விவேக் ஆகியோர் 12.20 மணிக்கு மருத்துவமனைக்கு வந்தனர். அவர்களை ஓபிஎஸ்ஸின் மகள் கவிதாபானு, 6-வது தளத்துக்கு அழைத்துச் சென்றார்.

அங்கிருந்த ஓபிஎஸ், சசிகலாவைப் பார்த்ததும் கண்ணீர் சிந்தினார். அவரது கைகளைப் பிடித்து சசிகலா ஆறுதல் தெரிவித்தார். அப்போது முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார், ரவீந்திரநாத் குமார் எம்பி உள்ளிட்டோர் உடனிருந்தனர். சுமார் அரை மணிநேரம் அங்கிருந்த சசிகலா, 12.50 மணிக்கு புறப்பட்டுச் சென்றார்.

அதன் பின்னர், ஓபிஎஸ் உள்ளிட்ட குடும்பத்தினர் சொந்த ஊருக்கு புறப்பட்டுச் சென்றனர். விஜயலட்சுமியின் உடல் நேற்றிரவு பெரியகுளம் வந்தடைந்தது. தெற்கு அக்ரஹாரத்தில் உள்ள ஓபிஎஸ் வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. உறவினர்கள், பல்வேறு கட்சியினர், அமைப்பினர், பொதுமக்கள் இரவு முழுவதும் அஞ்சலி செலுத்தினர். இன்று காலை 10 மணிக்கு இறுதிச் சடங்குகள் நடக்கும் என ஓபிஎஸ் குடும்பத்தினர் கூறினர்.

### முதல்வர், தலைவர்கள் இரங்கல்

ஓபிஎஸ் மனைவி விஜயலட்சுமி மறைவுக்கு தெலங்கானா ஆளுநரும், புதுச்சேரி துணைநிலை ஆளுநருமான தமிழிசை சவுந்தரராஜன், முதல்வர் மு.க.ஸ்டாலின், அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட இரங்கல் செய்தியில், 'ஓ.பன்னீர்செல்வத்தின் துணைவியார் விஜயலட்சுமி மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். இல்லத் துணையை பிரிந்து வாடும் அண்ணன் ஓ.பன்னீர்செல்வத்துக்கும், அவரது குடும்பத்தினர், உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று கூறியுள்ளார்.

பாமக நிறுவனர் ராமதாஸ், தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி, தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை, தேமுதிக தலைவர் விஜயகாந்த், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, தமாகா தலைவர் ஜி.கே.வாசன், இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், அமமுக பொதுச் செயலாளர் தினகரன் சமக தலைவர் சரத்குமார், பெருந்தலைவர் மக்கள் கட்சியின் தலைவர் என். ஆர்.தனபாலன், பெரம்பலூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் பாரிவேந்தர், தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் சு.திருநாவுக்கரசர், ஐயுஎம்எல் தேசிய தலைவர் கே.எம்.காதர் மொகிதீன், இந்திய ஜனநாயக கட்சி தலைவர் ரவி பச்சமுத்து, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் துணைத் தலைவர் செந்தில் தொண்டைமான் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# விநாயகர் சதுர்த்தி விழாவுக்கு கட்டுப்பாடுகளுடன் அனுமதி

● அண்ணாமலை வலியுறுத்தல்

■ தூத்துக்குடி

"விநாயகர் சதுர்த்தி விழாவுக்கு கட்டுப்பாடுகளுடன் அரசு அனுமதி அளிக்க வேண்டும்" என தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: பொது இடத்தில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட தமிழக அரசு தடை விதித்துள்ளது தவறானது. விழாவில் இத்தனை பேர்தான் கலந்து கொள்ளவேண்டும் என கட்டுப்பாடுகளை அரசு விதிக்கலாம். ஆனால், முழுமையாக தடை விதித்திருப்பது கண்டனத்துக்கு உரியது. இதை பாஜக கடுமையாக எதிர்க்கும். இந்த விஷயத்தில் மற்ற மாநிலங்களை உதாரணமாகக் காட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழகத்தில் கரோனா குறைந்து விட்டது என்பதால்தான் டாஸ்மாக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. தற்போது, பள்ளிகள் திறக்கப்பட்டு உள்ளன. பள்ளிகளைத் திறக்க நாங்கள் ஆதரவு தெரிவித்துள்ளோம். அதே நிலையைத்தான் விநாயகர் சதுர்த்தி விழாவிலும் அரசு கடைபிடிக்க வேண்டும். கட்டுப்பாடுகளுடன் விநாயகர் சதுர்த்தி விழா நடத்த அரசு அனுமதி அளிக்க வேண்டும். அரசு மறுபரிசீலனை செய்யும் என நம்பிக்கை உள்ளது.

ஜாலியன் வாலாபாக் நினைவிடத்தை சீரமைத்ததை ராகுல் காந்தி குறை கூறியுள்ளார், ஆனால், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பஞ்சாப் முதல்வர் அதை வரவேற்றுள்ளார். அதிமுகவுடன், பாஜக கூட்டணி தொடர்கிறது. ஜெயலலிதா பல்கலைக்கழகத்தை அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் முடிவை அரசு கைவிட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே

# குழந்தையை தாக்கிய தாயின் நண்பரும் கைது

■ புதுக்கோட்டை

செஞ்சி அருகே குழந்தையை கொடூரமாக தாக்கிய தாயின் நண்பரையும் போலீஸார் நேற்று கைது செய்தனர்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே மணலபாடி மதுரா மேட்டூர் கிராமத்தைச் சேர்ந்தவர் வடிவழகன்(37). இவரது மனைவி துளசி (23). இவர்களுக்கு 4, 2 வயதில் மகன்கள் உள்ளனர். துளசி தனது இளைய மகனை கொடூரமாக தாக்கிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.

இதையடுத்து, கணவனுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக, ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் ராம்பள்ளியில் உள்ள தாய் வீட்டில் இருந்த துளசியை ஆக. 29-ம்தேதி செஞ்சி அனைத்துமகளிர் போலீஸார் கைது செய்தனர்.

விசாரணையில் துளசிக்கும், பிரேம்குமார் என்கிற மணிகண்டன் (30) என்பவருக்கும் நட்பு இருந்து வந்தது தெரியவந்தது. துளசியின் இளைய மகன், அவனது தந்தையின் முகஜாடையில் இருப்பதால், அவனை அடித்து துன்புறுத்தி, அதை வீடியோ எடுத்து அனுப்பும்படி பிரேம்குமார் கூறியதாக தெரிகிறது. அதன்படி, துளசி தனது இளைய மகனை தாக்கி வீடியோ எடுத்து பிரேம்குமாருக்கு அனுப்பி உள்ளார் என்பது தெரியவந்தது.



▲ பிரேம்குமார்

அதன் பின்பு, தனிப்படையினர் நடத்திய விசாரணையில், பிரேம்குமார் புதுக்கோட்டை மச்சுவாடி பாலன் நகரைச் சேர்ந்தவர் என்பதும், அவர் அங்கு உள்ள மிட்டாய் கடையில் பணிபுரிந்து வந்ததும் தெரியவந்தது.

இதையடுத்து, புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி கல்லுசந்து பகுதியில் உள்ள தனது உறவினர் வீட்டில் பதுங்கியிருந்த பிரேம்குமாரை தனிப்படை போலீஸார் நேற்று கைது செய்தனர்.

# அமெரிக்கா செல்லவில்லை; விஜயகாந்த் துபாய்க்கு சென்றுள்ளார்

● விஜய பிரபாகரன் தகவல்

■ திருச்சி

தேமுதிக தலைவர் விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் திருச்சி மாவட்டம், லால்குடி அருகே மாந்துறை கிராமத்தில் நேற்று நடந்த திருமண விழாவில் பங்கேற்றார். அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தேர்தலில் வெற்றி - தோல்வி என்பது சகஜம். இது அனைத்துக் கட்சிகளுக்கும் பொருந்தும். எனவே, தேர்தலுக்குப் பிறகு தேமுதிக தொய்வடைந்துவிட்டது என்று கூறுவது தவறான கருத்து. ஒவ்வொரு தேர்தலிலும் நிலைமை மாறும். தோல்வியை எப்படி சரிசெய்ய வேண்டும் என்று எங்களுக்குத் தெரியும்.

தேமுதிக தலைவர் விஜயகாந்த் அமெரிக்கா செல்லவில்லை. துபாய்க்குத்தான் சென்றுள்ளார். அவரது உடல் நலனில் இந்தமுறை நல்ல மாற்றம் இருக்கும். திமுக அரசு இதுவரை சிறப்பாகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தேமுதிக தலைவர் விஜயகாந்த் கூறுவதுபோல், 6 மாத காலத்துக்குப் பிறகுதான் திமுக அரசின் செயல்பாடுகளில் எங்களது நிலைப்பாடு குறித்து கூற முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

சங்கத் தமிழ் நூல் தொகுப்புக்கு

# 'திராவிடக் களஞ்சியம்' என பெயர் சூட்டுவதை கைவிட வலியுறுத்தல்

■ தஞ்சாவூர்

தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் பெ.மணியரசன் நேற்று வெளியிட்ட அறிக்கையின் விவரம்:

சங்கத் தமிழ் இலக்கியங்களை சந்தி பிரித்து, எளிய தொகுப்பாக வெளியிடப் போவதாகவும், அதற்கு 'திராவிடக் களஞ்சியம்' என்றுபெயர் சூட்டப்போவதாகவும் அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

சங்கத் தமிழ் நூல்கள் எதிலும் 'திராவிட' என்ற சொல்லே கிடையாது. தமிழ், தமிழ்நாடு, தமிழகம் என்ற சொற்களே இருக்கின்றன. வரலாற்று உண்மை இவ்வாறு இருக்க, வலிந்து சங்கத் தமிழ் நூல்களுக்கு 'திராவிடக் களஞ்சியம்' என்று திமுக ஆட்சியில் பெயர் சூட்டுவதில் ஏதோ ஓர் உள்நோக்கம் இருக்க வேண்டும்.

முதல்வர் ஸ்டாலின் அண்மைக் காலமாக தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற இயற்கையான சொற்களுக்கு மாற்றாக 'திராவிட' என்ற வடசொல்லைப் புகுத்தி வருகிறார். தமிழக வளர்ச்சியைக் குறிப்பிடக் கூட அவர் 'திராவிட மாடல்' என்று பெயர் சூட்டினார்.

ஆனால், சட்டப்பேரவைத் தேர்தல் பரப்புரையில் 'திராவிடம்', 'திராவிடர்' ஆகிய சொற்களை அதிகம் பயன்படுத்தாமல், தமிழர் என்ற சொல்லையே அதிகம் பயன்படுத்தினார் ஸ்டாலின். ஆனால், முதல்வராக பதவியேற்றவுடன் 'நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன்' என்று அறிவித்துக் கொண்டார்.

தமிழர்களிடம் வாக்கு வாங்கும் வரை அவர்களின் அசல் இனப் பெயரைச் சொல்வது, வாக்கு வாங்கி வெற்றி பெற்ற பின்பு திராவிடத்தைத் திணிப்பது என்ற தந்திரமாகத்தான் இதைப் பார்க்க முடிகிறது. எனவே, சங்கத் தமிழ் தொகுப்பை 'திராவிடக் களஞ்சியம்' என்ற பெயரில் வெளியிட்டால், அதற்கு எதிராக அறவழிப் போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்துள்ளார்.

# கலவரத்தை தூண்ட ஆயுதங்கள் தயாரித்து பதுக்கல்

● புதுச்சேரியில் 4 பேர் கைது; 270 சுளுக்கிகள் பறிமுதல்

■ புதுச்சேரி

சுருக்கு வலை பயன்படுத்துவது தொடர்பாக, புதுச்சேரி கடற்கரை மீனவர் கிராமத்தினர் இடையே கடும் மோதல் ஏற்பட்டுள்ள சூழலில், இந்த கலவரத்தை தூண்டும் வகையில் ஆயுதங்கள் தயாரித்து பதுக்கிய 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 270 சுளுக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

புதுச்சேரியை அடுத்த வீராம்பட்டினம், நல்லவாடு, வம்பாக்கீரப்பாளையம் ஆகிய 3 மீனவ கிராமங்களுக்கு இடையே, கடந்த சில தினங்களுக்கு முன்பு தடை செய்யப்பட்ட சுருக்குமடி வலை பயன்படுத்துவது தொடர்பாக மோதல் ஏற்பட்டது. போலீஸார் துப்பாக்கி சூடு நடத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர். அங்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில் மீனவர்களில் ஒரு பிரிவினர் கேட்டுக் கொண்ட தற்கிணங்க முதலியார்பேட்டை, 100 அடி சாலையில் சிவா விஷ்ணு நகரில் உள்ள கடை ஒன்றில் கலவரத்துக்குத் தேவையான, ஆயுதங்கள் தயாரிக்கப்படுவதாக முதலியார்பேட்டை போலீஸாருக்கு தகவல் கிடைத்தது.




▲ புதுவை மீனவர்களிடையே கலவரத்தைத் தூண்டும் வகையில் தயாரிக்கப்பட்ட சுளுக்கிகளை பறிமுதல் செய்த போலீஸார் முதலியார்பேட்டை காவல்நிலையத்துக்கு எடுத்து வருகின்றனர். படம்: எம்.சாம்ராஜ்

சம்பவ இடத்துக்கு சென்ற போலீஸார் அங்கு சோதனை நடத்தினர். அப்போது புதிதாக தயாரிக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 270 சுளுக்கிகளை பறிமுதல செய்தனர். இதையடுத்து கடையின் உரிமையாளரான முதலியார்பேட்டை விடுதலைநகர் திருநாவுக்கரசு (எ) சிவா(48), அவரது நண்பரான வீராம்பட்டினம் குமார் (எ) அனித்(41) வீராம்பட்டினம் மீனவர்களான பிரகாஷ் (39), முத்துவேல், இனியன் ஆகிய 5 பேர் மீதும் ஆயுதங்கள் பதுக்கி வைத்தல், கலவர சதிக்கு உடந்தையாக இருத்தல் என்பன உள்ளிட்ட பிரிவின்கீழ் போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இதில் இனியனை தவிர மற்ற 4 பேரும் கைது செய்யப்பட்டனர்.

மீனவர்களில் ஒரு பிரிவினரின் தூண்டுதலின்பேரில் சுளுக்கிகள் தயாரித்ததை அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

## 'பஞ்ச்'சோந்தி பராக்!

மணல் விற்பனையை வரைமுறைப்படுத்த மாநில அளவில் கொள்கை உருவாக்கப்படும்!
– அமைச்சர் துரைமுருகன்




– நா.கி.பிரசாத், கோவை.

● **செய்தி:** மத்திய அரசின் திட்டங்களை தொலைக்காட்சி, வானொலி, மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும்! – எல்.முருகன்

**பஞ்ச்:** வீடியோ மூலம் மட்டும் வேணாமா தலைவரே?
– ஆர்.சுந்தரராஜன், சிதம்பரம்.

● **செய்தி:** 'தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்' என்பது 'தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்' என்று அழைக்கப்படும்!

**பஞ்ச்:** குடிசைகளையே ஒழிச்சுப்புட்டாங்களே!
– ஏ.ஆஸிக் ஜாரிஃப், ஆனைமலை.

கூட்டுறவு சங்கங்களில் பெறப்படும்

# வைப்பு நிதியில் வருமான வரிச் சட்டம் பின்பற்றப்படுகிறதா?

● கூட்டுறவுத் துறை சார் வல்லுநர்கள் விளக்கம்

எஸ்.நீலவண்ணன்

■ விழுப்புரம்

கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களிடம் இருந்து பெறப்படும் வைப்பு நிதியில் வருமான வரி சட்டம் முறையாக பின்பற்றப்படுவது இல்லை; இதனால் பல்வேறு நிதி முறைகேடுகள் நடக்கின்றன என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தமிழகம் முழுவதும் 4,526 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 23 மத்திய கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே சந்தியமங்கலம் கிராமத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் நிரந்தர வைப்பு நிதி என்ற பெயரில் ரசீது வழங்கி, சுமார் ரூ.4 கோடி வரை மோசடி நடைபெற்றுள்ளதாக தகவல் வெளியானது. இச்சங்கத்தில் உறுப்பினராக உள்ள மருத்துவர் ஒருவர் மட்டுமே ரூ.1 கோடிக்கு மேல் நிரந்தர வைப்பில் பணம் செலுத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து துறை ரீதியான விசாரணை நடந்து வருகிறது. வணிக குற்றப் புலனாய்வு போலீஸார் விசாரிக்கின்றனர்.

இதுகுறித்து விழுப்புரம் மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண் இயக்குநர் பாலகிருஷ்ணனிடம் கேட்டபோது, "வருமானவரி சட்டப்படி தனி நபர் உச்சவரம்பு, வருமான வரி தாக்கல், போன்ற நடைமுறைகள் கூட்டுறவு சங்கங்களில் பின்பற்றப்படுகின்றன" என்றார்.

இப்பிரச்சினையைத் தொடர்ந்து, கூட்டுறவு சங்கங்களில் எவ்வளவு தொகை வைப்பு நிதி பெறலாம் என்ற சர்ச்சை நிலவுகிறது. இது தொடர்பாக கூட்டுறவுத் துறைச் சார்ந்த வல்லுநர்களிடம் கேட்டபோது அவர்கள் தெரிவித்த விவரம் வருமாறு:

வருமானவரிச் சட்டத்தின்படி ஒரு தனி நபர் ரூ.5 லட்சத்துக்கு மேல் வைப்பு நிதி முதலீடு செய்ய முடியாது. ஒரு நபர் ரூ.5 லட்சத்துக்கு மேல் டெபாசிட் செய்தால் உடனடியாக வருமான வரி அலுவலகத்துக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். ஆனால் எந்த ஒரு கூட்டுறவு வேளாண் கடன் வழங்கும் சங்கமும் இதைச் செய்வதில்லை. இன்னும் சில சங்கங்களில் இந்த விதியை புறந்தள்ளி, ரூ.1 கோடிக்கும் மேலாக வைப்பு நிதியை பெற்றுள்ளனர். மாநிலப் பதிவாளர் ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு வட்டி விகிதத்தையும் கடைபிடிப்பதில்லை. தன்னிச்சையாக வட்டியை உயர்த்தி மக்களிடம் இருந்து வைப்பு நிதியைப் பெற்றுள்ளனர்.

### வழக்குகள் பாயும் நிலை

வைப்பு நிதி முதலீடு செய்வோரிடம் இருந்து டிடிஎஸ் பிடித்தம் செய்யப்பட வேண்டும். அல்லது உரிய படிவத்தைப் பெற்று சங்கத்தில் பராமரிக்கப்பட வேண்டும். இதையும் எந்த சங்கமும் செய்வதில்லை. மேற்படி படிவங்களை வாங்கி பராமரித்தாலும், ஆண்டுக்கு ஆண்டு வருமான வரித் தாக்கல் செய்து சங்கத்தில் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும். இதை எதையும் கூட்டுறவு சங்கங்கள் கண்காணிப்பது இல்லை. இதனால் எதிர்காலத்தில் கூட்டுறவு சங்கங்களின் மீது வருமானவரி வழக்குகள் பாயும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

வருமான வரியை ஏய்க்கும் மனநிலையில் உள்ளவர்கள் இதன் காரணமாகவே தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களையும், பணியாளர் கூட்டுறவு கடன் சங்கங்களையும் அணுகி அதிக முதலீடு செய்கிறார்கள். தனி நபர் உச்சவரம்பு, வருமான வரித் தாக்கல் போன்ற நடைமுறைகளை கூட்டுறவு சங்கங்கள் பின்பற்றுகின்றனவா என்பதை உடனடியாக ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் வட்டியாக ரூ.40 ஆயிரம் பெறும் வாடிக்கையாளர்களிடம் டிடிஎஸ் பிடித்தம் செய்யப்படுகிறது.

ஆனால் தொடக்கக் கூட்டுறவு சங்கங்களில் வருமான வரி தொடர்பாக எவ்வித ஆவணங்களும் பராமரிக்கப்படுவது இல்லை என்பது தான் தற்போதைய நிலை என்று தெரிவித்தனர்.

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper1). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup

TAMILTH ALL 1 National_01 S.PARTHIBAN Time







ஏஐஎம்ஐஎம் கட்சியை, தலிபான் தீவிரவாதிகளுடன் ஒப்பிட்டு பேசி வருகிறார் பாஜக மூத்த தலைவர் சி.டி.ரவி. சர்வதேச அரசியல் தெரியாத குழந்தை அவர்.

● **அசாதுதீன் ஒவைசி,** ஏஐஎம்ஐஎம் கட்சித் தலைவர் ●



விமானங்களில் பயன்படுத்தப்படும் எரிபொருள் மீதான வாட் வரியை குறைக்கவேண்டும். அப்போதுதான் மத்தியபிரதேசத்தில் உள்ள பல்வேறு பகுதிகளை கூடுதல் விமானச் சேவைகள் மூலம் இணைக்க முடியும்.

● **ஜோதிர் ஆதித்ய சிந்தியா,** மத்திய அமைச்சர் ●



| ஒரே நாளில் | இதுவரை |
|---|---|
| 34 ஆயிரம் பேர் குணமடைந்தனர் | 3.19 கோடி பேர் குணமடைந்தனர் |
| 1.33 கோடி பேருக்கு தடுப்பூசி | 65.41 கோடி பேருக்கு தடுப்பூசி |
| 16.06 லட்சம் பரிசோதனை | 52.31 கோடி பரிசோதனை |

# ஏழுமலையான் கோயிலில் ‘ஸ்ரீவாரி தன பிரசாதம்’ திட்டம்

■ **திருமலை**

திருப்பதி ஏழுமலையான் கோயில் உண்டியலில் நேர்த்தி கடனாக பக்தர்கள் ‘முடிப்பு’ செலுத்துவது ஐதீகம். அவற்றில் அதிகமாக சில்லறை நாணயங்கள் இருக்கும். தினமும் ரூ.20 லட்சம் வரை சில்லறை நாணையங்கள் வருகின்றன.

**பக்தர்கள் காணிக்கை**

அவற்றை ரூ.1, 2, 5 என தனித் தனியாக பிரித்து மூட்டை கட்டி, பத்திரமாக வைக்கின்றனர். இதனுடன் வெளிநாட்டு நாண யங்கள், கரன்சிகளும் பாதுகாக்கப் படும். இந்த ‘ஸ்ட்ராங் ரூம்’-இல் ஏழுமலையானுக்கு மன்னர்கள் காலம் முதல் தற்போது பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய விலையுயர்ந்த நகைகளும் பாது காக்கப்படுகிறது.

ஆனால், சில்லறை நாணயங்களை கணக்கு போட்டு வாங்குவதற்கு நேரம் அதிகமாகும் என்பதால் எந்த வங்கியும் இதனை கணக்கில் வைக்க முன்வர வில்லை. இதனால், 1 ரூபாய் நாணயங்களை நூறு, நூறாக பாக்கெட்டில் அடைத்து, அதனை ஸ்ரீவாரி தன பிரசாதம் எனும் பெயரில் திருப்பதி தேவஸ்தானம் நேற்று முதல் விற்பனை செய்ய தொடங்கியது.

இவற்றை தங்கும் அறை களுக்கு டெபாசிட் செய்த பக்தர்களுக்கு, அவர்கள் அறை களை காலி செய்த பின்னர் டெபாசிட் பணத்தை திரும்ப கொடுக்கும் போது இந்த சில்லறை நாணயங்களை வழங்கி வருகிறது. இதனை வேண்டா மெனும் பக்தர்களுக்கு ரூபாய் நோட்டுகளையே தேவஸ்தானம் வழங்கி விடுவது குறிப்பிடத் தக்கது.

**கருத்துச் சித்திரம்** கருத்து: **சி.பி.செந்தில் குமார்,** சென்னிமலை.




▲ வாசகர்களே... இந்த இடம் உங்களுக்கு. கருத்துச் சித்திரத்துக்கான உங்கள் எண்ணத்தை முடிந்தவரையில் வரைந்தோ, எழுத்தில் விவரித்தோ அனுப்பிவையுங்கள். சிறந்த கருத்துகளைச் சித்திரமாக்க எங்கள் ஓவியர் காத்திருக்கிறார். cartoon@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, 044-28552215 என்ற தொலைநகல் எண்ணுக்கோ உங்கள் எண்ணங்களை அனுப்பலாம். பிரசுரிக்கப்படும் கருத்துச் சித்திரங்களுக்குத் தக்க சன்மானம் காத்திருக்கிறது.

**உங்கள் அலைபேசி / தொலைபேசி எண் மற்றும் பின்கோடு ஆகியவற்றைத் தவறாமல் குறிப்பிட்டு அனுப்பவும்.**

## சின்னச் சின்னதாய்...



▲ அசாமில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக கனமழை பெய்து வருவதால் அங்குள்ள பல்வேறு மாவட்டங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மோரிஹான் மாவட்டத்தில் படகு மூலமாக சிலிண்டர்களை எடுத்துச் செல்லும் கிராமத்தினர். படம்: பிடிஐ

### தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு ஜனசேனா கட்சித்தலைவர் பாராட்டு

**விஜயவாடா:** ஆந்திர மாநிலத்தில் ஜனசேனா கட்சி தலைவரும், நடிகர் சிரஞ்சீவியின் தம்பியுமான பவன் கல்யாண் நேற்று தனது ட்விட்டர் பக்கத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை பாராட்டியுள்ளார்.

ட்விட்டரில் அவர் கூறியிருப்பதாவது:

எந்த கட்சியாக இருந்தாலும், ஆட்சியை பிடிக்க வேண்டுமானால் அரசியல் செய்ய வேண்டும். ஆனால், ஆட்சிக்கு வந்த பின்னர் அரசியல் செய்ய கூடாது. இதனை வார்த்தைகளால் அல்ல, செயல்களால் நீங்கள் (முதல்வர்) செய்து வருகிறீர்கள். உங்களது ஆட்சியின் நிர்வாக திறன், செயல்பாடுகள் உங்கள் மாநிலத்துக்கு மட்டுமல்லாது, பிற மாநிலங்களுக்கும் ஊக்கம் அளிக்கும் விதமாக உள்ளது. உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு நடிகர் பவன் கல்யாண் குறிப்பிட்டுள்ளார்.



▲ தெலங்கானா தலைநகர் ஹைதராபாத்தில் உள்ள ராஜ்பவன் அரசுப் பள்ளியில் நேற்று ஆய்வு மேற்கொண்ட ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன்.

### தெலங்கானாவில் பள்ளிகள் திறப்பு ஆளுநர் தமிழிசை நேரில் ஆய்வு

**ஹைதராபாத்:** தெலங்கானா மாநிலத்தில் கரோனா பாதிப்பு குறைந்துள்ள நிலையில் அரசு மற்றும் தனியார் பள்ளிகள் நேற்று முதல் திறக்கப்பட்டன. இதையடுத்து ராஜ்பவன் அரசுப் பள்ளிக்கு மாநில ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் வருகை தந்தார். பள்ளியில் கரோனா பாதுகாப்பு ஏற்பாடுகளை அவர் ஆய்வு செய்தார். கரோனா பாதுகாப்பு விதிமுறைகளை கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும் என ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

அப்போது ஆளுநர் தமிழிசை பேசும்போது, “மாணவர்களின் உடல் நலத்தை பேணிக் காப்பது பள்ளி நிர்வாகத்தின் கடமை. ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களை அக்கறையுடன் கவனித்துக் கொள்ள வேண்டும். கரோனா நிபந்தனைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். வகுப்பறைகளில் கிருமி நாசினி தெளிக்க வேண்டும். மாணவர்களுக்கு பள்ளி நிர்வாகங்களே இலவசமாக முகக்கவசம் வழங்கலாம். சமூக இடைவெளியை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்” என்றார்.

## காஷ்மீர் தீவிரவாதிகளின் குடும்பத்தினருடன்
# ராணுவ உயரதிகாரிகள் சந்திப்பு

● **சமூகத்தில் மீண்டும் இணைவதற்கு வழிகாட்ட வேண்டுகோள்**

■ **ஸ்ரீநகர்**

காஷ்மீர் தீவிரவாதிகளின் குடும்பத்தினருடன் ராணுவ, போலீஸ் உயரதிகாரிகள் சந்தித்து பேசினர். அப்போது தங்கள் பிள்ளைகள் மீண்டும் சமூகத்தில் இணைவதற்கு வழிகாட்ட வேண்டுகோள் விடுத்தனர்.

தெற்கு காஷ்மீரின் ஷோபியான் நகரில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு நடைபெற்றது. இதில் காஷ்மீர் பள்ளத்தாக்கில் செயல்பட்டு வரும் தீவிரவாதிகளின் 80-ம் மேற்பட்ட குடும்பங்கள் பங்கேற்றன. காஷ்மீர் போலீஸ் ஐஜி விஜய்குமார், ராணுவத்தின் 15-வது படைப்பிரிவின் கமாண்டிங் அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் டி.பி.பாண்டே, விக்டர் ஃபோர்ஸ் கமாண்டிங் அதிகாரி மேஜர் ஜெனரல் ரஷீம் பாலி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பில் லெப்டினன்ட் ஜெனரல் பாண்டே பேசும்போது, “உங்களை சந்தித்து பேசவேண்டும் என்ற விருப்பத்தை விக்டர் படை கமாண்டிங் அதிகாரியிடம் நான் தெரிவித்தேன். இதன் மூலம் வன்முறைப் பாதையிலிருந்து உங்கள் பிள்ளைகளை வெளி யேற்ற வேண்டும் என உங்களை கேட்டுக் கொள்ள விரும்பினேன். அவர்களை அமைதியாக வெளி யேற்றுங்கள். நீங்கள் அதை எப்படி செய்வீர் என்று எனக்குத் தெரியாது. அது உங்களைச் சார்ந்தது. இதில் இளைஞர்கள் ஆயுதங்களை கைவிட்டால் அவர் களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் நாங்கள் தடுப்போம். உங்கள் பிள்ளைகளை காப்பாற்றுவோம் என உறுதி அளிக்கிறேன்” என்றார்.

தெற்கு காஷ்மீர் தீவிர வாதிகளின் குடும்ப உறுப்பி னர்களுடன் போலீஸ் மற்றும் ராணுவ உயரதிகாரிகள் நேரடி யாக பேசுவது இதுவே முதல் முறையாகும். ஷோபியான், புல் வாமா, குல்காம், அனந்த்நாக் போன்ற தெற்கு காஷ்மீர் மாவட்டங்களில் இருந்து வந்த குடும்பங்கள் இதில் பங்கேற்றன.

இது தொடர்பாக ராணுவ செய்தித் தொடர்பாளர் கூறும் போது, “தீவிரவாதிகளின் குடும்பங்களுக்கு மத்தியில் நம் பிக்கையை ஏற்படுத்துவதும் பாதுகாப்பு படையினரின் விருப் பத்தை தெரிவிப்பதும் இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும். சமூக மற்றும் குடும்ப ஆதரவு, ஆண்களை வன்முறை மற்றும் மரணத்தின் பாதையிலிருந்து விலக்கிவிடும். தீவிரவாத செயல்களை கையாளக்கூடிய, ஆயுதங்கள் இல்லாத தீவிரவாதி கள் மீது பாதுகாப்பு படையினர் கவனம் செலுத்தி வருகின்றனர். வன்முறையின் சுழற்சியை உடைப்பதே இதன் நோக்கமாகும்” என்றார்.

இதற்கு முன் கடந்த பிப்ரவரியில் தெற்கு காஷ்மீரின் புல்வாமா மாவட்ட இளைஞர்களுடன் மேஜர் ஜெனரல் பாலி கலந்துரை யாடினார். இதுவும் மற்றொரு வகை முதல் முயற்சியாக கூறப் பட்டது. -பிடிஐ

# ‘கிருஷ்ணர்’ வேடத்தில் வந்த சிறுவனுக்கு தாஜ்மகாலில் தடை

● **இந்து அமைப்புகள் எச்சரிக்கை**

**ஆர்.ஷபிமுன்னா**

■ **புதுடெல்லி**

காதல் சின்னமான தாஜ்மகால் உலக அதிசயமாகவும், யுனெஸ் கோவின் பாதுகாக்கப்பட்ட சின்ன மாகவும் உள்ளது. கரோனா ஊரடங்கு காரணமாக மூடப்பட்டிருந்த தாஜ்மகால், கடந்த ஜூன் 16-ம் தேதி திறக்கப்பட்டது. கடந்த திங்கட்கிழமை கிருஷ்ண ஜெயந்தி அன்று ஒரு குடும்பத்தினர் தாஜ்மகாலுக்கு வந்தனர். அவர்களில் ஒரு சிறுவன் ஸ்ரீ கிருஷ்ணர் போல் உடை அணிந்திருந்தான்.

இதனால், தாஜ்மகாலில் இருந்த இந்திய தொல்லியல் ஆய்வக (ஏஎஸ்ஐ) அலுவலர்கள், சிறுவனை உள்ளே அனுமதிக்க மறுத்தனர். சிறப்பு அனுமதி பெற்று வருமாறு சிறுவன் குடும்பத்தினரை திருப்பி அனுப்பினர். இதனால் சிறுவனின் குடும்பத்தினர் தாஜ்மகாலை சுற்றிப் பார்க்காமல் ஏமாற்றத்துடன் திரும்பினர். இந்த தகவல் சமூக வலைதளங்களில் வைரலானது.

இச்சம்பவத்துக்கு ஆக்ராவின் இந்து அமைப்புகள் கண்டன குரல் எழுப்பியுள்ளன. “ஏஎஸ்ஐ அதிகாரிகள் மன்னிப்பு கேட்க வேண்டும். மறுத்தால் தாஜ் மகாலுக்குள் எந்த பார்வை யாளரையும் நுழைய விடாமல் போராட்டம் நடத்துவோம்” என்று ராஷ்டிரிய இந்து பரிஷத் (இந்தியா) அமைப்பு எச்சரித்துள் ளது.

இதுகுறித்து ‘இந்து தமிழ்’ நாளிதழிடம் ஆக்ரா மண்டல ஏஎஸ்ஐ துணை கண்காணிப்பாளர் வசந்த் கே.ஸ்வர்ன்கர் கூறும் போது, “தாஜ்மகாலில் எந்த விளம் பர நடவடிக்கைகளுக்கும் அனு மதி இல்லை. இதற்கு அலுவ லகத்தில் முன்கூட்டியே சிறப்பு அனுமதி பெற வேண்டும். இந்த விதிகளை சுட்டிக் காட்டியே அனுமதி மறுக்கப்பட்டது” என்று தெரிவித்தார்.

இதற்கிடையில், தாஜ் மகாலுக்கு கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# 60 இளைஞர்கள் மாயமா? காஷ்மீர் போலீஸார் மறுப்பு

■ **ஸ்ரீநகர்**

ஆப்கனில் தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றியுள்ள நிலையில், காஷ்மீரில் 60-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் மாயமானதாக வெளியான செய்திகளை காஷ்மீர் போலீஸார் மறுத்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றி உள்ளனர். காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் பல் வேறு குழுக்களைச் சேர்ந்த தீவிரவாதிகள் ஊடுருவி இருப்பதாகவும் சமீபகாலமாக காஷ்மீரைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட இளைஞர்களைக் காணவில்லை என்றும் சமூக ஊடகங்களில் செய்திகள் வெளி யானது. காணாமல் போன இளைஞர்கள் தீவிரவாதப் பயிற்சி பெற சென்றுள்ளார்களா என்றும் சந்தேகங்கள் எழுப்பப்பட்டன.

இந்நிலையில், காஷ்மீரில் இளைஞர்கள் காணாமல் போனதாக வெளியான செய்தி களை காஷ்மீர் போலீஸார் மறுத்துள்ளனர். இது தொடர் பாக சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் பொய்யானவை. முற்றிலும் அடிப்படையற்றவை என்று காஷ்மீர் போலீஸ் ஐ.ஜி. கூறியிருப்பதாக போலீஸார் ட்விட்டரில் பதிவிட்டுள்ளனர். தலி பான்கள் கட்டுப்பாட்டில் ஆப்கன் வந்துள்ளதால் ஜம்மு காஷ்மீரின் பாதுகாப்பு நிலைமை குறித்து கவலைப்படத் தேவையில்லை என்று இந்திய ராணுவம் கடந்த வாரம் கூறியிருந்தது குறிப் பிடத்தக்கது. -பிடிஐ



▲ கடந்த 1971-ல் பாகிஸ்தானுடன் நடந்த போரில் இந்தியா வெற்றி பெற்றதன் 50-வது ஆண்டு வெற்றி தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு, மும்பையில் ‘கேட் வே ஆஃப் இந்தியா’ நினைவுச் சின்னத்தின் உச்சியில் ராணுவ அதிகாரிகள் தேசியக் கொடியை ஏற்றி கொண்டாடினர். படம்: ஏஎப்பி

## போதைப் பொருள் விற்கும் நபரின் வங்கிக் கணக்கில்
# தெலுங்கு நடிகர்கள் பணம் செலுத்தியது அம்பலம்

● **அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் தீவிர விசாரணை**

**என்.மகேஷ்குமார்**

■ **ஹைதராபாத்**

போதைப் பொருட்களை சட்ட விரோதமாக விற்பனை செய்யும் வெளிநாட்டு நபரின் வங்கி கணக்கில் அடிக்கடி பெரிய தொகை களை தெலுங்கு திரைப்பட நடிகர், நடிகைகள் செலுத்துவது அமலாக்கப் பிரிவினரின் விசாரணையில் அம்பலமாகி உள்ளது.

போதைப்பொருள் தொடர்பான விசாரணைக்கு ஆஜராகும்படி தெலுங்கு திரையுலகைச் சேர்ந்த 12 பேருக்கு ஹைதராபாத் அமலாக்கப் பிரிவினர் கடந்த 2 வாரங்களுக்கு முன் சம்மன் அனுப்பினர். ஏற்கெனவே கடந்த 2017-ல் இந்த விவகாரத்தில் தெலுங்கு திரையுலகைச் சேர்ந்த 11 பேரிடம் கலால் துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

இதனிடையே, போதைப் பொருள் விற்பனையில், ஹவாலா பணம் கைமாறியதாக அமலாக்கப் பிரிவினருக்கு தகவல் கிடைத்தது. இதில் முக்கிய குற்றவாளியான நைஜீரிய நாட்டைச் சேர்ந்த கெல்வின் என்பவரிடம் கலால் மற்றும் அமலாக்கப் பிரிவினர் 12 முறை விசாரணை நடத்தியுள்ளனர்.

இவர் அப்ரூவராக மாறி பல தகவல்களை அளித்து வருகிறார். அதன் அடிப்படையிலேயே, தெலுங்கு திரையுலகை சேர்ந்த 12 பேரிடம் தற்போது விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

நேற்றுமுன்தினம், பிரபல இயக்குநர் பூரி ஜெகன்நாத்திடம் அமலாக்கப் பிரிவினர் 3 மணி நேரம் விசாரணை நடத்தினர். இவரது 3 வங்கி கணக்குகளை ஆய்வு செய்தனர். இவரை தொடர்ந்து, போதை பொருள் விற்பனையாளரான கெல்வினிடம் மீண்டும் நேற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதில் பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாகின.

இவரது வங்கி கணக்கில் அடிக்கடி பெரிய தொகையை தெலுங்கு திரையுலகைச் சேர்ந்த நடிகைகள், நடிகர்கள், இயக்குனர் செலுத்தியது தெரியவந்தது. இதனால் தெலுங்கு திரையுலகில் போதைப் பொருள் பயன்பாடு தற்போது ஊர்ஜிதமாகி உள்ளது. பூரி ஜெகன்நாத்தை தொடர்ந்து, நடிகைகள் மொமைத் கான், சார்மி, ரகுல் ப்ரீத்சிங் மற்றும் நடிகர்கள் தருண், ரவிதேஜா, நவ்தீப் உட்பட மொத்தம் 12 பேரிடம் வரும் 22-ம் தேதி வரை விசாரணை நடத்தவுள்ளதாக அமலாக்கப் பிரிவினர் தெரிவித் துள்ளனர். இதில் மேலும் பல உண்மைகள் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்தியாவில் சி.1.2 கரோனா வைரஸ் கண்டறியப்படவில்லை

● **மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் அறிவிப்பு**

■ **புதுடெல்லி**

இந்தியாவில் சி.1.2 உருமாறிய கரோனா வைரஸ் கண்டறியப்பட வில்லை என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித் துள்ளது.

கடந்த 2019-ம் ஆண்டு இறுதியில் சீனாவில் உருவான கரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பல லட்சம் மக்களின் உயிரைப் பறித்துள்ளது. இதை தடுக்க தடுப் பூசி கண்டுபிடிக்கப்பட்டு மக் களுக்குச் செலுத்தப்பட்டு வரு கிறது. ஆனால், கரோனா வைரஸ் உருமாறி பரவி வருகிறது.

இந்நிலையில் தென் ஆப்பிரிக் காவில் சி.1.2 என்ற புதிய உரு மாறிய கரோனா வைரஸ் கண்ட றியப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. ஆனால் இந்த வைரஸ் வகை இந்தியாவில் இன்னும் பரவவில்லை என்று மத்திய சுகா தாரத் துறை அமைச்சகம் தெரிவித் துள்ளது.

கடந்த மே மாதம் தென் ஆப்பிரிக் காவில் முதலில் கண்டறியப்பட்ட உருமாறிய சி.1.2 கரோனா வகை அதிவேகமாகப் பரவ வாய்ப் புள்ளதாக அந்நாட்டின் தேசிய தொற்றுநோய் நிறுவனம் (என்ஐசிடி) மற்றும் குவாசூலு-நடால் ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். கடந்த ஆகஸ்ட் 13-ம் தேதி வரை சீனா, காங்கோ, மொரீஷியஸ், இங்கிலாந்து, நியூஸிலாந்து, போர்ச்சுகல், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் உருமாறிய கரோனா வகை கண்டறியப்பட்டுள்ளது.

கரோனா முதல் அலையின் போது தென் ஆப்பிரிக்காவில் தோன்றிய சி.1 என்ற உருமாறிய கரோனாவில் இருந்து மேலும் உருமாற்றம் அடைந்து இந்த புதிய சி.1.2 உருமாறிய கரோனா வைரஸ் தோன்றியிருக்கலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ள னர்.

முதலில் பீட்டா மற்றும் டெல்டா கரோனா வகைகள் கண்டறியப்பட்ட போது, அவை எப்படிப் பரவியதோ அதுபோலவே இப்போது இந்த பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்த உருமாறிய கரோனாவின் புரத ஸ்பைக் பெரியளவில் உருமாற்றம் அடைந்துள்ளதாகவும் இது சீனோவில் முதலில் கண்டறியப்பட்ட வைரஸை விடப் பெரியளவில் மாறியுள்ளதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இது உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது.

இதுகுறித்து ஆஸ்திரேலி யாவின் சிட்னி நகரிலுள்ள வைரஸ் நிபுணரும், நோய்த் தடுப்பு மற்றும் தொற்று நோய்கள் இன்ஸ்டிடி யூட்டின் விரிவுரை யாளருமான டாக்டர் மேகன் ஸ்டீன் கூறும் போது, “அந்த குறிப்பிட்ட உரு மாறிய வைரஸ் வருவதைப் பார்க் கும்போது, அது என்ன செய்யப் போகிறது என்பதைப் பார்க்கவும், மாறுபாடுகளைக் கண்காணிக்கவும் விரும்புகிறோம். இதற்கான ஆய்வு கள் நடைபெற்று வருகின்றன. இவை வேகமாக பரவும் தன்மை கொண்டவை எனத் தெரிய வந்துள்ளது" என்றார்.

இதுகுறித்து கொல்கத்தாவின் சிஎஸ்ஐஆர் -இந்திய ரசாயன உயிரியல் நிறுவனத்தின் ஆய்வா ளர் உபாசனா ரே கூறும்போது, "உருமாறிய கரோனா வேகமாகப் பரவும் ஆபத்து உள்ளது. புரத ஸ்பைக் பெரியளவில் மாற்றமடைந் துள்ளதால் தடுப்பூசி அளிக்கும் நோயெதிர்ப்பு சக்தியிலிருந்து இது தப்பவும் வாய்ப்புள்ளது. எனவே, இந்த கரோனா உலகெங்கும் பரவினால் இது மிகப்பெரிய பிரச் சினையை ஏற்படுத்தும். எனவே, இந்த வைரஸ் பரவுவதை நாம் முதலில் கட்டுப்படுத்த வேண்டும்" என்றார்.

ஆனால் இந்த வகை சி.1.2 உருமாறிய கரோனா வைரஸால் இந்தியர்கள் யாரும் பாதிக்கப் படவில்லை என்று மத்திய சுகா தாரத்துறை அமைச்சகம் தெரி வித்துள்ளது.

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper1). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup

இந்து தமிழ் திசை
# ஆனந்த ஜோதி
உள்ளத்தில் உண்மை ஒளி
வியாழன், செப்டம்பர் 2, 2021 anandajothi@hindutamil.co.in

# ஆட்சியர் பாடிய பதிகப் பாடல்!



டி.எல். தியாகராஜன், கேசவன் ரவி, செந்தில்


■ வா.ரவிக்குமார் ■

**நெற்றியில் திருநீறு இட்டுக்கொள்வது சைவ அடியார்களுக்கு மட்டும் அல்ல எல்லோருக்குமே மிகவும் அத்தியாவசியமானது என்பார் திருமூலர். எவராலும் தீர்க்க முடியாத கூன் பாண்டியனின் நோயை திருநீறு பூசி, திருநீற்றுப் பதிகத்தைப் பாடி குணமாக்கினார் திருஞானசம்பந்தர்.**

‘மந்திரமாவது நீறு’ எனத் தொடங்கும் திருநீற்றுப் பதிகத்தின் பாடல்களுக்கு இசையமைத்து தன்னிடம் இசை படிக்கும் மாணவரையே பாடவைத்திருக்கிறார் டி.எல்.தியாகராஜன். இவர், கர்னாடக இசையிலும் திரை இசையிலும் புகழோடு விளங்கிய திருச்சி லோகநாதனின் மகன். ‘இசைத் தென்றல் திருச்சி லோகநாதன் மியூசிக் அகாடமி’யில் இணையத்தின் மூலமாக இசையின் பால பாடத்தை டி.எல்.தியாகராஜனிடம் படிக்கத் தொடங்கிய கேசவன் ரவி ஐ.ஏ.எஸ்., தற்பொழுது மிசோரம் மாநிலத்தின் சியாகா மாவட்ட ஆட்சித் தலைவராக பணியாற்றி வருபவர்.

நீண்ட காலம் முறையாக இசைப் பயிற்சி எடுப்பவர்களுக்கே பதிகங்களை பாடுவது எளிமையாக இருக்காது. ஆனால் உச்சரிப்பு சுத்தத்துடன் இனிமையான குரலில் பாடியிருக்கும் கேசவன் ரவியிடம் பதிகப் பாடலைப் பாடிய அனுபவத்தைக் குறித்துக் கேட்டோம்.

“எனது சொந்த ஊர் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் வட்டத்தில் உள்ள சங்கரன் குடியிருப்பு என்ற சிறு கிராமம். இசையின் மீது எனக்கு ஏற்பட்ட ஆர்வத்துக்குக் காரணம் எனது தந்தைதான். சிறு வயதில் இருந்தே திரைப்படப் பாடல்களை அவர் ரசித்துப் பாடுவதைப் பார்த்து வளர்ந்தேன். ஆனால் முறையாக இசையைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை. ஆனாலும் பள்ளியில் நடந்த ஒரு பாட்டுப் போட்டியில் அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்களில் மிகவும் பிரசித்தி பெற்ற ‘முத்தைத் தரு’ பாடலை அப்பாவிடம் கற்றுக்கொண்டு பாடினேன். அதன் பின்னர் பின்னணி இசைக் கருவிகளோடு பாட வேண்டும் என்று மனத்தில் ஆசை இருந்தாலும் அதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.



‘ஸ்முயூல்’ கரோக்கி செயலியில் ஓய்வு நேரத்தில் பாட ஆரம்பித்தேன். அந்தப் பாடல்களைக் கேட்ட தமிழ்வேந்தன் என்ற ஐ.ஆர்.எஸ். அதிகாரி, “நீ நன்றாகப் பாடுகிறாய். சங்கீதம் கற்றுக்கொள்” என்று பாரம்பரியமான இசைக் குடும்பத்தின் வாரிசான டி.எல். தியாகராஜனிடம் அறிமுகப்படுத்தினார். டிஜிட்டல் யுகத்தின் பலனாக, மிசோரத்தில் இருந்தாலும் இணையம் மூலமாக தியாகராஜன் சாரிடம் ஆர்வமாக இசை கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன்.

ஒரு மாதத்திற்குள்ளாகவே நான் ‘ஸ்முயூலில்’ பாடும்போது செய்யும் தவறுகள் புரிபட ஆரம்பித்தன. பாடுவதை நிறுத்தி கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். ஆனால் இசையை முறையாக கற்றுக்கொள்ளத் தொடங்கிய சில நாட்களிலேயே, தியாகராஜன், ‘சென்னை வரும்பொழுது ஒரு பாடல் பதிவு செய்யலாம்’ என்று சொன்னது ஆச்சரியமாக இருந்தது. அதைவிடப் பயமாகவும், தயக்கமாகவும் இருந்தது. தேவாரம் போன்ற பழந்தமிழ்ப் பாடல்களை நான் எப்படி பாடி பதிவு செய்வது என்று யோசித்தேன். ஆனால் தியாகராஜனோ, “இது மிக எளிமையான மெட்டுதான் உங்களால் பாட முடியும்” என்று உற்சாகப்படுத்திப் பாட வைத்தார். எனது தமிழ் உச்சரிப்பில் சில தவறுகள் இயல்பாக வருவதுண்டு. அதையும் திருத்தம் செய்தார். அந்தப் பாடலின் பின்புலம், வரலாறு, அர்த்தம் என அனைத்தையும் எனக்குச் சொல்லித் தந்தார். நிறைய விவாதித்தார். விளக்கம் கூறினார். இதில் நான் எதுவுமே செய்யவில்லை. என்னுடைய ஆசிரியர் தியாகராஜன் சொன்னதை அப்படியே பாடினேன். ஆனால் எப்பொழுதும் பாடுவதுபோல அனுபவித்துப் பாடினேன். முதன்முதலாக ஒரு ஸ்டுடியோவில் மைக் முன்னால் நின்று பாடிய தருணம் மறக்க முடியாதது” என்று சிலிர்க்கிறார் கேசவன் ரவி.

மந்திரமாவது நீறு பாடலைக் காண:
https://bit.ly/3Dt4FCz

# வத்சாசுரனை வதம் புரியும் கண்ணன்

■ ஓவியர் வேதா ■

சித்திரப் பேச்சு

ஆயர்பாடியில் மாடுகள் மேய்த்துக் கொண்டிருக்கும் சிறுவன் கண்ணனைக் கொல்ல கம்சனால் அனுப்பப்பட்ட வத்சாசுரன் சற்றே உயரமான காளை கன்றுக்குட்டி வடிவில் உருமாறி மூக்கணாங்கயிறோ கழுத்தில் கயிறோ இன்றி வேகமாக அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தான். அந்தக் கன்றுக்குட்டியின் மீது லாகவமாக ஏறி கண்ணன் அமர, அசுரன் விஸ்வரூபம் எடுத்து கொல்ல நினைத்திருந்தான். சிறுவன் கண்ணனோ தன் எடையை அதிகரித்துக்கொண்டே செல்ல, அசுரன் பாரம் தாங்க முடியாமல் கண்ணனை கீழே தள்ள முயற்சிக்க, கண்ணனோ அதன் கழுத்தை லாகவமாகச் சுற்றி கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறான். கன்றுக்குட்டியின் விழிகள் பிதுங்கி தடுமாறித் தளரும் அந்த அழகான காட்சியை, ஸ்ரீ வைகுண்டத்தில் உள்ள ஸ்ரீ வைகுண்டநாதர் சன்னதிக்கு போகும் வழியில் மகா மண்டபத் தூண் ஒன்றில் காண்கிறோம். ஒரு அடி உயரத்தில் காணப்படும் சிற்பம் இது. வலது கரத்தால் கன்றுக்குட்டியின் கழுத்தை லாகவமாகச் சுற்றி பிடித்துக்கொண்டு, அதன் முதுகில் இடது கரத்தை ஊன்றியபடி, இடது காலை தூக்கி வைத்திருக்கும் பாங்கு வெகு அற்புதம். தலையில் அழகான கொண்டையும், முத்துகளால் ஆன நெற்றிச் சுட்டியும், சூரிய சந்திரன் போன்ற ஆபரணங்களும், கழுத்திலும் மார்பிலும் இடையிலும் முத்து மணிமாலைகளும் அலங்கரிக்கின்றன. சிறுவன் கண்ணன் முகத்தில் அசாதாரணமான புன்னகையும், கன்றுக்குட்டியின் விழிகள் பிதுங்கி பாரம் தாங்காமல் இரண்டு முன்னங்கால்களைத் தூக்கித் தடுமாறும் கோலத்தில் வடித்துள்ள சிற்பியின் திறமையை என்ன சொல்லிப் பாராட்ட. நாயக்க மன்னர்கள் மதுரையை ஆண்டதால் அவர்களுக்கு முத்து மணிகள் மீது அபார பிரியம் இருந்திருக்கலாம்.

போதாக்குறைக்கு தூத்துக்குடியும் அருகில் இருந்ததால் தங்களுக்கு மட்டுமின்றி, தாங்கள் வடித்த அனைத்து சிற்பங்களுக்கும் அணிவித்து மகிழ்ந்திருந்தனர் போலும்.



# கனவு மெய்ப்படும் தருணம்

■ எம்.ஏ. ஜோ ■

**சில நிமிடங்களே நீடித்த ஒரு அரிய நிகழ்வுக்காக பல்லாண்டுகள் ஆவலோடு காத்திருந்த இரண்டு நல்லவர்களைப் பற்றி பைபிள் பேசுகிறது. இந்த இருவரில் ஒருவர் ஆண்; மற்றவர் பெண்.**

இயேசு பிறந்து நாற்பது நாள்கள் கடந்தபோது, அவரை இறைவனுக்கு அர்ப்பணிக்கும் சடங்கினைச் செய்ய அவர் தாய் மரியாவும் யோசேப்பும் குழந்தை இயேசுவை தூக்கிக் கொண்டு நாசரேத்து ஊரிலிருந்து எருசலேம் நகரில் இருந்த ஆலயத்துக்கு வந்தனர். அந்த வேளையில்தான் இந்த இருவரும் ஆலயத்திற்கு வந்தனர்.

ஆலயத்துக்கு வந்த இந்த இருவருக்கும் அந்தக் குழந்தை யார் என்பது தெரிந்திருந்தது. மீட்பர் ஒருவர் பிறந்து, அந்நிய ஆட்சியாளரிடம் இருந்து அவர்களை மீட்டு, அவர்களுக்கு உரிமையும் வளமையும் தருவார் என்று யூத மக்கள் பல்லாண்டுகளாக மன்றாடி, ஏங்கி, எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஆனால், இத்தனை ஆண்டு கால மன்றாட்டுகள் கேட்கப்பட்டுவிட்டன. பல நூற்றாண்டு காலக் காத்திருப்பு முடிவுக்கு வந்துவிட்டது என்ற பேருண்மை மற்ற யாருக்கும் தெரியவில்லை. இந்த இருவருக்கும் அது தெரிந்திருந்தது. மீட்பராகப் பிறந்திருக்கும் குழந்தை இப்போது அவரது தாயோடும் வளர்ப்புத் தந்தையோடும் ஆலயத்தில் இருக்கிறார் என்ற உண்மையை உணர்ந்து இருவரும் ஆலயத்துக்கு விரைந்தனர்.




இருவரில் ஒருவர் சிமியோன். அவரைப் பற்றிய குறிப்புகள் சிலவே பைபிளில் உள்ளன. அவர் எருசலேம் நகரில் வாழ்ந்தவர். அறநெறி பிறழாத நேர்மையாளர். இறைப்பற்று மிக்கவர். தனது மக்களைப் போலவே வாக்களிக்கப்பட்ட மீட்பர் நிச்சயம் வருவார் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தவர் என்ற விவரங்கள் உள்ளன. அவரது வயது என்னவென்று குறிப்பிடப்படவில்லை. ஆனால், அவர் முதியவராகவே இருந்திருக்க வேண்டும் என்பது அறிஞர்கள், கலைஞர்கள் அனைவரின் கணிப்பு.



### கடவுளின் வாக்குறுதி

அவருக்கு கடவுள் ஒன்றை வாக்களித்திருந்தார். வரவிருக்கும் மீட்பரைக் காணும் வரை அவர் சாகப் போவதில்லை என்ற உறுதி அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது. ‘தனக்கு தரப்பட்ட வாக்குறுதி நிறைவேறும் தருணம் இதுதான். இத்தனை ஆண்டுகளாகத் தான் ஏங்கி எதிர்பார்த்திருந்த தருணம் இதுதான் என்று உணர்ந்ததால் ஏற்பட்ட பேருவகையோடு, சிமியோன் மரியாவிடம் இருந்து குழந்தை இயேசுவை வாங்கித் தன் கரங்களில் ஏந்தி, வான்நோக்கி கண்களை உயர்த்தி வேண்டினார். “இறைவா, மக்கள் அனைவரும் காணும் விதத்தில் நீர் அனுப்பியுள்ள மீட்பரை என் கண்கள் கண்டுகொண்டன. எனவே உமது சொற்படி உம் அடியான் என்னை அமைதியில் நிம்மதியாகப் போகவிடும்” என்று வேண்டினார்.

’இந்தத் தருணத்துக்காகத் தானே இத்தனை ஆண்டுகளாக நான் காத்திருந்தேன்! மீட்பரை என் கண்களால் கண்டு, எனது கரங்களில் ஏந்திய பிறகு, இனி என் வாழ்வில் நிகழ்வதற்கு வேறு என்னவிருக்கிறது? ஏதும் இல்லை. எனவே நான் இனி நிம்மதியாக இவ்வுலகை விட்டுப் போகலாம்’ என்ற அவரது நிம்மதிப் பெருமூச்சின் வெளிப்பாடுதான் இந்த மன்றாட்டு.

### இயேசுவின் வருகையை அறிவித்தவள்

இந்தப் பேற்றைப் பெற்ற பெண் அன்னா எனும் வயது முதிர்ந்த விதவை. மணமாகி ஏழு ஆண்டுகள் மட்டுமே கணவரோடு வாழ்ந்து, அவரைச் சாவுக்குப் பறிகொடுத்த பின் ‘இனி திருப்பணியே என் வாழ்வு. ஆலயமே என் இல்லம்’ என்று வாழ்ந்த அவருக்கு வயது எண்பத்தி நான்கு. வெறுமையும் விரக்தியும் சூழ்ந்திருக்க வேண்டிய விதவையின் வாழ்வை ஆலயப் பணிகள், பிரார்த்தனை, நோன்பு என்று நிரப்பிக்கொண்ட அவரும் அந்த வேளையில் ஆலயத்துக்கு வந்து, மனித உருவில் வந்திருக்கும் இறைமகனைக் கண்ணாரக் கண்டு கடவுளைப் புகழ்ந்தார். மற்ற குழந்தைகளைப் போன்றே தோன்றும் அந்த மழலையின் மகத்துவத்தை எல்லோரிடமும் எடுத்துச் சொன்னார்.

‘நீண்ட நாள் கனவு நிறைவேற வேண்டும். இந்த மகிழ்ச்சியான நிகழ்வு என் வாழ்விலும் நிகழ வேண்டும். இதனைச் சாதித்தே ஆக வேண்டும்’ என்று நம்மில் பலர் ஒரு தருணத்துக்காகக் காத்திருக்கிறோம்.

சிலரது வாழ்வில் இந்தத் தருணங்கள் வருவதே இல்லை. இலவு காத்த கிளிபோல இவர்கள் காத்திருந்து, காத்திருந்து காலம் போனாலும் ஏக்கங்கள் நிறைவேறுவதில்லை.

சிலர் செய்யும் தவறுகளால் இத்தகைய தருணங்கள் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன. காத்திருந்தது கிடைக்காமலேயே இவர்களின் காலம் முடிகிறது. எகிப்து நாட்டில் அடிமைகளாக அல்லலுற்ற யூத மக்களை மீட்டு, வழிநடத்தி, அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட இஸ்ரேல் நாட்டுக்குக் கூட்டி வரும் பொறுப்பு மோசேக்கு அளிக்கப்பட்டது. அதற்காக எண்ணற்ற முயற்சிகளை மேற்கொண்டு, பல சிரமங்களை அவர் ஏற்றாலும், ஒரு கணத்தில் அவர்களை மீட்டுக்கொண்டு வந்த இறைவனை அவர் முழுதும் நம்பாத காரணத்தால் வாக்களிக்கப்பட்ட நாட்டுக்குள் தன் மக்களோடு நுழையும் உன்னதமான தருணம் அவருக்கு மறுக்கப்பட்டது. தொலைவிலிருந்து அந்நாடு அவருக்குக் காட்டப்படுகிறதே தவிர, நாட்டுக்குள் காலடி எடுத்துவைக்கும் பேறு தரப்படவில்லை.



‘வாக்களிக்கப்பட்டது வழங்கப்படும். கனவு மெய்ப்படும். ஆனால் நாம் குறிக்கும் நமது நேரத்தில் அல்ல. இறைவன் தீர்மானிக்கும் அவரது தருணத்தில்’ என்பதை புரிந்துகொள்வதால்தான் சிறிதும் தளராமல் அவர்கள் கண்கள் ஒளிரக் காத்திருக்கிறார்கள்.

### நின்று காத்திருப்பவர்கள்

சிலர் சிமியோனைப் போல, அன்னாளைப் போல நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள். ஆங்கிலப் பெரும் கவிஞர் ஜான் மில்டன் எழுதிய ‘ஆன் ஹிஸ் பிளைன்ட்நெஸ்’ எனும் கவிதையின் கடைசி வரி பிரபலமானது. “வெறுமனே நின்று கொண்டு காத்திருப்போர்கூட பணியாற்றுபவர்களே.” (*“They also serve who only stand and wait.”*) காத்திருக்கும் காலத்தில் இவர்கள் இடைவிடாமல் மன்றாடுகிறார்கள். தொடர்ந்து முயலுகிறார்கள். அவர்களின் வேண்டுதல் கேட்கப்படும் வரை பொறுமையோடு காத்திருக்கிறார்கள்.

அடிமை முறை ஒழிப்பு, அரசியல் விடுதலை, தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சட்டப் பாதுகாப்பு, கறுப்பர் இன மக்களுக்குச் சம உரிமைகள், இரண்டு ஜெர்மனிகளின் இணைப்பு என மாற்றங்கள் நடக்க உலகம் எவ்வளவு காலம் காத்திருக்கவேண்டியிருந்தது!

காத்திருக்க இயலாதோர் பலவற்றை விரயமாக்கி விடுகின்றனர். இவர்களுக்குப் புரியாத ஒரு உண்மையை இறை நம்பிக்கை உள்ளோர் எளிதில் புரிந்துகொள்கின்றனர். அது என்ன? ‘வாக்களிக்கப்பட்டது வழங்கப்படும். கனவு மெய்ப்படும். ஆனால் நாம் குறிக்கும் நமது நேரத்தில் அல்ல. இறைவன் தீர்மானிக்கும் அவரது தருணத்தில்’ என்பதை புரிந்துகொள்வதால்தான் சிறிதும் தளராமல் அவர்கள் கண்கள் ஒளிரக் காத்திருக்கிறார்கள்.

சிமியோனுக்கும் அன்னாவுக்கும் தரப்பட்ட பேறு - வாக்குறுதி நிறைவேற்றப்படும் அழகிய, அற்புதத் தருணம் - நமக்கும் கிடைக்குமா?

(தொடரும்)

கட்டுரையாளர்,
தொடர்புக்கு : majoe2703@gmail.com

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper1). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup

TAMILTH ALL 1 Back_Pg M. RAJESH Time



## வாராக் கடன் வசூல் விவகாரத்தில் ஏழைகளை விடுத்து
# பெரிய நிறுவனங்களிடம் தீவிரம் காட்டுங்கள்

● பொதுத்துறை வங்கிகளுக்கு உச்ச நீதிமன்றம் அறிவுரை

■ புதுடெல்லி

வாராக் கடன் வசூல் விவகாரத்தில் பெரிய நிறுவனங்களிடம் தீவிரம் காட்டுங்கள் என்று பொதுத்துறை வங்கிகளுக்கு உச்ச நீதிமன்றம் அறிவுரை வழங்கியுள்ளது.

பொதுத்துறை வங்கியான கனரா வங்கி திருச்சியில் உள்ள சமூக சேவை சங்கத்துக்கு ரூ.48.80 லட்சம் கடன் தொகையை 1994-95-ம் ஆண்டு வழங்கியுள்ளது. இந்தத் தொகை சங்கத்தில் உள்ள 1,540 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. சங்கத்தின் நிரந்தர சேமிப்புத் தொகை வங்கி வசம் இருக்கும்போது கடனை வசூலிக்க தீவிரம் காட்டி உறுப்பினர்களை துன்புறுத்த வேண்டாம் என சென்னை உயர் நீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் தீர்ப்பு வழங்கியது. இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் கனரா வங்கி மனு தாக்கல் செய்தது.

இந்த மனு மீது நீதிபதிகள் டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான அமர்வு நேற்று தீர்ப்பு வழங்கியது.

வங்கிகள் அளித்த கடன் தொகை 90 நாள்களில் திரும்பாவிடில் அதாவது அதற்கான வட்டி வசூலாகாத சூழலில் அது வாராக் கடனாகக் கருதப்படும். அத்தகைய கடன் கணக்குகள் வாராக் கடன் பட்டியலில் சேர்க்கப்படும் என்பது தெரிந்ததே. சமூகத்தில் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களை மேம்படுத்துவதற்காக வழங்கப்படுவது தான் டிஐஆர் கடன். இத்தகைய கடன் பெற்றவர்கள் கால்நடை வளர்ப்பு, விவசாயம், பால் விற்பனை, கைவினைப் பொருள் தயாரிப்பு உள்ளிட்ட பணிகளில் ஈடுபடுபவர்களாவர். இந்தப் பணியில் உள்ளவர்கள் 10 ரூபாய் கொடுத்து புகைப்படம் எடுத்துக் கொடுக்கும் நிலையில் இல்லாத ஏழைகள். இத்தகையோருக்கு உதவுவதற்காக இந்த சங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து கடன் பெற்று வழங்கியுள்ளது.

அத்தகைய சங்கத்துக்கு எதிராக வழக்கு தொடர்ந்து என்ன பலனை எட்டப் போகிறீர்கள் என வங்கி சார்பில் ஆஜரான வழக்கறிஞரிடம் நீதிபதிகள் கேள்வியெழுப்பினர்.

சமூகத்தை மேம்படுத்த வேண்டும், அதில் உள்ள மக்களின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும் என்பதற்காகத்தான் வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இது ஒரு பொருளாதாரம் சார்ந்த நடவடிக்கை, இதில் வங்கிகள் தங்களுக்குள்ள தார்மீக பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

வங்கிகள் ஏற்கெனவே கடுமையான வாராக் கடன் சுமையில் அவதிப்படுவதாகவும், இதுபோன்ற கடன் வசூல் நடவடிக்கை மூலம் தான் அதை சரிக்கட்ட முடியும் என்று வழக்கறிஞர் பதிலளித்தார்.

இதைக் கேட்ட நீதிபதிகள், சமூகத்தில் ஏழ்மை நிலையில் உள்ளவர்களிடம் கடன் வசூல் செய்வதைக் காட்டிலும், பெரிய நிறுவனங்கள், பெரும் தொழிலதிபர்களுக்கு வழங்கிய கடனை வசூலிப்பதில் தீவிரம் காட்டலாம் என்று குறிப்பிட்டனர். இந்த சங்கத்துக்கு எதிராக இதுபோன்ற மேல் முறையீட்டை இனிமேலும் கனரா வங்கி தொடரக்கூடாது என்றும் நீதிபதிகள் தங்கள் உத்தரவில் குறிப்பிட்டனர்.

வங்கி விதி 136-ன் கீழ் சிறப்பு விடுப்பு மனுவாக தாக்கல் செய்ததாக வழக்கறிஞர் குறிப்பிட்டார்.

இதைக் கேட்ட நீதிபதிகள், விதி 136 என்ற பிரம்மாஸ்திரத்தை இதுபோன்ற வழக்குகளுக்கு பயன்படுத்தக் கூடாது என்று குறிப்பிட்டு கனரா வங்கியின் மனுவை நிராகரித்தனர். இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், இதுபோன்ற சங்கத்துக்கு எதிராக வழக்கு தொடர்ந்து தங்களது நேரத்தையும் காலத்தையும் விரயம் செய்ய வேண்டாம் என நீதிபதிகள் சுட்டிக்காட்டினர்.



▲ வடகிழக்கு மாநிலங்களில் கனமழை பெய்து வருகிறது. இதனால் அசாமின் மோரிகாவோன் மாவட்டம், போபிடோரா வனவிலங்குகள் சரணாலயத்தில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. அங்கு நேற்று பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த வனத்துறை ஊழியர்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விலங்குகளை பாதுகாப்பான இடத்துக்கு மாற்றும் பணியிலும் ஈடுபட்டனர். படம்: பிடிஐ

---

## இந்தியாவில் ஜூன் - ஜூலையில்
# 30 லட்சத்துக்கும் மேற்பட்ட வாட்ஸ் அப் கணக்குகளுக்கு தடை

■ கலிபோர்னியா

வாட்ஸ் அப் சமூக வலைதள நிறுவனம் சார்பில் மாதந்தோறும் வெளிப்படைத்தன்மை குறித்த அறிக்கை வெளியிடப்படுவது வழக்கம். அந்த வகையில், இம்மாதத்துக்கான அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

பயனாளர்களின் தனியுரிமை மற்றும் பாதுகாப்பில் வாட்ஸ் அப் நிறுவனம் அதிக கவனம் செலுத்தி வருகிறது. இதற்காக, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்பங்களில் அதிக முதலீடு செய்து வருகிறோம். அதுமட்டுமின்றி, நிபுணர்கள் உதவியுடன் இந்த விவகாரத்தை தொடர்ந்து அணுகுகிறோம். அவ்வாறு, பயனர்கள் பாதுகாப்பு விஷயத்தில் ஏதேனும் குளறுபடிகள் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட வாட்ஸ் அப் கணக்குக்கு தடை விதிக்கப்படுகின்றன. பயனாளர்களின் புகார்கள், தேவையற்ற விளம்பரங்கள் அல்லது தகவல்களை அனுப்புதல் போன்ற காரணங்களின் அடிப்படையிலும் வாட்ஸ் அப் கணக்குகளுக்கு தடை விதிக்கப்படும்.

இந்தியாவை பொறுத்தவரை, கடந்த ஜூன் 16 முதல் ஜூலை 31-ம் தேதி வரையிலான காலக்கட்டத்தில் இதுபோல 30 லட்சத்துக்கும் மேற்பட்ட வாட்ஸ் அப் கணக்குகளுக்கு தடை விதிக்கப்பட்டது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

# உலகின் உயரமான சாலை லடாக்கில் திறப்பு

● 18,600 அடி உயரத்தில் பாங்காங் ஏரி – லே நகரை இணைக்கிறது

■ லே (லடாக்)

உலகின் மிக உயரமான, பொது வாகனப் போக்குவரத்துக்கான சாலை லடாக்கில் திறக்கப்பட்டுள்ளது. இது கடல் மட்டத்தில் இருந்து 18,600 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

லடாக்கின் பாங்காங் ஏரியை லே நகருடன் இணைக்கும் புதிய சாலை, இந்திய ராணுவத்தின் 58-வது இன்ஜினீயர் ரெஜிமென்ட் சார்பில் கட்டப்பட்டுள்ளது. இது லே – பாங்காங் இடையிலான தூரத்தை 41 கி.மீ. குறைக்கிறது. இந்த சாலையை லடாக் எம்.பி. ஜம்யாங் செரிங் நம்கியால் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் அவர் பேசும்போது, “லே மாவட்டத்தில் உள்ள கர்துங்லா கணவாய்தான் பொதுமக்கள் பயன்பாட்டுக்குரிய உலகின் மிக உயரமான வாகனப் போக்குவரத்து சாலையாக இது வரை இருந்தது. 18,300 அடி உயரத்தில் அந்த சாலை அமைந்துள்ளது. தற்போது அதைவிட அதிக உயரத்தில் புதிய சாலை திறக்கப்பட்டுள்ளது. கேலா கணவாய் வழியாக 18,600 உயரத்தில் இந்த சாலை செல்கிறது. இனி இதுவே பொது வாகனப் பயன்பாட்டுக்குரிய உலகின் மிக உயரமான சாலையாக இருக்கும். வருங்காலத்தில் உள்ளூர் மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தில் இந்த சாலை முக்கியப் பங்கு வகிக்கும். குறிப்பாக லடாக்கின் லலோக் பிராந்தியத்தில் சுற்றுலா மேம்படும் என்பதால் அப்பகுதி மக்களின் முன்னேற்றத்துக்கு இந்த சாலை வழிவகுக்கும்.

உலகின் மிக உயரமான சாலை மற்றும் அரிய மருத்துவத் தாவரங்களை சுற்றுலாப் பயணிகள் காணலாம். பனிச்சறுக்கு விளையாட்டுகளில் ஈடுபடலாம். நாடோடி கால்நடைகள், ஏரிகள் மற்றும் பிற அழகிய இடங்களை அவர்கள் பார்க்கலாம்” என்றார்.

இந்த சாலையை கட்டமைத்த ராணுவ பொறியாளர் பிரிவை அவர் பாராட்டினார். எல்லைப் பகுதிகளில் சாலைகள், பாலங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்புகளை உருவாக்குவதில் அரசின் தீவிரத்தை அவர் எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில், லெப்டினன்ட் ஜெனரல் பி.ஜி. கே.மேனன், 14-ம் படைப்பிரிவு கமாண்டிங் அதிகாரி தஷி நம்கயால் யாக்சி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். -பிடிஐ

---

# கட்டிட முறைகேட்டில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை

● உ.பி. முதல்வர் ஆதித்யநாத் உத்தரவு

■ லக்னோ

உத்தரபிரதேசத்தில் இரட்டை கோபுர அடுக்கு மாடி கட்டிடத்தில் முறைகேட்டில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க முதல்வர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் நொய்டாவில் சூப்பர்டெக் நிறுவனத்தின் சார்பில் எமரால்ட் கோர்ட் என்ற பெயரில் 850 குடியிருப்புகளைக் கொண்ட 40 அடுக்குமாடி கோபுரம் கட்டப்பட்டது. இந்தக் கட்டிடம் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டதாகக் கூறி தொடரப்பட்ட வழக்கில், நொய்டா பெருநகர வளர்ச்சி ஆணைய அதிகாரிகள் இந்த முறைகேடான கட்டிடத்தை கட்ட ஒப்புதல் அளித்ததாகவும் கட்டிடத்தை இடிக்கவும் உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

இந்நிலையில், இரட்டை கோபுர அடுக்கு மாடி கட்டிடத்தில் முறைகேட்டில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க முதல்வர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார். இந்த விவகாரம் குறித்து யோகி ஆதித்யநாத் நேற்று ஆலோசனை நடத்தினார். அப்போது, முறைகேட்டில் தொடர்புடையவர்கள் மீது தேவைப்பட்டால் கிரிமினல் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கும்படியும் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டார்.

---

## இலங்கையில் மின்னேரியா சரணாலயத்தில்
# ஒரே பிரசவத்தில் 2 குட்டிகளை ஈன்ற யானை

■ கொழும்பு

இலங்கை நாட்டில் ஒரே பிரசவத்தில் யானை 2 குட்டிகளை ஈன்ற அரிய சம்பவம் நடந்துள்ளது.

இலங்கையின் மின்னேரியா யானைகள் சரணாலயத்தில் உள்ள பின்னவாலா யானைகள் முகாமில் சுராங்கி என்ற பெண் யானை உள்ளது. கருவுற்றிருந்த இந்த யானை நேற்றுமுன்தினம் 2 ஆண் குட்டிகளை ஒரே பிரசவத்தில் ஈன்றது.

1941-ம் ஆண்டில் இலங்கையில் ஒரு பெண் யானை 2 குட்டிகளை ஈன்றது. அதன் பிறகு தற்போதுதான் ஒரு யானை ஒரே பிரசவத்தில் 2 குட்டிகளை ஈன்றுள்ள சம்பவம் நடந்துள்ளது.

இதுகுறித்து பின்னவாலா யானைகள் முகாமின் தலைவர் ரேணுகா பண்டாரநாயகே கூறும்போது, “25 வயதான இந்த பெண் யானை நேற்று 2 குட்டிகளை ஈன்றுள்ளது. 2 குட்டிகளும் ஆரோக்கியமான நிலையில் உள்ளன.



▲ 2 குட்டிகளுடன் தாய் யானை சுராங்கி

வழக்கமான குட்டிகளை விட இந்த குட்டிகள் அளவில் சற்று சிறியதாக உள்ளன. இருப்பினும் அவை ஆரோக்கியமாக இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்தனர். மேலும் தாயுடன் அந்த குட்டிகள் விளையாடி வருகின்றன.

இந்த சுராங்கி யானை 2009-ல் முதன்முறையாக குட்டி ஈன்றது. அதன்பிறகு தற்போதுதான் குட்டியை ஈன்றுள்ளது. கரோனா வைரஸ் பெருந்தொற்று இருப்பதால் யானைகள் முகாமுக்கு சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்கவில்லை. சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்கும்போது இந்த குட்டிகள் பொதுமக்களுக்குக் காட்டப்படும்" என்றார். -ஏஎப்பி

---

## ஆகஸ்ட்டில் ரூ.1.12 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூல்

■ புதுடெல்லி

கரோனா ஊரடங்கு நடவடிக்கைகளால் தொழில்கள் பாதிக்கப்பட்டு வரி வசூலும் குறைந்தது. தொற்று பாதிப்பு குறைந்த நிலையில் ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் தொழில்கள் பழையபடி செயல்பட ஆரம்பித்து வரி வசூலும் கரோனாவுக்கு முந்தைய நிலைக்குத் திரும்பியது.

நடப்பாண்டின் ஜூன் மாதத்தில் கரோனா 2-ம் அலையால் ஜிஎஸ்டி வசூல் ரூ.1 லட்சம் கோடிக்கும் கீழ் குறைந்தது. ஆனால் ஜூலையில் மீண்டும் ரூ.1 லட்சம் கோடியைத் தாண்டியது. ஆகஸ்ட் மாதத்தில் ஜிஎஸ்டி வசூல் ரூ.1.12 லட்சம் கோடியாக உள்ளது. இதில் மத்திய ஜிஎஸ்டி ரூ.20,522 கோடியாகவும், மாநில ஜிஎஸ்டி ரூ.26,605 கோடியாகவும், ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி ரூ.56,247 கோடியாகவும் வசூல் ஆகியுள்ளது.

---

## தேசிய பணமாக்கல் திட்டம் மூலம்
# நாட்டின் சொத்துகள் விற்கப்படவில்லை குத்தகைக்குத்தான் விடப்படுகின்றன

● எதிர்க்கட்சிகளுக்கு மத்திய அரசு விளக்கம்

■ புதுடெல்லி

நாட்டின் முக்கியமான சொத்துகளை மத்திய அரசு தனியாருக்குத் தாரை வார்க்கிறது என்று மத்திய அரசின் தேசிய பணமாக்கல் திட்டத்தை எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டிவருகின்றன. இந்நிலையில், சொத்துகள் எதுவும் விற்கப்படவில்லை. குறிப்பிட்ட கால அளவில் குத்தகைக்குத்தான் விடப்படுகின்றன என்றும் மத்திய அரசு நேற்று விளக்கமளித்துள்ளது.

ஆகஸ்ட் 23-ம் தேதி மத்திய அரசு தேசிய பணமாக்கல் திட்டத்தை அறிவித்தது. அதன்படி, சாலைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், மின் உற்பத்தி மற்றும் விநியோகம், சுரங்கம், எரிவாயு குழாய் ஆகிய அரசின் சொத்துகள் தனியாருக்கு குத்தகைக்கு விடப்படவுள்ளன. இதன் மூலம் அடுத்த நான்கு ஆண்டுகளில் ரூ.6 லட்சம் கோடி நிதித் திரட்ட மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

### தொடங்கியதே காங்கிரஸ்தான்

மத்திய அரசின் இந்த அறிவிப்புக்கு அரசியல் கட்சிகள் உட்பட நாடு முழுவதும் பல்வேறு தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். ‘70 ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வந்த சொத்துகள் தனியாருக்கு தாரைவார்க்கப்படுகின்றன’ என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி விமர்சித்தார்.

இந்நிலையில், “சொத்துகள் எதுவும் விற்பனைக்கு அல்ல என்பது இந்தத் திட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவை, குறிப்பிட்ட கால அளவிலான குத்தகைக்குத்தான் விடப்படுகின்றன. குத்தகை காலகட்டம் முடிந்த பிறகு அந்தச் சொத்துகள் மீண்டும் அரசின் கைகளுக்கு வந்துவிடும்.

இந்த குத்தகை மூலம் கிடைக்கும் நிதி நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும். இது புதிய நடைமுறை இல்லை. காங்கிரஸ் காலத்திலும் இந்த நடைமுறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. டெல்லி மற்றும் மும்பை விமான நிலையங்களை தனியார்மயமாக்கும் திட்டத்துக்கு தொடக்கப்புள்ளி வைத்ததே காங்கிரஸ் கட்சிதான்” என்று மத்திய அரசு விளக்கமளித்து உள்ளது. -பிடிஐ

---

## டோக்கியோ பாராலிம்பிக்ஸ்
# பாட்மிண்டன் முதல் சுற்றில் பிரமோத் பகத் வெற்றி

■ டோக்கியோ

ஜப்பானின் டோக்கியோ நகரில் பாராலிம்பிக்ஸ் நடைபெற்று வருகிறது. இதன் 9வது நாளான நேற்று பாட்மிண்டனில் கலப்பு அணிகள் எஸ்எல் 3- எஸ்யு 5 பிரிவில் இந்தியாவின் பிரமோத் பகத், பாலக் கோலி ஜோடி தங்களது முதல் சுற்றில் பிரான்ஸின் லூகாஸ் மசூர் மற்றும் ஃபாஸ்டின் நோயல் ஜோடியை எதிர்த்து விளையாடியது. இதில் இந்திய ஜோடி 9-21, 21-15, 19-21 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தது.

10 மீட்டர் ஏர் ரைபிள் புரோன் எஸ்ஹெச் 1 கலப்பு பிரிவில் இந்தியாவின் சித்தார்த்தா பாபு, தீபக், அவனி லேகாரா ஜோடி இறுதி சுற்றுக்கு தகுதி பெறத் தவறியது. நீச்சலில் ஆடவருக்கான 100 மீட்டர் பிரீஸ்ட் ஸ்டிரோக் எஸ்பி 7 பிரிவில் இந்தியாவின் சுயாஷ் ஜாதவ் தகுதி நீக்கம் செய்யப் பட்டார்.

மகளிருக்கான பாட்மிண்டன் ஒற்றையரில் எஸ்யு 5 பிரிவில் இந்தியாவின் பாலக் கோலி தனது முதல் சுற்று ஆட்டத்தில் 4-21, 7-21 என்ற நேர் செட்டில் ஜப்பானின் அயோகா சுசுகியிடம் தோல்வியடைந்தார். மகளிருக்கான பாட்மிண்டன் ஒற்றையரில் எஸ்எல் 3 பிரிவு முதல் சுற்றில்



இந்தியாவின் பிரமோத் பகத், சகநாட்டைச் சேர்ந்த மனோஜ் சர்காரை எதிர்கொண்டார். இதில் பிரமோத் பகத் 21-10, 21-23 21-9 என்ற செட்டில் வெற்றி பெற்றார்.

ஆடவருக்கான கிளப் த்ரோ எஃப் 51 பிரிவில் ரஷ்யா பாராலிம்பிக் குழுவின் மூசா டைமசோவ் 35.42 மீட்டர் தூரம் எறிந்து தங்கப் பதக்கம் வென்றார். செர்பியாவின் ஜெல்ஜ்கோ டிமிட்ரிஜெவிக் 35.29 மீட்டர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கமும், சுலோவேக்கியாவின் மரியன் குரேஜா 30.66 மீட்டர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கமும் பெற்றனர். இந்திய வீரர்களான அமித் குமார் சரோகா (27.77 மீட்டர்), தரம்பீர் நைன் (25.59 மீட்டர்) முறையே 5-வது இடமும், 8-வது இடமும் பிடித்து ஏமாற்றம் அளித்தனர்.

---

## தொழில் வளர்ச்சிக்காக புதிய இணையதளம் தொடக்கம்
# காஷ்மீர் ரூ.50 ஆயிரம் கோடி முதலீட்டை ஈர்க்கும்

● மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நம்பிக்கை

■ புதுடெல்லி

ஜம்மு காஷ்மீரின் தொழில் வளர்ச்சிக்காக புதிய இணையதளத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்துள்ளார். பல்வேறு தொழில் நடவடிக்கைகள் மூலம் இம்மாநிலத்துக்கு ரூ.50 ஆயிரம் கோடி முதலீடுகள் வந்து சேரும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் தொழில் வாய்ப்புக்கான புதிய அத்தியாயம் தொடங்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே அதிகமான சாதக அம்சங்களைக் கொண்ட தொழில் கொள்கை தற்போது ஜம்மு காஷ்மீரில் மட்டுமே உள்ளது என்று காணொலி வாயிலாக இணையதளத்தைத் தொடங்கி வைத்தபோது அவர் குறிப்பிட்டார். புதிய இணையதளத்தைத் தொடங்கி வைத்து அவர் மேலும் கூறியதாவது:

சுற்றுலா, கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் புதிய தொழில் தொடங்குவதற்கு ஊக்க சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் உள்ளூரில் வேலை வாய்ப்பு அதிகரிக்கும், இத்துறை சார்ந்த பிற தொழில்களும் வளர்ச்சியடையும். இதன் மூலம் தொழில் புரிவதற்கேற்ற சூழல் இங்கு உருவாகும். இம்மாநிலத்தில் கடந்த காலங்களில் நிலவி வந்த அரசியல் அமைப்பு சட்டத்தின் 370 மற்றும் 35 ஏ ஆகிய பிரிவுகள் தொழில் வாய்ப்புகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்தன. இப்போது இவை நீக்கப்பட்டுவிட்டன. இதன் மூலம் 2019-ம் ஆண்டு ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி அளித்த உறுதிமொழி நிறைவேற்றப்பட்டுள்ளது

2015-ம் ஆண்டு ஸ்ரீநகரில் ரூ.80,068 கோடிக்கான சலுகை திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். ஒரே தேசம், ஒரே ரேஷன் அட்டை, உஜ்வாலா, டிபிடி, சௌபாக்யா உள்ளிட்ட மத்திய அரசு திட்டங்களும் ஜம்மு காஷ்மீரில் அமல்படுத்தப்பட்டன. 2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதிக்குள் அனைத்து வீடுகளுக்கும் சுத்தமான குடிநீர் விநியோகிக்கப்படும். இது பிரதம மந்திரி ஆயுஷ்மான் பாரத் யோஜனா திட்டம் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

ஜம்முவில் தற்போது சுற்றுலாப் பயணிகள் வரத்து எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த 70 ஆண்டுகளாக இங்குள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகளைக் கூட முந்தைய அரசுகள் செயல்படுத்தவில்லை. வீட்டு வசதி, கழிப்பறை, மின் விநியோகம் உள்ளிட்டவை கடந்த மூன்று ஆண்டுகளில் பிரதமர் மோடியால் செயல்படுத்தப்பட்டுள்ளது என்றார் அமித் ஷா.

இந்நிகழ்ச்சியில் ஜம்மு காஷ்மீர் மாநில துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியுஷ் கோயல், பிரதமர் அலுவலக இணை அமைச்சர் ஜிதேந்திர சிங், உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய், வர்த்தகத்துறை இணை அமைச்சர்கள் சோம் பிரகாஷ், அனுபிரியா படேல் மற்றும் காஷ்மீர் மூத்த அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வெளிப்படையான கொள்கை மற்றும் அதிக ஊக்க சலுகை உள்ளிட்ட காரணங்களால் அதிக முதலீடுகள் வர வாய்ப்புள்ளது என்று அமைச்சர் பியுஷ் கோயல் குறிப்பிட்டார். தொழில் தொடங்குவதற்கு பதிவு செய்தல், பரிசீலனை உள்ளிட்ட அனைத்துமே ஆன்லைன் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது. எவ்வித மனித குறுக்கீடும் கிடையாது என்றார்.

ஜம்மு காஷ்மீருக்கு மத்திய அரசு ஒதுக்கிய மொத்த நிதி ரூ.28,400 கோடியாகும். ஊக்க சலுகை, மூலதன சலுகை, மூலதன வட்டி தள்ளுபடி, ஜிஎஸ்டி சலுகை உள்ளிட்டவை இதில் அடங்கும். இதன் மூலம் புதிதாக 78 ஆயிரம் நேரடி வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. -பிடிஐ

---



▲ வெவ்வேறு வடிவ அப்பளங்கள்.

# எந்த வடிவில் இருந்தாலும் அப்பளத்துக்கு ஜிஎஸ்டி இல்லை

● மத்திய மறைமுக வரிகள் வாரியம் விளக்கம்

■ புதுடெல்லி

அப்பளங்கள் எந்த வடிவத்தில் இருந்தாலும் சரக்கு மற்றும் சேவை வரியில் (ஜிஎஸ்டி) இருந்து அவற்றுக்கு வரி விலக்கு உண்டு என மத்திய மறைமுக வரிகள் வாரியம் கூறியுள்ளது.

வட்ட வடிவ அப்பளங்களுக்கு ஜிஎஸ்டியில் வரி விலக்கு அளிக்கப்படுகிறது. ஆனால் சதுர வடிவ அப்பளங்களுக்கு வரி விலக்கு இல்லை. யாராவது நல்ல பட்டய கணக்காளர் இதில் உள்ள தர்க்கத்தைப் புரிய வைத்தால் நல்லது என்று ஆர்பிஜி என்டர்பிரைசஸ் நிறுவனத்தின் தலைவர் ஹர்ஷ் கோயங்கா ட்விட்டரில் பதிவிட்டுள்ளார். அவருடைய இந்தப் பதிவு சமூக வலைதளங்களில் பரவியது. இந்தத் தகவலை யார் தெரிவித்தது என்று கேட்டதற்கு நண்பர் ஒருவர் கூறியதாகக் கூறியிருந்தார். இந்நிலையில் இதற்கு மத்திய மறைமுக வரிகள் வாரியம் விளக்கம் அளித்துள்ளது.

அந்த விளக்கத்தில் கூறியிருப்பதாவது: ஜிஎஸ்டி சுற்றறிக்கை எண் 2/2017 சிடி(ஆர்) என்ற வழிகாட்டுதல் வரைவில் எண் 96ல் அப்பளங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதில் வடிவங்கள் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே அப்பளங்கள் எந்த வடிவத்தில் எந்த பெயரில் இருந்தாலும் அவற்றுக்கு ஜிஎஸ்டி இல்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper1). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup